# இளந்தென்றல்

# ILANTHENDRAL

## 1982 — 1983

தமிழ்ச் சங்கம்
கொழும்புப் பல்கலைக் கழகம்
கொழும்பு - 3

THE THAMIZH SANGHAM
UNIVERSITY OF COLOMBO
COLOMBO - 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT · OAD
NALLUR, · NA
No.

# அகதிகள் புனர் வாழ்வு நிதிக்கு உதவுங்கள்

தமிழ்ச் சங்கம்
கொழும்புப் பல்கலைக் கழகம்
கொழும்பு - 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No 112

# இளந்தென்றல்

# ILANTHENDRAL

## 1982 — 1983

இதழாசிரியர்கள் :

க. நாகேஸ்வரன் - மு. யோகநாதன்

## தமிழ்ச் சங்கம்
### கொழும்புப் பல்கலைக் கழகம்
கொழும்பு.

## THE THAMIZH SANGHAM
### UNIVERSITY OF COLOMBO
**COLOMBO - 3**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு மாநகரில் தேன் தமிழ்க் கீதம்
ஒலிக்கும் தமிழ்ச் சங்கத்திற்கு

எமது வாழ்த்துக்கள்

# திருமலகாந்த் சினிமா

திருகோணமலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

*****************

ஆயிரத்துத் தொளாயிரத்து
எண்பத்தி மூன்றின் ஆடித்திங்கள்
அறிவிலிகள் கொன்றொழித்த
அளவிலா எம் மக்களுக்கும்
வெலிக்கடைச் சிறையின் வெறி நாய்கள்
கொண்ட நரபலியில் உயிர் நீத்த
எங்கள் ஐம்பத்தி நான்கு
உத்தமச் செம்மல்களுக்கும்
இந் நூல் சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கம்

| | | | |
|---|---|---|---|
| காப்பாளர் | :- | பேராசிரியர் ச. முத்துலிங்கம் | |
| பெரும்பொருளாளர் | :- | கலாநிதி இ. பாலசுந்தரம் | |
| தலைவர் | :- | க. ஜெயந்தன் | மருத்துவபீடம் |
| துணைத்தலைவர் | :- | ஜஸ்ரிஸ் பீற்றர் | கலைப்பீடம் |
| செயலாளர் | :- | செ. தமிழரசன் | சட்டபீடம் |
| துணைச்செயலாளர் | :- | சிறிகிரிகேசன் | மருத்துவபீடம் |
| இளம்பொருளாளர் | :- | ம. அமலதாசன் | சட்டபீடம் |
| இதழாசிரியர்கள் | :- | க. நாகேஸ்வரன் | சட்டபீடம் |
| | | மு. யோகநாதன் | கலைப்பீடம் |
| செயற்குழுஉறுப்பினர் | :- | வ. கோபாலன் | மருத்துவபீடம் |
| | | க. விக்னேஸ்வரன் | மருத்துவபீடம் |
| | | ஆ. இராமநாதன் | மருத்துவபீடம் |
| | | M. S. M. ஜமீல் | சட்டபீடம் |
| | | E. இராஜசேகரம் | மருத்துவபீடம் |
| | | க. யாமினி | சட்டபீடம் |
| | | சி. சித்திராஞ்சனி | கலைப்பீடம் |
| | | சோ. செல்வி | சட்டபீடம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Message from the Vice - Chancellor*

The Magazine of the Tamil Society is one that encourages the young literary talents of our Tamil undergraduates. But at this time of rapid national development I would like to remind all our undergraduates that the pursuit and achievement of academic, literary, cultural and extra-mural interests alone does not make a complete, well balanced graduate in the end.

what is most important now in this period of our history is the ability to live in harmony with our fellow beings in our multi-racial, multi-religious society. Those who pass out of our institutions of higher learning must be able to break down " narrow domestic walls " and build bridges instead. It is only then, when peace and harmony prevail that true national development can be achieved in our country.

With my best wishes to you all.

*Prof. Stanley Wijesundera*
*Vice - Chancellor*

*30th May 1983.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Wishes

From

KRISHNA'S

GENERAL MERCHANTS AND COMMISSION AGENTS
DEALERS IN:
GROCERIES, HARDWARE, CEMENT, CYCLES, T. V. Etc.

STOCKISTS FOR:
MAHARAJAH ORGANISATION
(DISTRIBUTORS) LTD.
JAFFNA - VAVUNIYA - KILINOCHCHI

KRISHNA'S

MAIN ROAD, TELLIPPALAI.
BRANCH:
KANDY ROAD, KILINOCHCHI.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

# காப்பாளரின் ஆசிச்செய்தி

முத்தமிழ் இலக்கியங்களையும் தன்னகத்தே கொண்டு சங்கம் வளர்த்த தமிழை கடந்த அரை நூற்றாண்டு காலமாக கொழும்புப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் "இளந்தென்றல்" வாயிலாக நறுமணம் கமழச் செய்து வருவதனை இச்சந்தர்ப்பத்தில் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

எண்ணிக்கையில் சிறிதளவு மாணவர்கள் இருப்பினும் எண்ணத்தால் பெரிதாக எடுத்த காரியத்தை முடிப்போமென்ற நம்பிக்கையுடன் அவர்கள் வெளியிட முன்வந்த இளந்தென்றல் நறுமணம் கமழவும், கலைவிழா தமிழ் மாணவர்களிடம் மறைந்துள்ள கலைத்திறமைகளை வெளிக் கொள்ளும் வகையில் சிறப்பாக நடைபெறவும் வேண்டுமென்று வாழ்த்துக்கூறி ஆசீர்வதிப்பதில் பெருமையும் மகிழ்வும் அடைகிறேன்.

கல்விப்பீடம்
கொழும்புப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர்
ச. முத்துலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS



From

ASBESTOS
CEMENT INDUSTRIES LTD.

Colombo - Ratmalana - Evinai


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச் சங்க ஏடான "இளந்தென்றல்" வழமைபோல் இவ்வாண்டும் பொலிவுடன் வெளிவருவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். விரிவுரையாளர்களினதும், பட்டதாரி மாணவர்களினதும் கட்டுரைகள், இலக்கிய ஆக்கங்கள் என்பவற்றேடு அகில இலங்கை ரீதியாக நடாத்தப் பெற்ற சிறுகதைப் போட்டியிற் பரிசு பெற்ற சிறுகதைகளும் இம் மலரில் இடம்பெற்றிருத்தல் சிறப்பம்சமாகும்.

தமிழ் மாணவர்கள் குறைந்த எண்ணிக்கையுடையோராக இருந்தும் கலை, இலக்கிய பாரம் பரியத்தையும், தமிழ்ச்சங்கத்தின் நிலைபேற்றையும் கருத்திற் கொண்டு இம் மன்றத்தினர் இம்மலரைத் தமிழ் அன்னையின் கரத்தில் தவழவிட்டிருக்கிருர்கள். அவர்களது முயற்சி பாராட்டப்படவேண்டியதாகும்.

இம்மலர் மாணவர் சமுதாயத்திற்குக்கலை, இலக்கியப்பண்பாட்டு உணர்ச்சிகளை ஊட்டுவதாக அமையும் என்பது எனது நம்பிக்கை.

இ. பாலசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS

OF

MR. V. RATNAM

Civil Engineer & Contractor

Kirishna Vihar

K. K. S. ROAD, TELLIPPALAI.

T. Phone 337 Ckm.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் மொழிகின்றார்

கொழும்புப் பல்கலைக்கழகம் தனது பாதையில் 56வது ஆண்டுமலராக "இளந்தென்றல்" மலரினை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றது. இம் மலர் பல்கலைக்கழக விரிவுரையாளர்களினதும், கழக மாணவர்களினதும் படைப்புக்களை கொண்டதாக அமையப் பெற்றுள்ளது. தமிழ் மக்கள் அரசியல், பொருளாதார சமூக இடர்பாடுகளுக்குள் சிக்குண்டு காணப்படும் இருள்சூழ்ந்த காலகட்டம் இது. இளைஞர்களாகிய நாம் எமது இருள்மயமான எதிர்காலத்தை வெறியோடு எதிர்நோக்க வேண்டிஉள்ளது. இச்சூழ்நிலையிலும் எமது தமிழ்ச் சங்கம் ஓரளவு சிறப்புடன் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

காலம் கடந்து அமைக்கப்பட்ட எமது செயற்குழுவானது அதன் காலம் குறுகியதாக இருந்ததுடன் மட்டுமல்லாது அக் காலகட்டத்தில் எத்தனையோ இன்னல்களை எதிர்நோக்கவேண்டிஉள்ளது. இரண்டு தவணைகளையே கொண்ட எமது பதவிக்காலத்தில் ஒருதவணை மாணவர்களின் பகிஷ்கரிப்பு போராட்டம் காரணமாக திட்டமிட்டிருந்த எத்தனையோ முயற்சிகளை கைவிடவேண்டியதாயிற்று. எமது பரீட்சையுடன் கூடிய 3ம் தவணையிலாவது ஓரளவு சிறப்பாக இயங்குவோம் என்ற எண்ணத்துடன் திட்டங்கள் தீட்டிக்கொண்டிருந்தோம் அதன் ஒரு கட்டமாக அனைத்து பல்கலைக்கழக மாணவரின் ஆதரவுடன் ஒருநாடகவிழாவை நடத்த திட்டமிட்டு இருந்தோம். இவ்வேளையில் தான் இலங்கைப் பல்கலைக்கழக மாணவரின்வரலாற்றிலேயே கறைபடக்கூடிய நிகழ்சிகள் நடந்தன. பேராதனை பல்கலைக்கழகத்தில் தமிழ்மாணவர்கள் சகமாணவர்களினால் மிருகத்தனமாக தாக்கப்பட்டனர். அதைத்தொடர்ந்து அவர்கள்அனைவரும் பல்கலைக்கழகங்களைவிட்டுவெளியேறவேண்டியதாயிற்று குறுகிய காலத்துக்குள்ளாக கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவபீடதமிழ் மாணவர்கள் சகமாணவர்களினால் விடுதியிலிருந்து துரத்தியடிக்கப்பட்டனர். அத்துடன் சிறிதுகாலத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் தமிழ் மக்கள் மீது வெறித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. மொரட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் காடையர்களால் தாக்கப்பட்டனர். இத்தொடர் நிகழ்ச்சிகளால் நாம் திட்டமிட்டு இருந்த அனைத்து பல்கலைக்கழக நாடக விழாவை ஒத்திப் போட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளோம். எனினும் நாம் தொடர்ந்து எடுத்த முயற்சிகளின் விளைவாக இம்மலரை இத்தவணையிலேயே வெளியிடக்கூடியதாயிற்று. இலங்கையில் கல்வியிலே மிக உயர்ந்த இடத்தில் இருக்கும் பல்கலைக்கழகங்களில் இப்படியான இனரீதியான காடைத்தனங்கள் நடைபெற்றது வெட்கப்பட வேண்டிய ஒன்றாகும். இது தாக்கப்பட்டோரின் இலட்சியங்களின் உறுதியை மேலும் பலப்படுத்துமேயன்றி பலவீனப்படுத்த மாட்டாது என்பது நிச்சயம்.

தமிழ்ச்சங்க வரலாற்றிலேயே இவ்வாண்டு மிகவும் துயர்மிகுந்ததாகும். தமிழ் மக்களை கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இருந்து அகற்றும் கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையின் தொடராக இவ்வளவு காலமும் தமிழ்ச்சங்க வளர்ச்சியில் பெரும் பங்கேற்ற கலைப்பீடம் இவ்வருடத்துடன் மூடப்படுகிறது. எனினும் இறுதித் தமிழன் இங்கு இருக்கும் வரை அவன் தமிழ்ச்சங்க மூலம் தனது உணர்ச்சி களை வெளிக்காட்டுவான் என்பது நிச்சயம்.

இறுதியாக எமக்கு ஆதரவு நல்கிய அனைத்து நல்லிதயங்களுக்கும் நன்றிகூறுவதுடன் தமிழ் மக்களின் இலட்சியக் கனவுகள் வெகுவிரைவில் நனவாக மாறும் என்ற நம்பிக்கையுடன் விடை பெறுகிறேன்.

வாழ்க தமிழ்!

வெல்க தமிழர் இலட்சியங்கள்!!

**கண்ணப்பர் ஜெயகாந்தன்.**
*தலைவர்*

---

★ "இலக்கியமென்பது ஒரு நாட்டின் அரசியல், பொருளாதார, சமூக வளர்ச்சியை ஒட்டி அந்நாட்டின் தேவைகளைத் துரிதப்படுத்தும் ஒரு சாதனம்"

-என். கே. ரகுநாதன்

★ ★ ★ ★ ★

★ "தேவைக்கதிகமாகச் செல்வம் படைத்தவன் அதைத் தன் வாழ்நாளிலேயே சமூகத் தின் நன்மைக்காகப் பயன்படுத்துவதைப் புனிதமான கடமையாகவும், பொறுப்பாகவும் கொள்ளல் வேண்டும்"

- அண்ட்ரு கார்னிஜி

★ ★ ★ ★

★ "காதல் என்பது கானல் நீர். பைத்தியம் பிடித்த மான்கள் அதன் பின்னே ஓடி வயிறு வீங்கிச் சாகின்றன"

- காண்டேகர்

★ ★ ★ ★ ★

★ போராட்ட முறைகளும், ஆயுதங்களும், வடிவங்களும் சூழ்நிலைகளுக்கொப்ப வெவ்வேறு திணுசாக மாறுபவை அத்தகைய போராட்ட ஆயுத சாதனங்களில் கலை இலக்கியங் களும் பெரும் போர்க் கருவிகளாகலாம்.

எஸ். அகஸ்தியர்

★ ★ ★ ★ ★

★ சமூகம் விசித்திரமான வேதனைக் கூண்டு. அதில் ஏழைகள் கைதியாகின்றார்கள். இவர்களை விசாரிக்கவும், தண்டிக்கவும் பணம் நீதிபதியாகின்றது.

★ ★ ★ ★ ★

★ பணக்காரர்களிடமுள்ள பணம் என்றால் ஏழைகள் வடித்த வேர்வையாகும்.

★ ★ ★ ★ ★

★ ஒடுக்கப்படும் தேசங்களின் பாட்டாளிகளுக்கும், ஒடுக்கும் தேசங்களின் பாட்டாளிகளுக்கும் இடையிலான ஒற்றுமைக்காக ஒடுக்கப்படும் தேசங்களின் பொதுவுடமை வாதிகள் போராட வேண்டும். அத்தகைய ஒற்றுமை இல்லா விட்டால் ஒரு சுதந்திரமான பாட் டாளி வர்க்க செயல் கொள்கையை நிலை நிறுத்த முடியாமல் போகும்; பொது எதி ரியைத் தோற்கடிக்க முடியாமற் போகும்; தேசங்களின் சுயநிர்ணய உரிமையை எய்த முடியாமற் போகும்.

— லெனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர் இதயத்தில் இருந்து

கொழும்புப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் 56 வது தடவையாக 'இளந் தென்றல்' மலரினை இன்று வெளியிடுகின்றது. இன்றைய காலகட்டம் எங்கள் தமிழ்ச்சங்கத்தின் வளர்ச்சிப்பாதையில் ஓர் இருள் சூழ்ந்த காலமாக அமைந்துவிட்டது. எங்கள் செயற்குழுவின் காலப்பகுதி மிகக் குறுகியதாய் காணப்பட்டதுடன் இக்காலகட்டத்தில் நாட்டில் பரவலாக நடைபெற்ற கலவரங்களும், படுகொலைகளும் நாம் சிந்தித்திருந்த எத்தனையோ செயற் திட்டங்களை நிறைவு செய்ய முடியாதவாறு செத்திக்குள் தள்ளிவிட்டன. இம் மலர்கூட எத்தனையோ இடர்பாடுகளின் மத்தியில் இன்று உங்கள் முன் மணக்கிறது. மலர் வெளியீட்டிற்காக விளம்பர மூலம் நிதியுதவி செய்ய முன்வந்த எத்தனையோ வியாபார நிலையங்கள் தீக்கிரையாக்கப்பட்டும், கொள்ளையிடப்பட்டும் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. அவர்களுக்காக நாம் மிகவும் வருந்துகிறோம். அதேவேளை நாம் மலர் வெளியீட்டிற்காக எதிர் பார்த்த நிதி கிடைக்காமை எங்களை மேலும் நெருக்கடிக் குள்ளாக்கி யுள்ளது.

எங்கள் பல்கலைக்கழக தமிழ் மாணவர்களின் பரீட்சைக் காலத்தில் நாட்டில் கலவரங்கள் ஏற்பட்டமையால் மாணவர்கள் பலவாறுகப் பாதிக் கப்பட்டுள்ளனர். ஒருபகுதி மாணவர்கள் சில பாடங்கள் எழுதி முடித்த நிலையிலும், ஒருபகுதி மாணவர்கள் பரீட்சைக்குத் தயாரான நிலையிலும் தங்கள் பாடப்புத்தகங்களையும், குறிப்புகளையும் இழந்ததுடன் தங்கள் உட மைகளை இழந்தும், சில மாணவர்கள் படுகாயமடைந்தும் மன ஊறுபாட் டுடன் அகதிகளாக தங்கள் ஊர்களுக்குச் சென்றபோதிலும், அனைத்துத் தமிழ் மாணவர்களின் ஒன்றுபட்ட உறுதியாலும், விடா முயற்சியாலும் இன்று இந் நூலினை வெளியிட முடிந்தது. இதுபோன்ற மாணவத் தோழர்கள் ஒன்றிணைந்து உள்ளவரை 'இளந் தென்றல்' மலர் ஆண்டு தோறும் தொடர்ந்து மணம் கமழும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

செ. தமிழரசன்
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் எண்ணங்கள்......

இளந்தென்றல் உங்கள் முன் புதுமணம் வீசி உலாவருகின்ற வேளையில் நாம் அதிகம் கூறி உங்கள் சுவைப்பை தாமதப் படுத்தக் கூடாது. ஆயினும் சில விடயங்களை நாம் கூருமல் இருக்கவும் முடியாது. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தளிர்த்து வளர்ந்து விருட்சமாகி இருந்த தமிழ் இன்று தனது விழுதுகள் ஒவ்வொன்றும் அறுக்கப்பட்டு, தான் ஓரிரு விழுதுகளிலேயே நிற்க வேண்டியதை உணர்ந்துள்ள இக் காலகட்டத்தினை நாம் மிக உன்னிப்பாக நோக்க வேண்டியவராக உள்ளோம்.

எமது இனம், சமூகம், அரசியல், பொருளாதாரப் பிரச்சனையில் புயலில் அகப்பட்ட சருகுபோல அலைக்கழிக்கப்படுகின்ற இவ்வேளையில் சமூக விழிப்புணர்வைக் கொடுக்கக்கூடிய சிறிய எண்ணங்களைக்கூட வெளிப்படுத்த முடியாத அளவுக்கு நாம் கட்டுப் படுத்தப்பட்டோம். பலவற்றை சாதிக்க நினைத்த எமக்கு பரீட்சைபழுவும், சிலதவிர்க்க முடியாத இடர்ப்பாடுகளும் அவற்றை நிறைவு செய்யவிடாது தடுத்துவிட்டன. எனினும் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் தமிழன் இருக்கின்ருன் என்பதை உணர்த்தவாவது இளந்தென்றலை வெளியிட அரும்பாடு பட்டோம். கொழும்பில் பல்கலைக்கழகம் உள்ளவரை இளந்தென்றல் வீச உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும், ஆசியையும் வேண்டி நிற்கின்ருேம்.

நன்றி

இணை இதழாசிரியர்கள்
க. நாகேஸ்வரன்
மு. யோகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Take away parcels available.**

**Also,**

**We undertake special orders**

**For**

**Weddings and other occations.**

# HAIG BEACH HOTEL

# &

# RESTAURANT

Telephone : **580190**

**NO. 54, HAIG ROAD, BAMBALAPITIYA,**

**COLOMBO - 4**

SRI LANKA.

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No...............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With Best Compliments**

From

# NEW MALLIKA STORES

*Dealers in Groceries, Oilman, Fancy goods, Frozen foods Etc.*

No - 28. D. S. SENANAYAKE MAWATHE

**BORELLA COLOMBO - 8**

*BRANCH* :

## NEW LANKA STORES

30, 32. D. S. SENANAYAKE MAWATAE

**BORELLA COLOMBO - 8**

**For Speedy Clearence of Import Cargo**

**Please Contact**

# PRIYAA
# TRADING COMPANY

**61/12 GINTUPITIYA STREET**

**COLMBO 13**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With Best Compliments**

FROM

## Hameed's Clearing Agency

CI - 40 / 194 ARMOUR STREET

*FLATS*

**COLOMBO - 12**

T. Phone: **548020**

**WITH BEST COMPLIMENTS**

**FROM**

## A. H. A. MAJEED & SONS

CLEARING & TRANSPORT

( CUSTOMS HOUSE AGENT )

T. Phone: **36020**

Office:

**116/D2 PRINCE STREET**

COLOMBO *11*

Residence:

**108, WILSON STREET**

COLOMBO *12*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸீஹைந்தேச அறுசுவை உணவின் ஆனந்த வாஷம்

ருசியான இந்திய தயாரிப்பு

புதிய இந்திய உணவு தாயாரிப்பாளர்களின் கைவண்ணத்தில்
இந்திய சமையற் கலையில் உன்னதமான தேர்ச்சியுள்ள
சமையல்க் காரர்களின் சேவை!

# சாந்தி விஹாரில்

குளிரூட்டப்பட்ட சீத்தல் என்னும் சொகுசுமிக்க தனிப்பகுதியிலும்
மற்றும் சிற்றுண்டிச்சாலையிலும் அதி நவீன வகை உணவுப்
பட்டியலில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

## இந்தியத் தயாரிப்பு முறைப்படி தயாரிக்கப்பட்ட விசேட வகைகள்

★ சாரபட்டுரா ★ பன்னீர் பட்டர் மசாலா

★ பாவ்பாஜி ★ நக்றிஸ் கொப்ரா

★ தற்தூரி நான் ★ ரொட்டி

★ பருத்தா ★ பட்டுரா

சாந்தி விஹார் உணவு வகைகள் உடலுக்கு
மட்டுமன்றி உள்ளத்திற்கும் நிறைவூட்டும்

3, ஹவ்லொக் வீதி கொழும்பு - 5

தொலைபேசி **580224**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


அடிப்படை உரிமைகளும் அரசியலமைப்பும் 1
தீ மூட்டுங்கள் 9
சந்தனக் கட்டை 11
சிறுவர்கல்வியும் - நூலகங்களும் 21
புரிகிறதா 27
மனிதஉரிமைகள் பாடம் மாணவர்க்குக் கட்டாயமாகிடுமா? 29
பாதை மாறிப் போகும் போது 33
இலங்கையில் கணனி ஒரு கண்ணோட்டம் 39
ஒரு மீனவனின் உள்ளம் 43
சந்தைப்படுத்தும் முகாமை 48
உலகின் புதிய ஆட்கொல்லி நோய் 53
சாதிப்பாகுபாடு சமூகத்தின் சீர்கேடு 57
பாரதி ஒரு விடுதலைப் போராளி 59
சங்கமம்
இதயமலர்
வேள்வித் தீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை உரிமைகளும் அரசியலமைப்பும்

நா. செல்வக்குமாரன், LL. B. ( Hons ), LL. M.
சட்டத்தரணி, உதவி விரிவுரையாளர், சட்டபீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்.

அடிப்படை உரிமைகளை மனிதகுலத்தின் உள்ளார்ந்த, மாற்றிக் கொடுக்கப்பட முடியாத உரிமைகள் எனக் கொள்ளலாம். இவை தொடர்பில் பல மெய்யியலாளர் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். அடிப்படை உரிமைகளின் தோற்றம் தொடர்பாகவும், தன்மை தொடர்பாகவும் பல கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை இயற்கைச் சட்டத்துடன் தொடர்பு படுத்தி, ஒவ்வொரு அடிப்படை உரிமையும் மனிதனில் உள்ளார்ந்ததெனவும், அத்தகைய உரிமையானது 'அரசு' உருவாவதற்கு முன்பே மனித குலம் ஆரம்பமாகியபோதே அவனிடமிருந்ததெனவும் கூறுவோர்உளர். இன்னொரு சாரார், 'சுயமட்டுப்படுத்தல்' எனும் கொள்கையை முன் வைக்கின்றனர். இக்கொள்கையை ஆதரிப்போர், அரசிடமே இறைமை அனைத்தும் தங்கியுள்ளது எனவும், ஆனுல் சில சூழ் நிலைகளில் அரசு அதனது தற்றுணிபில் சில உரிமைகளைப் பிரசைகளுக்கு வழங்குகின்றது எனவும், இவையே அடிப்படை உரிமைகளாகுமெனவும் வாதிடுகின்றனர். வேறொருசாராரின் கருத்துப்படி, மக்கள் அரசாங்கமெனும் கருவிக்கு தமது உரிமைகளைக் கையளிக்கின்றபோது அவர்களால் தமக்கென ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் உரிமைகளே அடிப்படை உரிமைகளாகும். எது எவ்வாறெனினும், இன்றைய காலகட்டத்தில், பல்வேறு நாடுகளிலும் ஆட்சியாளர்களால் மனித குலத்தின் அடிப்படை உரிமைகள் அத்துமீறல் செய்யப்படுவதனுல் அத்தகைய அத்துமீறல்களுக்கு எதிராக உத்தரவாதஞ் செய்வதற்காக அடிப்படை உரிமைகள் எனப்பல உரிமைகள் அரசியலமைப்புகளில் குறிப்பீடு செய்யப்படுவதைக் காணலாம்.

1978ம் ஆண்டின் அரசியலமைப்பை உருவாக்கியோர், ஜனநாயகச் சோசலிசக் குடியரசாக இலங்கையைப் பிரகடனப்படுத்துகையில் 'எல்லா மக்களுக்கும் சுதந்திரம், சமத்துவம், நீதி, அடிப்படை மனித உரிமைகள்' என்பவற்றை உத்தரவாதஞ்செய்ய எண்ணம் கொண்டிருந்தனர் என்பதை அரசியலமைப்பின் பாயிரம் தெளிவுபடுத்துகின்றது. மேலும், மக்களுக்குரியதாகவும் பராதீனப்படுத்த முடியாததாகவும் விளங்கும் மக்களின் இறைமையானது ஆட்சித்தத்துவங்கள், வாக்குரிமை என்பவற்றுடன் அடிப்படை உரிமைகளையும் உள்ளடக்குமென அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உறுப்புரை 3) இதிலிருந்து அடிப்படை உரிமைகளானவை மக்களுக்கு உரியனவாகவும், அவர்களால் பராதீனப்படுத்த முடியாதனவையாகவும் விளங்குகின்றன எனலாம். மக்கள் இறைமையின் ஓர்அம்சமான அடிப்படை உரிமைகள் அனுபவிக்கப்படுகின்ற விதம் பற்றிக் குறிப்பிடுகையில், அரசியலமைப்பினுல் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்ற அடிப்படை உரிமைகள் அரசாங்கத்தின் எல்லா உறுப்புக்களாலும் போற்றப்படவும், பேணப்படவும், ஏற்றமளிக்கப்படவும் வேண்டுமெனவும், அவை அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டது போலத்தவிர வேறுவகையில் சிறுக்கப்படுதலோ, மட்டுப்படுத்தப்படுதலோ, மறுக்கப்படுதலோ ஆகாது எனவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உறுப்புரை 4) எனின், ஜனநாயகத்தின் அடித்தளமெனவும் தனியாட் சுதந்திரத்தின் அச்சாணி எனவும் வருணிக்கப்படுகின்ற 'அடிப்படை உரிமைகள்' எனும் சொற்பிரயோகம் மனிதகுலத்தின் எல்லா உறுப்பினர்களினதும் சமனுனதும் பராதீனப்படுத்த முடியாததுமான சகல உரிமைகளையும் குறிக்குமெனினும், இலங்கை அரசாங்கத்தின் எல்லா உறுப்புகளாலும் போற்றி, பேணப்பட்டு, ஏற்றமளிக்கப்பட வேண்டிய அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பின் மூன்றும் அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளவற்றை மாத்திரம் உள்ளடக்குமென்பது உணரப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பிலிருக்கும் அரசியலமைப்பின் மூன்றும் அத்தியாயம் அடிப்படை உரிமைகள் பலவற்றை எடுத்துரைக்கத் தவறவில்லை. குறிப்பாக, பின்வருவன அடிப்படை உரிமைகளாகவும், சுதந்திரங்களாகவும் இவ்வத்தியாயத்தில் இடம்பெறுவதைக் காணலாம். சிந்தனை செய்வதற்கான சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம், மதச் சுதந்திரம், சித்திரவதைக்குள்ளாகாமல் இருப்பதற்கான சுதந்திரம், இனம், மதம், மொழி, சாதி, பால் இன்னோரன்ன காரணங்களுக்காக ஒரங்காட்டப்படலாகாது எனும் சமத்துவத்துக்கான உரிமை எத்தேச்சையாகக் கைது செய்யப்படாமல், தடுத்துவைக்கப்படாமல், தண்டிக்கப்படாமல் இருப்பதற்கான சுதந்திரம், பேசுவதற்கான, ஒன்று கூடுவதற்கான, ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரம், சொந்த மொழியைப் பயன்படுத்துவதற்கான, சொந்தக் கலாச்சாரத்தை அனுபவிப்பதற்கான சுதந்திரம், தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கான சுதந்திரம், நடமாடுவதற்கான சுதந்திரம்.

மேற்கூறிய அடிப்படை உரிமைகள் தொடர்பில் அரசியலமைப்பானது பிரசையில்லாத மனிதன் ஒருவனுக்கும் பிரசைக்கும் இடையில் வேறுபாடு காட்டுகின்றது. ஏனெனில் இவற்றுள் சில அடிப்படை உரிமைகளானவை ஆள் ஒவ்வொருவருக்கும் உரித்தாக்கப்பட்டுள்ள அதே வேளையில், சில நாட்டின் பிரசைகளுக்கு மாத்திரமே உரித்தாக்கப்பட்டுள்ளன. இனம், மதம், மொழி, சாதி, பால் இன்னோரன்ன காரணத்திற்காக ஒரங்காட்டப்படுதலுக்கெதிரான உரிமையானது பிரசையொருவனுல் மட்டும் அனுபவிக்கப்படலாம். அதுபோலவே, பேசுவதற்கான, ஒன்று கூடுவதற்கான, ஒருங்கு சேர்வதற்கான, சொந்த மொழியைப் பயன்படுத்துவதற்கான, சொந்தக் கலாச்சாரத்தை அனுபவிப்பதற்கான, தொழில் முயற்ச்சியில் ஈடுபடுவதற்கான சுதந்திரங்கள் யாவும் பிரசை தொடர்பில் மாத்திரம் ஏற்புடைத்தாகும். எனின், ஈற்றில் சொல்லப்பட்ட சுதந்திரங்கள், வேறு நாட்டுப் பிரசையில்லாதவராகவும், இவ்வரசியலமைப்பு தொடங்குவதற்கு நேர் முன்னர் இலங்கையில் நிரந்தரமாக வதிவிலிருந்தவருமான ஆளொருவருக்கும் அரசியலமைப்புத் தொடங்கியதிலிருந்து பத்து ஆண்டுகளுக்கு ஏற்புடைத்தாகுமென விதிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 10ம் உறுப்புரையின்படி, ஆளொவ்வொருவரும் தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை மேற்கொள்ளுவதற்கான சுதந்திரத்தைக் கொண்டுள்ளார். எனின், இவர்கள் தமது மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ வெளிக்காட்டுவதற்கான உரிமை பெற்றுள்ளனர் எனப் பெருமிதங் கொள்ள முடியாது. ஏனெனில், உறுப்புரை 14 (1), (2) இன் பயனுக, தனியாக, அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து, பகிரங்கமாகவேனும், அந்தரங்கமாகவேனும் தனது மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ வழிபாட்டிலும், அனுசரிப்பிலும், சாதனையிலும் போதனையிலும் வெளிக் காட்டுவதற்கான சுதந்திரம் ஒரு பிரசைக்கே உரித்தாக்கப்பட்டுள்ளது. எனவே, இலங்கைப் பிரசைகளல்லாதோர் தாம் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை பின்பற்றலாமேயன்றி அவற்றைப் பகிரங்கமாகவேனும், அந்தரங்கமாகவேனும் வெளிக்காட்டுவதைத் தடை செய்வதற்கெதிராக அரசியலமைப்பு ரீதியான பாதுகாப்பை பெற்றிலர் என்பது தெளிவு.

மக்களின் இறைமை பிரயோகிக்கப்படும் விதம் பற்றிக் குறிப்பிடும் நான்காம் உறுப்புரையை வாசிக்கையில், அரசியலமைப்பில் எடுத்துக் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் அவற்றின் அனுபவிப்பில் முற்றுனவையல்ல எனும் உண்மை புலப்படும். கூறப்பட்ட அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையிலும் அளவுக்கும் அமையச் சுருக்கப்படலாம், மட்டுப்படுத்தப்படலாம். அன்றேல் மறுக்கப்படலாமென விதிக்கப்படுகின்றது. இதற்குச் செயற்பாடு வழங்குவதாக, அடிப்படை உரிமைகளை எடுத்துரைக்கின்ற அத்தியாயத்திலே அவ்வுரிமைகள் மீதான மட்டுப்பாடுகளை எடுத்துக் கூறுகின்றதான பதினைந்தாம் உறுப்புரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் பெறுகின்றது. இவ்வுறுப்புரை பல் வேறு காரணங்களின் மீது பலவிதமான அடிப்படை உரிமைகள் மட்டுப்படுத்தப்படலாமென ஏற்பாடு செய்கின்றது. இதன் படி, தேசிய பாதுகாப்பின் நலன் என்ற ஏதுவின் மீது நாட்டின் குற்றவியல் முறைமையில் இழையோடியிருக்கின்றதும், அடிப்படை உரிமையொன்ருக எடுத்துரைக்கப் பட்டுள்ளதுமான குற்றமற்ற தன்மையெனும் ஊகத்திஞல் பெறப்படும் உத்தரவாதமும், பின்னேக்கிச் செயற்படும் தண்டச் சட்டத்துக்கெதிரான அடிப்படை உரிமையும் சட்டத்திஞல் மட்டுப்படுத்தப்படலாம்.

பிரசை யொருவரின் பேசுவதற்கான அல்லது கருத்துத்தெரிவித்தற்கான அடிப்படை உரிமைகளின் பிரயோகமானது இனச் சமூக வாழ்வின் மதச் சமூக வாழ்வின் நலம் கருதி அல்லது பாராளுமன்றச் சிறப்புரிமை, நீதிமன்ற அவமதிப்பு, மான நட்டம் அல்லது தவறு புரியத் தூண்டுதல் என்பவை தொடர்பான சட்டத்திலான மட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவையாகும். இனச்சமூக வாழ்வின் மதச்சமூக வாழ்வின் நலன் கருதி, அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கான சுதந்திரமும் ஒருங்கு சேர்வதற்கான சுதந்திரமும் மட்டுப்படுத்தப் படலாம்.

தேசிய பொருளாதார நலன் என்ற ஏதுவின் மீது சட்ட முறையான ஜீவனேபாயத்தில் ஈடுபடுவதற்கான சுதந்திரமும் நாட்டில் தடையின்றி நடமாடுவதற்கும் விரும்பும் இடத்தில் வசிப்பதற்குமான சுதந்திரமும் சட்டத்திஞல் விதிக்கப்படும். அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தவையே. இப்பந்தியில் ஏற்கனவே கூறப்பட்டுள்ள உரிமைகள், மதத்தை அல்லது நம்பிக்கையை வெளிக்காட்டுவதற்கான சுதந்திரம், சொந்தகலாச்சாரத்தை அனுபவிப்பதற்கும் சொந்த மொழியை பயன்படுத்துவற்குமான உரிமை, நாட்டுக்கு மீளவருவதற்கான உரிமை, சமத்துவத்திற்கான உரிமை, ஏதேச்சையாகக் கைது செய்யப்படாமலும் தடுத்துவைக்கப்படாமலும் இருப்பதற்கான உரிமை என்பவற்றின் பிரயோகமும் செயற்பாடும் பின்வரும் ஏதுக்களின் மீது சட்டத்திஞல் கட்டுப்படுத்தக் கூடியவையாகும்.

(1) தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு பொதுமக்கள் சுகாதாரத்தை அல்லது ஒழுக்கத்தைப் பாதுகாத்தல் என்பவற்றின்நலன்கருதி; (2) மற்றவர்களின் உரிமைகளுக்கும் சுதந்திரத்திற்கும் முறையாக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துக்காக; அல்லது (3) ஜனநாயக சமூகத்தின் பொதுச் சேமநலத்தின் நீதியான தேவைப்பாடுகளை ஈடுசெய்யும் நோக்கத்துக்காக. இங்கு ஈற்றில் தரப்பட்டுள்ள காரணங்கள் குறிப்பாக ''ஜனநாயக சமூகத்தின் பொதுச்சேமநலத்தின் நீதியான தேவைகளை ஈடு செய்யும் நோக்கத்திற்காக'' என்பது தெளிவாகவரைவு செய்யப்படக்கூடியதல்ல. இவற்றுக்காக அடிப்படைஉரிமைகள்மட்டுப் படுத்தப்படலாமென ஏற்பாடு செய்வது ஏதுக்களைப் பொதுத் தன்மைப் படுத்துவதாக, பரந்த தாக்குவதாக, தெளிவற்ற தாக்குவதாக, அமைவதஞல் உரிமைகளின் உத்தர வாதம் உறுதி கெட்டுப் போகலாம்.

எந்தவொரு நாட்டிலும் மனிதனின் அடிப்படைஉரிமைகள் யாவும் பூரணமாகத் துய்க்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கமுடியாது. அத்துடன் மனிதனின் அடிப்படை உரிமைகள் சுதந்திரங்கள் என்றவுடன் அது கட்டுப்பாடற்ற காட்டுக் கழுதையின் சுதந்திரத்தையொக்குமெனப் பொருள் படலுமாகாது. தனிமனிதனின் அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் நாட்டின் பொது நலனுக்கெதிராக வழிவிட்டுக் கொடுக்க வேண்டுமென்பது மறுக்கப்பட முடியாததாகும். எனில், இவ்விரண்டுக்குமிடையில் சமநிலையைக் காணுகின்ற கடின வேலையைச் செவ்வனே செய்வதே அரசியலமைப்பை ஆக்குவோரின் தலையாய பணியாகும். ஒருபுறம் சமூக நலனுக்கும் தேசிய முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கின்ற வேளையில் மறுபுறம் மனிதனின் இயற்கையான உரிமைகளும் சுதந்திரங்களும் மதிக்கப்படுதலும் வேண்டும்; மறுக்கப் படலாகாது. அரசியலமைப்பை வகுத்தமைப்போர், அடிப்படை உரிமைகளை உத்தரவாதஞ் செய்வதற்காக ஸ்திரமான ஏற்பாடுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்குகையில், நாட்டின் தேசிய முன்னேற்
றத்திற்காக வரைவு செய்யப்படக் கூடிய
ஏதுக்கள் மீது சில சுதந்திரங்களை மட்டுப்
படுத்துகின்ற சட்டங்களைப் பாராளுமன்றம்
ஆக்குவதற்கு இயலச் செய்கின்றதான
நெகிழ்ச்சித் தன்மையையும் கடைப்பிடிக்கத்
தவறலாகாது. சிலரின் அபிப்பிராயப்படி
சட்டமாக்கற் சபையின் மீதான சட்ட
முறைக் கட்டுப்பாடுகளாகவன்றி ஒழுக்கக்
கோட்பாடுகளைக் கூறுபவையாக அடிப்
படை உரிமைகள் அரசியலமைப்பில் இடம்
பெற வேண்டும் என்பதாகும். எனின்
இன்றைய காலகட்டத்தில். இவ்வுரிமைகளை
அரசியலமைப்பில் இடம்பெறச் செய்வதன்
முக்கிய நோக்கத்தை இது எய்தத் தவறும்
என்பதில் ஐயமிருக்க முடியாது.

1978ம் ஆண்டின் அரசியலமைப்பில்
எடுத்துரைக்கப்பட்டுள்ள அடிப்படை,
உரிமைகளில் பல சாதாரண சட்டமாக்கல்
நடவடிக்கையால், குறிப்பிடப்பட்ட ஏதுக்
கள் நிமித்தம் மட்டுப்படுத்தப்படலாமென்
பதைக் கண்டோம். ஆனால். ஆளொவ்வொரு
வருக்குமுள்ள, தான் விரும்பும் மதத்தை
அல்லது நம்பிக்கையை மேற்கொள்வதற்கான
சுதந்திரமுட்பட சிந்தனை செய்யும் சுதந்திரம்
மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம்,
மதச்சுதந்திரம் என்பனவும் சித்திரவதைக்
குள்ளாகாமல் இருப்பதற்கான சுதந்திரமும்
எக்காரணத்தின் மீதும்சாதாரண சட்டமாக்
கல் நடவடிக்கையால் மட்டுப்படுத்தப்பட
லாகாது என்பது பாதுகாக்கப்பட்டுள்ளது.
அது போலவே; தவறொன்றுக்குக் குற்றஞ்
சாட்டப்படும் எவரேனுமாள் நீதிமன்ற
மொன்றினால் நடாத்தப்படும் நியாயமான
விளக்கத்தில் அவரே நேரடியாக உரைப்
பதற்கு அல்லது சட்டத்தரணி மூலம் உரைப்
பதற்கு உரித்துடையவராதல் வேண்டு
மென்ற உரிமையும், சட்டத்தால் ஸ்தாபிக்
கப்பட்ட நடவடிக்கை முறைக்கு இணங்க
தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் ஆக்கப்படும்
கட்டளையின் மூலமாகவன்றி ஆளெவரும்
மரணதண்டனையால் அல்லது மறியற் தண்
டனையால் தண்டிக்கப்படாதிருப்பதற்கான
உரிமையும் சாதாரண சட்டத்தால் மட்டுப்
படுத்தப்பட அனுமதிக்கப்படாதிருப்பதை
யும் அவதானிக்கலாம். எனின், சில அறிஞர்
களின் அபிப்பிராயப்படி, ஈற்றில் தரப்பட்ட
குற்றவியல் நடவடிக்கை முறை தொடர்
பான உரிமைகள் அடிப்படை உரிமை
களாக வெனலாம். ஏனெனில், இவைநாட்
டின்சாதாரண' சட்டத்தினால் தாபிக்கப்பட்ட
நடவடிக்கை முறைக்கு' இணங்கிச் செயற்
படுவதையே தேவைப்படுத்தி நிற்கின்றன.
அவற்றுக்கு மேலாக எதனையும் உத்தரவா
தஞ் செய்யவில்லை என்பது தெளிவாகும்.

சில அடிப்படை உரிமைகள், அரசிய
லமைப்பின்பதினைந்தாம் உறுப்புரையின்எந்த
மட்டுப்பாடுகளாலும் பாதிக்கப்படவில்லை
என்பது அத்தகைய உரிமைகளின் பிரயோ
கம் ஒருபோதும் ஒடுக்கப்படவோ, சுருக்கப்
படவோ அல்லது மறுக்கப்படவோ முடி
யாது எனப் பொருளாகாது. அரசியல
மைப்பின் ஏற்பாடுகளைத் திருத்துவதற்கான
அல்லதுமாற்றுவதற்கான நடவடிக்கைமுறை
கடைப்பிடிக்கப்பட்டு அத்தகைய அடிப்படை
உரிமைகள் பற்றிய ஏற்பாடுகள் மாற்றம்
அல்லது திருத்தம் செய்யப் படலாம்.
அன்றேல் அத்தகைய அடிப்படை
உரிமைகளுடன் ஒவ்வாததாக
விருக்கின்றதான சட்டமூலங்கள் சட்டங்க
ளாக நிறைவேற்றப்படுதற்கு அரசியலமைப்
பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடவடிக்
கைமுறையைப் பின்பற்றிச் சட்டங்கள்
ஆக்கப்படலாம். இருப்பினும், பதினைந்தாம்
உறுப்புரையின் பயனாக மட்டுப்பாடுகள்
விதிக்கப்படற் பாலனவான அடிப்படை
உரிமைகளுக்கும், அவ்வாறு மட்டுப்பாடுகள்
விதிக்கப்படமுடியாதனவான அடிப்படை
உரிமைகளுக்குமிடையில் அவற்றின் ஸ்திரத்
தன்மையில் வேறுபாடு காணப்படுகின்றது.
அதாவது பதினைந்தாம் உறுப்புரையின்
கீழாகக் கொண்டுவரக்கூடிய மட்டுப்பாடுக
ளைச் செயற்படுத்தும் சட்டமூலங்கள் சாதா
ரணச் சட்டமாக்கல் நடவடிக்கையை பின்
பற்றி நிறைவேற்றப்படலாம். ஆயின், மேற்
கண்டது போல், மற்றைய அடிப்படை
உரிமைகள் மீதாக மட்டுப்பாடுகளை விதிக்
கின்ற சட்ட மூலங்கள் 'விசேட' சட்ட
மாக்கல் நடவடிக்கை முறை பின்பற்றப்
பட்டே சட்டமாக நிறைவேற்றப்படலா
மென்பது உணரப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் தொடர்பான அத்தியாயத்தில் இடம்பெறுகின்ற பதினாறும் உறுப்புரை கூறப்பட்ட அடிப்படை உரிமைகளின் பயன்பாட்டில் ஒரு பாரிய ஊடுருவலைச் செய்கின்றது. இவ்வுறுப்புரை அரசியலமைப்பு செயற்பாட்டுக்கு வந்த போது வலுவிலிருந்த எல்லாச் சட்டங்களும் அவை அடிப்படை உரிமைகளைக் கூறுகின்ற ஏற்பாடுகளுடன் ஒவ்வாதவையாக இருப்பினும் தொடர்ந்தும் செல்லுபடியாகவும் தொழிற்பாடுடையனவாகவும் இருத்தல் வேண்டுமென ஏற்பாடு செய்கின்றது. அத்துடன், இருந்துவரும் எழுத்திலான ஏதேனும் சட்டத்தால் அங்கீகரிக்கப்படுப் எவ்வித தண்டனைக்கும் எவரேனும் ஆளை உள்ளாக்குதல், அடிப்படை உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகளை மீறுவதாகாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து, அடிப்படை உரிமைகளுக்கு முரணான, ஒவ்வாததான சட்டங்கள் தொடர்ந்து இருந்து வர அனுமதிக்கப்பட்டுள்ளன என்பது புலப்படும். ஒப்பீட்டு நோக்குகையில் அவதானிப்பின் இந்திய அரசியலமைப்பை வரைந்தோர் அடிப்படை உரிமைகளுக்கு - மக்கள் இறைமைக்கு - வழங்கியுள்ள மதிப்பைக் காட்டுகின்றதெனலாம். ஆனல், இத்தகைய ஏற்பாடானது நாட்டின் சாதாரணச் சட்டத்தின் ஸ்திரத் தன்மையைத் தளம்பச் செய்வதாக அமையுமென அஞ்சப்படுவதும் உண்மையே. அதாவது, செயற்பாட்டில் இருந்துவரும் சட்டமொன்று, பல வருடங்களின் பின் யாரேனும் ஒருவரால் அடிப்படை உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகளுக்கு முரணனது என்ற ஏதுவின் மீது கேள்விக்குட்படுத்தப்பட்டு, நீதிமன்றத்தால் வலிதின்மையாக்கப்படுதல் அவ்வளவாக விரும்பத்தக்கதல்லவெனச் சிலர் கருதுவதுண்டு. ஆனல் இத்தகைய வாதம் முற்றிலும் நியாயமானதெனஏற்கப்பட வேண்டியதில்லை. ஏனெனில், வலுவிலிருக்கும் சட்டங்கள் பல, சட்டமாக்கற் சபையினராலேயே பின்னர் திருத்தம் செய்யப்படுதல் அல்லது இல்லாதொழிக்கப்படுதல் புதுமையானதொன்றல்ல.

பதினாறும் உறுப்புரையில் கூறப்பட்டவை ஏற்கனவே செயற்பாட்டிலிருந்து வரும் சட்டங்கள் தொடர்பானவையாகும். இலங்கைப் பாராளுமன்றமானது அடிப்படை உரிமைகளுக்கு முரணன சட்டங்களை இனிமேல் ஆக்குவதற்குத் தத்துவம் கொண்டுள்ளதா என்பது அவதானிக்கப்பட வேண்டும். அரசியலமைப்பின்படி, அடிப்படை உரிமைகள் பற்றிய ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவான சட்டங்களை நிறைவேற்றுவதற்கும் பாராளுமன்றம் தத்துவம் கொண்டுள்ளது. எனின், அத்தகைய சட்டமூலங்கள் தொடர்பில் "விசேட" சட்டமாக்கல் நடவடிக்கை முறையொன்று கடைப்பிடிக்கப்படுதற்கு அரசியலமைப்பு ஏற்பாடு செய்கின்றது. அடிப்படை உரிமைகளுக்கு ஒவ்வாததாக ஒரு சட்டமூலம் இருக்கின்றதென உயர்நீதிமன்றம் அபிப்பிராயப்படுமாயின், அத்தகைய சட்டமூலம் சட்டமாக வருவதற்கு பாராளுமன்றத்தின் உறுப்பினரின் 2/3 பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்பட வேண்டுமென அல்லது உறுப்பினரின் 2/3 பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்பட்டு மக்கள் தீர்ப்பு ஒன்றில் அங்கீகாரமும் பெறப்பட வேண்டுமென உயர்நீதிமன்றம் விதிக்கலாம். உயர்நீதிமன்றத்தால் விதிக்கப்படும் அத்தகைய நடவடிக்கை முறை பின்பற்றப்பட்டு நிறைவேற்றப்படின் அத்தகைய சட்டமூலம் சட்டமாக வருவதில் தடையெதுவுமில்லை என்பது புலனகும். இதனல் அடிப்படை உரிமைகளுக்கு ஒவ்வாத சட்டங்கள் உருவாக்கப்படுதல் நடைமுறையில் இயலாத ஒரு விடயமல்ல. இங்கு அவதானிக்கப்பட வேண்டிய இன்னுமோர் விடயம் என்னவெனில், சில சட்டமூலங்களை வாசிக்கையில் அவை முகத்தோற்றத்தில் அடிப்படை உரிமைகளை மீறுவதாகத் தென்படாது விடல்கூடும்; ஆனல்அத்தகைய சட்டங்களின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகையில் அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை அவை அத்துமீறல் செய்வதைக் காணக்கூடியதாகவிருக்கும். அத்தகைய சந்தர்ப்பங்களிலும் அத்தகைய சட்டங்கள் வலிதற்றனவாகா. ஏனெனில் அரசியலமைப்பின்படி, பாராளுமன்றச் 'சட்டங்கள்' நீதிமன்றத்தால் மீளாய்வு செய்யப்படுதல் குறிப்பாகத் தடைசெய்யப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உறுப்புரை 80(3)) இதன் காரணமாக நிறைவேற்றப்பட்ட சட்டம் ஒன்று அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு - அடிப்படை உரிமைகள் தொடர்பானவை உட்பட - இசைவானதா என்ற நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படவியலாததாகும். ஆயினும், சட்டவாக்கங்களை மீளாய்வு செய்வதற்கான தத்துவத்தை இந்திய, அமெரிக்க நீதிமன்றங்கள் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இது தொடர்பில், இந்திய அரசியலமைப்புச் சட்ட எழுத்தாளரான பாசு என்பவர் கூறுவது கவனிக்கப்படற்பாலதாகும். ''உரிமையெதுவும், அது சட்டமாக்கற் துறையால் மேவப்படுமாயின், அத்துடன் சட்டமொன்று அத்தகைய உரிமையுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ முரண்பட்டுச் செல்வதாக அல்லது மீறிச்செல்வதாக அமையுமிடத்து, அத்தகைய சட்டத்தை வலிவற்றதென வெளிப்படுத்துவதற்கு அரசியலமைப்பின் கீழ் அதிகார நிறுவனமொன்று இல்லாதிருப்பின், உண்மையிலேயே, அவ்வுரிமையானது அடிப்படை உரிமையெனக் கூறப்படவியலாது. அமெரிக்காவிலும், இந்தியாவிலும் இவ்வதிகார நிறுவனம் நீதித்துறையேயாகும்.''

இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் பதினேழாம் உறுப்புரையே அடிப்படை உரிமைகள் தொடர்பான அத்தியாயத்திற்கு உயிர் வழங்குவதாக அமைகின்றது. இவ்வுறுப்புரையின்படி அடிப்படை உரிமைகள் தொடர்பான அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பயனாக ஒருவருக்குரித்தாகவுள்ள அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் ஆட்சித்துறை நடவடிக்கையால் அல்லது நிர்வாகத்துறை நடவடிக்கையால் மீறப்பட்டமை தொடர்பில் அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை தொடர்பில் உயர்நீதிமன்றத்திற்குப் பரிகாரம் கோரி விண்ணப்பிப்பதற்கு ஒருவர் உரித்துடையவராவர். இது தொடர்பாக விசாரணை செய்வதற்கும், தீர்மானிப்பதற்கும் உயர் நீதிமன்றத்திற்குத் தனியானதும் பிரத்தியேகமானதுமான நியாயாதிக்கம் வழங்கப்பட்டுள்ளது. (உறுப்புரை 126 (1)) நிவாரணம் அல்லது பரிகாரம் கோரும் மனுவொன்று, அடிப்படை உரிமை மீறப்பட்டமை அல்லது உடனடியாக மீறப்படவுள்ளமை தொடர்பான நிகழ்ச்சி நடந்த தேதியிலிருந்து ஒருமாத காலத்துள் உயர் நீதிமன்றுக்குச் சமர்பிக்கப்பட வேண்டும். உயர் நீதிமன்றத்தின் தீர்மானமானது, மனுக்கோரப்பட்டு இரண்டுமாதங்களுக்குள் வழங்கப்படுதல் வேண்டுமென ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உறுப்புரை 126 (5)) அரசியலமைப்பின் உறுப்புரை 156 (1)உம் அடிப்படை உரிமைகளின் நிலைநிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்வதைக் காணலாம். இதன்படி, அரசாங்க அலுவலர்கள், பகிரங்கக் கூட்டுத்தாபன அலுவலர்கள், உள்ளூர் அதிகாரசபை அலுவலர்கள் ஆகியோர் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளார்கள் எனக் கூறும் முறைப்பாடுகளை விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் என்ற பதவி உருவாக்கத்திற்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

ஆட்சித்துறை நடவடிக்கை மூலம் அல்லது நிர்வாகத்துறை நடவடிக்கை மூலம் அடிப்படை உரிமைகள் மீது அத்துமீறல்கள் செய்யப்படுதற்கும் எதிராக நீதிமன்றம் வாயிலாக பரிகாரம் பெறப்படுதல் என்னும் இத்தகைய அம்சம் 1972ம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பில் வெளிப்படையாக இடம்பெறவில்லை. அவ்வரசியலமைப்பில் இடம்பெற்ற அடிப்படை உரிமைகள் அரசாங்கத்தினரால் மீறப்படும்போது நீதிமன்றத்திடம் சென்று அடிப்படை உரிமை முறிவுக்காகப் பரிகாரம் கோர முடியாத நிலையில் இருந்தமை அவ்வரசியலமைப்புத் தொடர்பான குறைபாடொன்றுகுமெனப் பலரால் விமர்சிக்கப்பட்டது. எனின் அவ்வரசியலமைப்புக்குச் சார்பானோர் சாதாரண மனிதன் ஒருவன் 'அடிப்படை உரிமை'யொன்று மீறப்படும் போது நாட்டின் பொதுச்சட்டத்தில் நிலவும் பரிகாரத்தின் துணையை நாடுவதை அரசியலமைப்புத் தவிர்க்கவில்லை என வாதிடுவர். இதற்கு ஆதாரமாக அவ்வரசியலமைப்பில் 16ம் உறுப்புரையில் கூறப்பட்ட அரசகொள்கைக் கோட்பாடுகள் 17ம் உறுப்புரையின் பயனாக சட்ட உரிமைகள் வழங்காதவையாகவும் நீதிமன்றம் எதிலும் வலியுறுத்தப்பட முடியாதவையாகவும் வெளிப்படையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No..........



ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையையும் 18ம் உறுப்புரையில் எடுத்துரைக்கப்பட்ட அடிப்படை உரிமைகளுக்கு இத்தகைய ஏற்பாடெதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதையும் எடுத்துக் காட்டுவர். இவர்களின் கருத்துப்படி சாதாரண உரிமைமீறல் எவ்வாறு நாட்டின் சாதாரண நீதிமன்றத்தினால் நிவர்த்திக்கப்படலாமோ அதே போலவே அடிப்படை உரிமை மீறலும் நிவர்த்திக்கப்படலாமென்பதாகும். இவ்வாதத்தில் அர்த்தமில்லையெனத் தட்டிக்கழிக்க முடியாதெனினும், கடந்தகால அனுபவம், நாட்டின் பொதுச்சட்டப்பரிகாரம் அடிப்படை உரிமையின் நிலைநிறுத்தத்திற்குத் துணை வழங்கியதெனக் கூறல் நேர்த்தியானதாகாது. அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள குறைதீர்ப்பு, சாதாரணமனிதன் கடைப்பிடிப்பதற்கு இலகுவாகவிருக்கும். எனின், இன்றைய அரசியலமைப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ள குறைதீர்ப்பு, மற்றைய பொதுச் சட்டப்பரிகாரங்களைத் தவிர்ப்பதாகவிருப்பது மிகவும் வசதியானதெனக் கொள்ளலும் கேள்விக்கிடமானதே. குறிப்பாக அடிப்படை உரிமைமீறல் தொடர்பான நிகழ்ச்சி நடந்து ஒரு மாத காலத்துள் உயர்நீதி மன்றுக்கு விண்ணப்பிக்க வேண்டுமென்பது வசதியானதொன்றாகக் கொள்ள வியலாது. இக் குறைபாட்டுக்கு அமைவாக 1972ம் ஆண்டின் அரசியலமைப்பில் இடம்பெற்ற தவிர்வு, 1978ம் ஆண்டு அரசியலமைப்பில் நிவர்த்திக்கப்பட்டது சிறப்பான அம்சமாகும்.

ஒரு நாட்டின் அரசியல் வாழ்வில் ஒரு கட்சிச் சர்வாதிகாரம் தோன்றுவதைத் தடுப்பதற்கும், தேசிய வாழ்க்கையில்ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவதற்கும் அடிப்படை உரிமைகளை உத்தரவாதஞ் செய்கின்ற ஏற்பாடுகள் அவசியமாகும். மேலும் அடிப்படை உரிமைகள் சிறுபான்மையினர் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் உதவியளிக்கும். ஏனெனில், சிறுபான்மையினரின் மனதில் பாதுகாப்பு அம்சத்தை உருவாக்குவதற்கும் வளரச்செய்வதற்கும் அடிப்படை உரிமைகளைத் தெளிவுபடுத்தும் ஏற்பாடுகள் பெரிதும் உபயோகமானவையாகும். அத்துடன், இவ்வாறான உரிமைகள் அரசியலமைப்பில் குறிப்பிடப்படுவது, அமெரிக்க மக்களால் அறியப்படுவதான ''மட்டுப்படுத்தப்பட்ட அரசாங்கம்'' எனும் கொள்கைக்கும் வழிவகுக்கும். அதாவது சட்டத்தால் மட்டுப்படுத்தப்பட்ட அரசாங்கம் நாட்டில் செயற்பட ஏதுவாகவிருக்கும்.

இன்றைய காலகட்டத்தில், மக்களின் அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் பேணப்பட வேண்டுமாயின், மதிக்கப்பட வேண்டுமாயின் அவை அரசியலமைப்பின் நிலையான ஏற்பாடுகள் மூலம் உத்தரவாதஞ் செய்யப்படுதல் இன்றியமையாததாகும். அத்துடன் இவ்வுரிமைகள் ஆட்சித்துறையினரால் மீறப்படுகின்ற வேளையில் அல்லது மீற எத்தனிக்கப்படுகின்ற வேளையில் அவற்றுக்கெதிராக நிவாரணம் அல்லது பரிகாரம் பெறுவதற்கான வழிவகைகளைக் கூறுகின்ற ஏற்பாடுகள் உருவாக்கப்படுதலும் மிகவும் அத்தியாவசியமாகும். எனின், இத்தகைய ஏற்பாடுகள் அரசியலமைப்பில் பொறிக்கப்பட்டிருப்பதனால் மக்களின் உரிமைகள் பேணப்பட்டு அவர்களின் அனுபவிப்புக்கு உள்ளாகுமென்பதும், அவை பிற நடவடிக்கைகளால் மீறப்படமாட்டாதென்பதும் உத்தரவாதமாகிவிடும் என்ற முடிவுக்கு வருதலாகாது. அதாவது இத்தகைய ஏற்பாடுகள் இருப்பதனால் மட்டும் நாட்டின் அடிப்படை உரிமைகள் பேணிப்பாதுகாக்கப்படும் என்பது பெறப்பட மாட்டாது. இத்தகைய ஏற்பாடுகள் இருப்பதுடன், மேலும் பல அம்சங்கள் அடிப்படை உரிமைகள் மதிக்கப்பட்டு, பேணிக் காப்பாற்றப்பட்டு வருவதற்கு அத்தியாவசியம் என்பது தெளிவு.

ஒவ்வொரு மனிதனும் தனது தனித்துவத்தைக் கொண்டிருப்பதற்கு அத்தியாவசியமானதெனக் கருதப்படுகின்ற இத்தகைய அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் மக்கள் மதிப்பவர்களாகவும் அவை தொடர்பில் விழிப்புணர்ச்சி கொண்டவர்களாகவும் விளங்க வேண்டும். அது போலவே, சட்டமாக்கல் துறையினரும், நிறைவேற்றுத் துறையினரும், நீதித்துறையினரும், அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படை உரிமைகளுக்குச் செவிசாய்ப்பவர்களாகவும், அவற்றைப் பேணி, மதித்து ஏற்றமளிப்பவர்களாகவும் செயற்படல் அவசியமாகும். இத்தகைய அம்சங்கள் நாட்டில் சிறப்புறத் திகழாது விடின் அங்கு அடிப்படை உரிமைகள் உரிய முறையில் அனுபவிக்கப்படாது போவதற்கும் சிறுக்கப்படுவதற்குமான சூழ்நிலை உதயமாகலாம்.

மக்கள் தமது அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதிலும் துய்ப்பதிலும் மிகவும் அக்கறையுடையவர்களாகவும், அவை மறுக்கப்படும் போது, சிறுக்கப்படும் போது அல்லது மீறப்படும் போது அத்தகைய நடவடிக்கைக்கெதிராக தமது உரிமைகளை நிலைநிறுத்தும் துணிவு கொண்டவர்களாகவும், மனநிலையுடையவர்களாகவும் விளங்க வேண்டும். அத்துடன் மக்கள் கல்வியறிவு உடையவர்களாகவும், அரசியல் விழிப்புணர்ச்சி உள்ளவர்களாகவும் இருத்தல் அவசியமாகும். இவை நாட்டில் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான அணிகலங்களாகும். இவ்வாறின்றி, மக்கள் தங்களின் உரிமைகளிலேயே அக்கறையற்றவராக இருப்பார்களாயின் அடிப்படை உரிமைகளை உத்தரவாதஞ் செய்கின்ற அரசியலமைப்பு ஏற்பாடுகளிலிருந்தும் அது விழலுக்கு இறைத்த நீராகவே போகும். எனவே தான், மக்கள் தமது உரிமைகள் தொடர்பில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமெனவும், விழிப்புணர்ச்சி கொண்டு செயலாற்ற வேண்டுமெனவும் கூறப்படுகின்றது. அரசாங்கம் என்னும் யானையைத் தகுந்த வழியில் கொண்டு நடத்துவதற்குமக்களாகிய பாகனுக்கு விழிப்புணர்ச்சி எனும் அங்குசம் அவசியமாகும். அங்குசம் கொண்டிராத பாகனுக்கு எவ்வாறு யானை பணிய மறுக்கலாமோ அதுபோலவே விழிப்புணர்ச்சி இல்லாத மக்களுக்கு அரசாங்கம் பணிய மறுக்கலாம்.

அடுத்து, தனிமனிதனின் அடிப்படை உரிமைகள் பேணப்படுவதற்கும் சிறுபான்மையினரின் மனதில் பாதுகாப்பு எண்ணம் வளர்க்கப்படுவதற்கும், நீதித்துறையின் சுதந்திரமும், தன்னுதிக்கமும் அத்தியாவசியம் என்பது மறுக்கப்பட முடியாததாகும். அடிப்படைஉரிமைகள் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளால் அத்துமீறல்களுக்கும்,ஊடுருவல்களுக்கும் உள்ளாகின்றபோது அத்தகைய நடவடிக்கைகள் மீது பாரபட்சமற்ற முறையில் தைரியத்துடனும், தகுந்த வார்த்தைப் பிரயோகத்துடனும் தீர்ப்பு வழங்குவதற்கு மனவலிமைகொண்ட நீதியரசர்கள் நீதித்துறையினை அலங்கரித்தல் அளப்பரிய தேவையாகும். அத்துடன், நாட்டின் நீதியரசர்கள் தன்னுதிக்கமுடையவர்களாகவும், சுதந்திரமானவர்களாகவும் மாத்திரம் இருப்பது போதுமானதாகாது. அவர்கள் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும், மதிப்பளிப்பவர்களாகவும் செவிசாய்ப்பவர்களாகவும்,செயற்பாடுவழங்குபவர்களாகவும் விளங்க வேண்டும். அவர்கள் அவற்றைப் பாதுகாப்பது, உத்தரவாதஞ் செய்வது, நிலை நிறுத்துவது தொடர்பில் மிக்க கரிசனையுடையவர்களாகவும், மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பான விழிப்புணர்ச்சியின் பலாபலன்களுக்கு வழிசமைப்போராகவும் திகழ வேண்டும். லிவர்சிட்ஜ் எதிர் அண்டர்சன் என்ற பிரசித்தி பெற்ற ஆங்கில வழக்கில் அற்கின் பிரபு வழங்கிய தீர்ப்பில் குறிப்பிடப்பட்டது போன்று, நிருவாகத்துறையின் சிந்தனையில் ஊறிய மனத்திலும் பார்க்கக் கூடியதான நிருவாகத்துறை சிந்தனைசார் மனத்தைக் கொண்டவர்களாக நீதியரசர்கள் தென்படுவார்களாயின் அடிப்படை உரிமைகள் தொடர்பான அரசியலமைப்பின் ஏற்பாடுகள், ஏட்டுச்சுரக்காய் ஆகிவிடும். இந்திய உயர்நீதிமன்ற நீதியரசர் போஸ் அவர்கள் வழக்கொன்றில் கூறியது போல், அடிப்படை உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகளின் ஏற்புடைமையானது நிகழ்வு தொடர்பான வினவாகும்; இத்தகைய ஒவ்வொரு வினவும், அது ஒவ்வொரு வழக்கில் எழுகின்ற போதும் நாட்டின் அதியுச்ச நீதியரசர்களால், ஜனநாயகத்தின் உயிர்த்துடிப்பும் அடித்தளமும் நீதித்துறை நடவடிக்கையிலும் சட்டவாட்சியிலுமே இருக்கிறதென்பது மனதிடைக் கொள்ளப்பட்டு, தீர்மானிக்கப்பட வேண்டும். இவை மூலமாகத்தான் அரசியலமைப்பில் இடம் பெறுகின்ற அடிப்படை உரிமைகள் மக்களின் அனுபவிப்பையும் பிரயோகத்தையும் பெறும் உத்தரவாதத்தைக் கொள்ள முடியுமெனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# With Best Compliments

From

NEW
FERNANDO CLEARING
&
TRANSPORT


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

from

**JEYA AGENCY**

Importers and sole distributors of a Wide Variety of tourist Guide book:, Novels, Historical, Religious, Astrological, Atlases, Maps, children's books, Dictionaries in English and Medical Dictionaries.

54. RATNAKARA PLACE

**DEHIWELA.**

Telephone : **71 - 6270**

With Best Compliments

of

**COOL & SNACK BAR**

MAIN ROAD,

TELLIPPALAI.

With Best Compliments

of

**OPATHA & CO**

15, ST. JOHN'S ROAD,

**COLOMBO - 11.**

*Telephone* : **25685.**

*With Best Compliments*

*from*

**KESAVAN**

16, St. John's Road

**COLOMBO - 11**

*T. phone* : **32415.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

*With Best Compliments*

*Of*

THE SUPREME
HARDWARE CENTRE

Dealers in :
ENGINEERING TOOLS, V. BELTS & GENERAL HARDWARE ITEMS
**344, OLD MOOR STREET, COLOMBO - 12.**
Telephone : **31167**

**With Best Compliments**

**from**

ZAMROUTH ASSOCIATES

Clearing, Forwarding, Transporting
*&*
Customs House Agents
**56, RECLAMATION ROAD**
**COLOMBO - 11**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

## With Best Compliments

**from**

## ANOON CLEARING & FORWARDING
## &
## CUSTOMS HOUSE AGENTS

Telephone : **548721**

Address :

No - 77, 79 A, MAIN STREET

**COLOMBO - 11.**

---

*With Best Compliments*

*from*

## T. S. T. P. T. & CO.

Telephone : **34157**

49, DAM STREET,

**COLOMBO - 12.**

---

With Best Compliments

from

## V. KANAGALINGAM PILLAI
*&*
## SONS

Telephone : **25883**

17, St. JOHN'S ROAD,

COLOMBO - 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீ மூட்டுங்கள்

**1.**

உன்னோடு கூடவரவே
விருப்பம் உண்டு எனக்கு,
உனக்கு முன்னால் நடந்துபோக
என்றுமே நான் விரும்பியதில்லை.

சமாந்தரமாய் கைகளைக் கோர்த்தபடி
நடத்து செல்லவே
நான் ஆசைப் படுகிறேன்.

எனக்கு தேவையான தெல்லாம்
என்னைப் பற்றிய புரிந்து கொள்ளலே
பிறகே,
மற்றவையெல்லாம்.

நான் வெகு தொலைவு
போக வேண்டியுளது,
விரைவாய் நீட்டுநின் கரங்களை……

**2.**

ஈச்சையும் பன்னையும் மண்டிக்
கிடக்கும்
சுடலையின் பின்புறம்
எதிர்பாராமல் சந்தித்தோம்.
என்னைக் கண்டதும், கண்கள்
விரிந்தது மெதுவாக
சைக்கிளை நிறுத்தினாய்
மழைகள் முடிந்து படர்ந்து கிடக்கும்
பச்சைப் பின்னணியில் -
நல்லதொரு கவிதையைப் படிப்பது
போல்-
சிவந்து நிற்கிறாய்!

**3.**

தடை உடைக்க முடியாது,
தடம் அழித்துச் செல்கின்றாய்
உறவுடைக்க முடியாது
வேலிகளுள் 'குந்து'கிறாய்.

பச்சையாய் விரிந்து கிடக்கும்
சுடலைப் புறமும்,
ஆட்கள் வராத Teacher வீட்டின்
முன்புறமும்
Tutory எனவும்
நாங்கள் 'சல்லாபித்தது'
நேற்றெனவே
எல்லாம் உருக்குலைந்து போயிற்று!

நான் இருக்கும் 'வெளி'க்கு வர
வேலிகளை உன்னால்
எரிக்க முடியும் என்றிருந்தேன்.
உன்னைப் போலிருக்கும்
தமிழ்ப் பெண்கள் அனைவருக்கும்
உரத்தகுரலில்
சொல்ல விரும்புகிறேன்:
'தீ மூட்டுங்கள்'
வேலிகளை அத்தீயில் எரியுங்கள்;
பிறகு,
நாங்கள் இருக்கும் வெளிகளுக்கு
வாருங்கள்!

'பிரிவு துயர் மிக்கது'
என்பதை நானும் அறிவேன்.
ப்ரிய சாந்தி
அந்நியரிடம் நசிபடுவதைவிட
இத்துயர் சிறிதே,
அறிக நீ!

**இந்திரஜித்**
சட்டபீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

## நரேஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

143, பஜார் வீதி,
முல்லைத்தீவு.

*With The Best Compliments*

*FROM*

## Venkadeswara

5, MAIN STREET,
**MULLAITIVU.**

**எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்**

## ரஞ்சனா ஸ்ரோஸ்

32, பிரதான வீதி,
முல்லைத்தீவு.

*With Best Compliments*

*FROM*

## RATNAM BROTHERS

AGENTS FOR:

- EVEREADY
- MILK FOOD, NESLE PRODUCTS
- FERTILIZER
- SALT

## RATNAM BROS.

143, MAIN STREET,
MULLAITIVU.

**சிறுகதை**

# சந்தனக் கட்டை

எழுதியவர் : ஜனகமகள் சிவஞானம் ஏழாலை மேற்கு. சுன்னுகம்.

கொழும்பு பல்கலைக் கழக தமிழ்ச் சங்கம் நடாத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் முதலாவது பரிசு பெற்ற சிறுகதை

"ஜெயம் எடி ஜெயம் எழும்பன் விடிஞ்சிட்டுதல்லே, இண்டைக்கு அக்கா வல்லே வரப்போரு மறந்து போனியே?'' புரண்டு படுத்த கடைக்குட்டி ஜெயம், வனிதா கொடுத்த உற்சாகக் குரலில், வாரிச்சுருட்டிக் கொண்டு எழுகிறுள். வீடு முழுவதும் மகிழ்ச்சியின் ரேகை பரவி நின்றது.பிரிவு எத்துணை கொடுமையானதோ? அதைவிடப் பலமடங்கு இனிமையானது உறவு. "வனிதாக்கா, அக்கா வந்து ரி. வி. வாங்கிறதெண்டல்லே எழுதினவா? ரி. வி. யை நாங்கள் எவடத்திலை வைப்பம்''

''நித்திரையாலை எழும்பினவவுக்கு முகம் கழுவவும், வீட்டு வேலையளைப் பாப்பம் எண்ட நினைவில்லை. ரி. வி. வைக்கிறத்துக்கு இடம் தேடிருவாம் இடம். போடி போய் முகத்தைக் கழுவடி..''

விளக்குமாறிஞல் முற்றத்தைக் கூட்டிக் கொண்டிருந்த பூரணம் அவர்களின் தாய்-ஜெயத்தை நோக்கிக் கோபப் பார்வையை வீசிவிட்டு தன் பாட்டில், மீண்டும் தன் வேலையில் ஒன்றிப் போகிறுள்.

''அம்மாவுக்கு விசர். ரி. வி. வாங்கிஞல் அக்கம், பக்கத்திலை இருக்கிறவை எல்லாம் பாக்க வருவினம். எல்லா நாளும் வராட்டிலும், தமிழ்ப்படம் போடிறநாளிலை எண்டாலும் வருவினம்தானே? ஆனபடியால வசதியான இடத்திலை வைக்கத்தானே வேணும்'' தனக்குள்ளாக முணுமுணுத்தவாறு எழுந்து போகிறுள் ஜெயம்.

தனது மூத்த மகள் பத்மா மூன்று வருஷங்கள் வெளிநாட்டில்ச் சம்பாதித்துக் கொண்டு இன்று வருகிறுள் என்ற சந்தோஷம். பூரணத்திற்கும் இல்லாமலில்லை. இருப்பினும் சின்னவயதில் பெண்பிள்ளை என்று கூட இல்லாமல் ஊர்விட்டுத், தேசம்விட்டுக், கடல்கடந்துபோய்ச் சம்பாதிக்க வேண்டிய நிலை தன் மகளுக்கு ஏற்பட்டு விட்டதே என்று நினைக்கையில், அவளுக்குள் வேதனை பன்மடங்காகியது.

நித்தம், நித்தம் குடித்துவிட்டு, குடியில் சம்பாதித்ததையும் தொலைத்துவிட்டு, வீடு வந்து, மனைவிபிள்ளைகளை அடித்து, உதைத்ததுமல்லாமல் குடியாலே அரைவயதிலேயே தன் வாழ்க்கையை முடித்துக் கொண்ட கணவன், நாலும் பெண்களாகவே அவள் பெற்றெடுத்த பிள்ளைகள், உண்டு உடுத்துக் கழிக்க வேண்டிய அந்தச் சின்ன வயதில், உள்ளதைக் கொடுத்து வாயையும், வயிற்றையும், அரையும், காலுமாய்ச் சிலநாள்க் கழுவியதும், சில பொழுதுகள் அதுவுமில்லாமல் எத்தனை? நாள்க் கண்ணீர் வடித்திருக்கிறுள். பின் பத்மா படிப்பை நிறுத்தி வேலை பார்க்கத் தொடங்கிய பின்தான் பூரணம் ஓரளவு நிம்மதியடைந்திருந்தாள்.

விலைவாசியைப் போல்ச் சொல்லாமல்க் கொள்ளாமல் ஏறுகின்ற வயதுக்குப் பதில் சொல்லப் பத்மாவின் சம்பாத்தியத்தால் முடியவில்லை.

நாங்கள் சின்ன வயதில்க் கஷ்ரப்பட்டாலும் ஒரு நாள் நன்ருகத்தான், ஊர் மெச்ச, வாழத்தான் போகிறோம் என்ற பத்மாவின் நம்பிக்கைகள் கூட சின்னுபின்னமாக்கப்பட்டுப் போயிற்று. சிறுவயது முதல் மாமியின் மகன் குமார் பத்மாவுக்கென்றும், பத்மாவைக் குமாருக்கென்றும் இணைத்துப் பேசிவிட்டு, இவர்களிடமிருந்து சீதனம் பெற முடியாது என்று தெரிந்ததும் மாமி விலகிப் போக முனைந்தது மட்டுமல்லாமல், அவளை வைத்ததிஞல் அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சில் ஆழமாய் ஏற்ப்படுத்தப்பட்ட ரணங்கள், பின்னால் வளர்ந்து கொண்டிருக்கும் தங்கைகள், பருவ வயதுக்குரித்தான அவர்களின் ஆசைக் கனவுகள், ஏழையென்று ஏளனம் பண்ணியவர்களின், கேலி வார்த்தைகள் எல்லாமாய்ச் சேர்ந்து பத்மாவின் நெஞ்சில் ஓர் ஆறுத வைராக்கியத்தினை உண்டு பண்ணியதன் விளைவே அவளின் வெளிநாட்டுப் பயணம்.

பூரணம் இதற்கு முதலில் சம்மதம் கொடுக்கவில்லைத்தான். பின்னர் பத்மாவின் நியாயபூர்வமான வாதங்களின் முன்னே பூரணத்தின் சொல்வாக்குச் சின்னாபின்னப்பட்டுப் போயிற்று. பத்மா போய் மூன்று வருஷங்கள் ஓடி மறைந்தாலும் வீட்டை நினைத்து, வீட்டுக் கஷ்ரங்கள், துயரங்களை எண்ணி அதற்கேற்ப சம்பாதித்து அனுப்பிக் கொண்டிருந்தாள்.

''வனிதாக்கா! றெயில்வேஸ்ரேசனுக்குப் பெரியம்மாவின்ரை செல்வனண்ணையை அனுப்பி விடச் சொல்லியல்லே அக்கா எழுதினவா. செல்வனண்ணை ஸ்ரேசனுக்குப் போனவரேக்கா.?''

''உன்னைப் போலை விடிய விடிய, நித்திரை கொண்டுகொண்டிருந்தால், எல்லாரையும் தான் அனுப்பலாம். உதிலை நிண்டு மிச்ச நேரத்தையும் பிலைக்கெடுத்தாமல், பிலாமரத்துக்குக் கீழை ஒருசுமை பழுத்தல் கொட்டிண்டு கிடக்கு, அதுகளைப் பொறுக்கி ஆட்டுக்குப் போட்டிட்டு வந்திரு. பத்மா வந்திட்டால், பிறகு நீ அவளை விட்டு அசையாய்'' படபடத்த அம்மாவின் வார்த்தைகள் எதுவுமே? செவியில் விழாதது போல் கொடியில்க் கிடந்த துவாயால்த் தன் முகத்தின் ஈரத்தைத் துடைத்து விடுகிறாள் ஜெயம்.

''வனிதாக்கா! அக்கா எங்கடை வீட்டைப் பாத்திட்டு வீடுமாறி வந்திட்டனோ? எண்டு திகைக்கப் போறா என்ன?''

''ஓம் ஜெயம் கொட்டில் இருந்த இடத்திலை இந்தக் கல்வீடு எழும்பியிருக்கிறதைப் பாத்துத் திகைக்கிறது மட்டுமில்லை. சரியாச் சந்தோஷப்படவும் போறா ஏனெண்டால் இது அக்காவின்ரை உழைப்பு''

''வனிதா நீ உதிலை நிண்டு கதைச்சுக் கொண்டு நில் அங்கை பால் பொங்கி வழியப் போகுது.''

பாலைப் போலப் பூரணத்தின் மனமும் கொதித்துக் கொண்டிருந்தது. நீண்ட நாட்களின் பின் மகளைப் பார்க்கப் போகிறோம் என்ற களிப்பு பூரணத்திற்க்கும் இருந்தது. அதை விடப் பன்மடங்காய் நெஞ்சினைக் கூறு போடுகின்ற ஆற்றாமைக்கு அவளால்ப் பதில் சொல்லவே முடியவில்லை. ஆசைக்கும், அன்புக்குமாய்த் தான் பெற்ற மூத்த மகளைக் கணவன் வீட்டுக்கு மனத் திருப்தியாய் அனுப்பி வைத்து விட்டுத் தம்பதி சமேதராய் அவர்களின் வரவை எதிர் பார்த்துக் காத்து நிற்கவேண்டிய நிலைமாறி, ஏழ்மைக்குள் பிறந்துவிட்ட காரணத்தினால், எல்லாவற்றையும் விடுத்துத் தன்பிள்ளை, அயலவர்களின் நையாண்டி வார்த்தைகளையும், தாங்கி அயல்நாடு சென்று பிழைக்க வேண்டிய நிலை ஏற்ப்பட்டதே என்ற வேதனை பூரணத்திற்கு.

''மேழைக்கொண்டு இப்பிடி மானங்கெட்ட பிழைப்பு, பிழைப்பிக்கிற நேரம் ஒரு துளி விஷத்தைச் சாப்பிட்டிருக்கலாம்'' என்றவர்களும், 'குமரி அவளின்ரை ஆட்டத்தைப் பாத்தியே''

''அதைவிடு அவளை ஆடவிட்ட தாய்க்காறியைச் சொல்லு. என்ரை பிள்ளையாயிருக்க வேணும். அதிலை வைச்சு, என்ரை பிள்ளை யெண்டும் பாராமல் அவளின்ரை காலை அடிச்சு முறிச்சிருப்பன்.''

வக்கணை வைத்த அத்தனை பேரும் தூய்மையானவர்களா? என்ன?, இல்லை எந்தத் தவறையும், எந்தச் சந்தர்ப்பத்திலுமே செய்யாதவர்களா? என்ன? 'எல்லாரும் எரிச்சல்ப்பட்ட சனங்கள்' எனத் தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டாலும், தான் பெற்ற பிள்ளையை மற்றவர்கள் குறைசொல்லும் பொழுது, எந்தத் தாயால்த்தான் பொறுத்துக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No



'அம்மா முட்டையைப் பொரிச்சு வைக் கட்டே'

'பொரிக்காதேங்கோ வனிதாக்கா. ஆறிப் போனல்ச் சாப்பிட என்னவோ மாதிரி இருக்கும். சுடச்சுடச் சாப்பிட்டாத்தான் ரேஸ்ராயிருக்கும்.'

கோப்பையிலிருந்த தேநீரை உறிஞ்சிய வாறு அம்மாவை முந்திக் கொண்டு பதில் சொன்னுள் ஜெயம். அவளின் விழிகள் அடிக்கொருதரம் வாசல்வரை போய் வந்து கொண்டிருந்தது. அக்காவை எப்பொழுது பார்க்கலாம் என்ற ஆவல் அவளுக்கு.

பிறத்தியார் வார்த்தைகளுக்கு அன்று பத்மா மதிப்பளித்திருந்தால் இன்று இரண் டாவது மகள் ரஞ்சினி இப்படியோர் நல்ல இடத்தில் வாழ்க்கைப்பட்டு ஒரு குழந்தைக் குத் தாயாகியும் இருக்கமுடியாது. வனிதா வாசிற்றி வாசலேயும், ஜெயம் அற்வாண்ஸ் லெவலேயும் எட்டிப்பார்த்திருக்கவும் முடி யாது. வயிருர உண்டு, உடுத்து, நாலு பேர் மதிக்க இப்படி வாழ்ந்திருக்கவும் முடியாது. இப்படி எத்தனை முடியாதது களை முறியடித்து, முடியும் என்ருக்கியிருக் கிறது பத்மாவின் வைராக்கியம்.

''அம்மா அக்கா வந்திட்டா, அக்கா வந்திட்டா'' ஜெயத்தின் குதூகலத்தி னூடே கார் வந்து நிற்கிறது. பத்மா இறங்கி வருகிறுள். ஜெயமும். வனிதாவும் அவளை ஆரத் தழுவி அழைத்து வருகையில் அவர்களின் சந்தோஷம் நிறைந்த முகங் களைப் பார்த்துத் தனக்குள்ளாகப் பூரித்துப் போகிறுள் பத்மா.

போகும் போது இருந்ததை விடச் சற்றுப் பூசினுற் போன்ற உடலமைப்பும், நிறமும் கூடி அவளழகை மிகைப்படுத்தி நின்றது. வேலியோரத்திலிருந்து பத்மாவை நோக்கி வீசப்படுகின்ற அயலவர்களின் பார்வையின் தாக்கத்தை முறியடிக்க, இரு கைகளையும், உச்சியிலிருந்து கீழ் நோக்கிக் கொண்டு வந்து நெட்டி முறித்துத் திருஷ்டி கழிக்கிறுள் பூரணம். கல்லடி பட்டாலும், கண்ணடிபடக் கூடாது என்பதில் நம்பிக்கை உள்ளவள் அவள். தங்களைப் பார்த்து, எத் தனையோ நெஞ்சங்களில்ப் பொருமைத்தீ கொழுந்து விட்டிருக்கும் என்று பூரணத் திற்குத் தெரியும், வாழ்ந்தாலும் ஏசும், தாழ்ந்தாலும் ஏசுகின்ற இந்த உலகத்திட மிருந்து நிறையப் பாடங்களைப் பூரணம் கற்றிருக்கிறுள்.

''ரஞ்சினி வரேல்லையேம்மா?''

''இல்லை, ரஞ்சினியின்ரை அவருக்கு இப்ப குருநாகல்லை வேலை''

''ரஞ்சினி மரிபண்ணின பிறகு நான் இன் னும் காணேல்லை, அவளை அவளின்ரை ஹஸ்பன்ட்டோடை பார்க்க வேணும் போலை இருக்கு.''

''அக்காவை எவ்வளவு காலம் பார்க் கேல்லை. எப்பிடியும் இந்தக் கிழமை வரு வனெண்டுதான் ரஞ்சினி எழுதினது.''

''ரஞ்சினிக்கு வர முடியாட்டில் நானெண் டாலும் போய்ப் பாத்துக் கொண்டு வர வேணும்''

''அக்கா ரஞ்சினி அக்கான்ரை பிள்ளை சுபோ சரியான கெட்டிக்காரி. எங்கை? பெரியம் மாவைக் காட்டுங்கோ பாப்பமெண்டு கேட்டால்ப் போதும் உடனே உங்கடை படத்தைக் காட்டுவாளக்கா குறும்புக்காரி'' எல்லாப் புதினங்களையும் ஒன்றும் விடுபடா மல், பத்மாவிடம் ஒப்படைத்து விட வேண் டும் என்ற அவசரம் ஜெயத்துக்கு.

அழகழகாய், விதம்விதமாய்ப் பத்மா கொண்டு வந்திருந்த பொருட்க்களை வனி தாவும், ஜெயமும் ஆராய்ந்து கொண்டி ருந்தார்கள். பல விதத்திலான இயற்கை, செயற்கைகளை அடக்கிய அல்பம், கசெற், உடுப்புக்கள் அலங்காரப் பொருட்கள் என்று எத்தனை? தினுசுகள். அவர்கள் மனங்கள் இதற்குள்ப் புதையுண்டு கிடக்கப் பூரணம் மட்டும் எதையெதை எல்லாமோ நினைத்து மனம் வருந்திக் கொண்டிருந்தாள்.

''கடவுளே எனக்கொரு ஆண் குழந் தையே இல்லை என்ட குறையை இவள் தீர்த்திட்டாள். ஆனுல் இவளையும் ரஞ்சினி மாதிரிக் குடும்பமாக்கிப் பாத்திட்டனெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டால், அது ஒன்றே எனக்கு போதும் பத்மா பாவம், வாழவேண்டிய வயதிலே, இந்தக் குடும்பச் சுமையாலே அவளின்ரை பருவம் கூட காட்டிலே எறிச்ச நிலா மாதிரி வீணுகிக் கொண்டிருக்குது. இனியும் அவளின்ரை காலம் வீணுய்ப் போய்க் கொண்டிராமல், மச்சாள் அண்ணையவையோடை கதைச்சு அவை கேக்கிறதைக் குடுத்துக் குமாருக்குப் பத்மாவைக் கட்டி வைச்சிட வேணும். என்ரை ராசாத்தி என்ரை கண்ணுக்கு முன்ஞல் நல்லமாதிரி வாழுறதைப் பாத்திட்டுத்தான் நான் சாகவேணும். பிள்ளையாரப்பா எல்லாத்தையும் நீதான் முடிச்சு வைக்க வேணும்''

'என்னம்மா? பகலக் கனவு காணுறியளே? அக்காவோடை வந்து கதையுங்கோவன்'

ஜெயத்தின் குரலில் நினைவுகளில் இருந்து மீண்டு எழுந்து உள்ளே போகிருள் பூரணம்.

'வனிதா எப்பிடிக் கவனமாய் படிக்கிறியே'

'ஓமக்கா நீங்கள் இப்படிக் கஷ்ரப்பட்டுப் படிப்பிக்க நான் படிப்பிலே கவனமில்லாமல் இருப்பனே'

''ஜெயம் நீ''

'ஓம் நானும் படிக்கிறன். வனிதாக்கா மாதிரி வண்ணியறை நான் வேஸ்ற்ப்பண்ண மாட்டேன். ஃவெஸ்ற் ரைமே வாசிற்றிக்கு என்ர பண்ணிறஞே? இல்லேயோ எண்டு நீங்கள் இருந்து பாருங்கோ''

'நீ எல்லாத்திலும் கெட்டிக்காறி எண்டு தெரியும் தானே? வாயையும் சேர்த்துத் தான் சொல்லுறன்'

'ஐயோ! அக்கா வனிதாக்காவைப் பாருங்கோ. சும்மா என்னுடை கொழுவுது' 'சும்மா இரு வனிதா' என வனிதாவையும், ஜெயத்தையும் சமாதானப் படுத்திவிட்டுத் திரும்புகையில்,

'வந்தவளைச் சாப்பிட்டுக் களைப்பாற விடுங்கோ பாப்பம். பத்மா நீ வா சாப்பிட' பூரணத்தின் குரல் அவர்களின் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது.

மூன்று நாட்கள் எவ்விதம் சென்று மறைந்தது என்று கூடப் புரியாத அளவுக்கு அவர்கள் மனதில் அத்தனை சந்தோஷம் தெரிந்தவர்கள், முன்பு இவர்கள் ஏழ்மைக்குள் மூழ்கடிக்கப்பட்டிருந்த பொழுது தெரிந்தும் தெரியாதது போல் நடித்தவர்கள் எல்லாம் வீடு தேடி வந்த பொழுது தான் ''உண்டான பொழுது கோடி உறமுறைவார்'' என்பதன் பொருள் புரிந்தது ''இல்லானைஇல்லாளும் வேண்டாள்'' என்று சும்மாவா சொன்ஞர்கள்.

இருப்பினும் தனது மைத்துனியும், அண்ணனும் மட்டும் வரவில்லேயே என்று பூரணத்திற்குச் சற்று மனவேதனை தான். 'ஒரு வேளை அந்தஸ்த்தில் அவர்களை விட உயர்ந்து விட்டேனே? என்ற மனத்தாங்கலோ என்னவோ? என்று பூரணம் தனக்குள்ளாக நினைத்துக் கொண்டாள். அன்று மதிய உணவை முடித்துக் கொண்டு சற்று ஆறுதலாகக் கண்ணயர்ந்திருந்த வேளை கடைக்குட்டி ஜெயம் விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தாள்.

''அம்மா! அம்மா! மாமியும் குமாரத்தானும் வந்திருக்கினமணை எழும்புங்கோ'' பூரணம் எழுந்து வெளியே போகப் படுக்கையைச் சுற்றி ஒரமாய் வைத்து விட்டு ஜெயம் உள்ளே ஓடி வருகிருள். வந்தவள் சகல அபிநயங்களோடும்

''அக்கா தங்களின் எதிர்காலக் கணவர், அதாவது மிஸ்ரர். விஜயகுமார் பி. எஸ்ஸி தங்களில்லத்திற்கு விஜயம் செய்திருக்கிருர்.''

'சும்மாயிரடி அவையின்ரை காதிலே விழுந்தாலும்' ஜெயத்தினை அடக்குகிருள் வனிதா ஆனுல் எதுவுமே? செவியில் எருதவளைப் போன்று மௌனியாகவே அமர்ந்திருக்கிருள் பத்மா.

''உமக்கென்ன? நான் அக்காவைத்தானே? சொன்னஞன். அக்கா என்னக்கா நீங்கள். உங்களைப் பார்க்க மாமியும், குமாரத்தானும் வந்திருக்கினம், நீங்கள் இப்பிடிப் பேசாமலிருந்தால் உங்களுக்குப் பிறவுட் பிடிச்சிட்டுதெண்டல்லே சொல்லப் போயினம் வாங்கோக்கா''

''பத்மா! மாமியவை வந்திருக்கினம். வந்திட்டுப் பேர'' ஜெயத்தின் வற்புறுத்தலினுாடே, பூரணமும் குரல் கொடுக்கவே எழுந்து தன்னைச் சரிசெய்து கொண்டு வெளியே வருகிருள் பத்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மாவிடம் மிகமிகச் சாதாரணமாக, மனசில் எந்தவிதமான கல்மிஷமும் இல்லாதது போல், சுகங்கள், சௌகரியங்களை மாமி விசாரிக்கிறாள். குமார் எதுவுமே? தெரியாதவனைப் போல் நிர்ணயமில்லாத பாதையில்த் தன் பார்வையினை ஓட விட்டு அமர்ந்திருக்கிறான்.

''குமாரத்தான்ரை வெக்கத்தைப் பாத்தீங்களே வனிதாக்கா ஒண்டுமே தெரியாத மாதிரி இருக்கிறார்.'' எனக் கிசுகிசுத்த ஜெயத்தைப் ''பேசாமலிரடி'' என அடக்கி வைக்கிறாள் வனிதா.

'ஹ்கும்' எனக் குரலைச் செருமிச் சரிசெய்த மாமி ஏதோ? பெரிய பிரசங்கத்திற்கு அடிகோலுபவளைப்போல் பேச்சைஆரம்பித்தாள்

''வந்து பூரணம் வர்ற புதன்கிழமை குமாரின்ரை றிஜிஸ்ரேசனுக்கு ஏற்பாடு செய்திருக்கிறம். குமாரின்ர மனதுக்குப் பிடிச்சமாதிரி, அடக்கமான, அமைதியான பெண்ணைத் தெரிவு செய்திருக்கிறம். அந்த நேரம் எல்லாரும் வந்திடுங்கோ.''

''மச்சாள்'' என்ற சொல் தொண்டை வரையும், வந்தும் வெளியேற முடியாத வகையில் ஒருகணம் விக்கித்துப்போய் நிற்கிறாள் பூரணம். அவள் மட்டுமல்ல, இடியே வந்து இறங்கினாற்போல் வனிதாவும், ஜெயமும் நிற்க, பத்மா மட்டும் இப்படி ஒரு விஷயத்தை எதிர்பார்த்திருந்தவள் போல். எதுவுமே? நடவாததுபோல் நிதானமாகவே இருந்தாள்.

''என்ன? மச்சாள் இப்பிடிச் செய்து போட்டியள்''

''எப்பிடி?'' கேட்டவன் இதுவரை மௌனமாக இருந்த குமார்.

''நம்பிக்கைத் துரோகம் செய்து போட்டியளே?''

''நம்பிக்கைத் துரோகி ஆரெண்டதைப் புரிஞ்சுகொண்டு பேசுங்கோ.''

''என்ன? சொல்லுறியள் தம்பி?''

''என்னைவிட என் அன்பைவிட பணந்தான் பெரிசெண்டு நினைக்கிறவள் உங்களுடைய மகள்.''

''நீங்கள் என்ன?சொல்லுறீங்கள்?எண்டு எனக்கு இன்னுந்தான் புரியேல்லை.''

''ஏன்?உங்கடை மகளிட்டையே?கேளுங்கோவன்.''

வேதனை நிறைந்த விழிகளோடு, பத்மாவை நிமிர்ந்து பார்க்கிறாள் பூரணம். அவள் எதுவுமே? பேசாமல் மெல்லத் தலை குனிகிறாள்.

''என்னடி? நடந்தது சொல்லனடி'' பூரணம் வற்புறுத்தியும் பத்மாவின் வாய் திறக்கவே இல்லை. வெறும் கல்லாகவே அவள் நின்றிருந்தாள்.

''நானே! சொல்லுறன். ஃவொறினுக்குப் போகப்போறனெண்டு பத்மா சொல்ல நான் சொன்னனான். அம்மா சீதனம் தர வேணுமெண்டு கேக்கிறதாலைதானே பணம் சம்பாதிக்க வேணுமெண்டு நீர் நினைக்கிறீர். அம்மாவைச் சரி செய்யிறது என்ரை பொறுப்பு, உம்மைத் தவிர, வேறை ஒருத்தரையும் நான் மாிபண்ணமாட்டனெண்டும் நான் சொன்னனான். அனால் அதை இவகேக்கவுமில்லை. என்ரை பேச்சை மதிக்கவுமில்லை.'

''எனக்குத் தெரியாமல்ப் போச்சே.''

''ஃவொறினுக்கு ஃவிளையிற் நீர்எடுக்கிற அந்த நிமிஷமே நான் உம்மை மறந்திட்டனெண்டதை நினைச்சுக் கொள்ளும், அது வரையும் நல்லா, யோசிச்சு, ஒரு நல்ல முடிவெடுக்க நான் அவகாசம் தந்திருக்கிறனெண்டுகூடச் சொன்னனான். நான் சொன்னதை மட்டுமில்லை, என்னையே அவமதிச்ச பிறகும் நான் அவவை விரும்பிறதுக்கு என்ன? மச்சாளே?''

''சத்தியமாய்த் தம்பி எனக்கிதொண்டுமே தெரியாது. இப்பிடியெண்டு தெரிஞ்சிருந்தால் பத்மாவைப் போகவிட்டேயிருக்க மாட்டன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கல்யாணம், சீதன விஷயங்கள் எல்லாம், நீங்கள் நினைக்கிற மாதிரி, ஒருநாள் மேடைக்கூத்துக்கு வேஷம் போட்டுக் கலைக்கிற விஷயமில்லை.'' இவ்வளவு நேரமும் மற்றவர்கள் பேச அவகாசங் கொடுத்து மௌனமாயிருந்த பத்மா பேசியதில், எல்லோரும் ஆச்சரியமாய் அவளையே பார்க்கிருர்கள்.

'' ஆசை, மோகம் வாழ்க்கையிலே எல்லா நாளுமே நிலைக்கிறதில்லை. ஆசைக்கு அறுபது நாளும், மோகத்துக்கு முப்பது நாளுமாய்த் தொண்ணூறு நாட்களை வரையறுத்து வைத்தவன் எவ்வளவு கெட்டிக்காரன் அப்பஎன்ன சீதனத்தைநீ கொண்டு வந்தாய்? எண்டு ஒரு நாளாவது கேட்காத புருஷன் இருக்கவே மாட்டான்.''

''உன்ரை பிரசங்கத்தை இப்ப நிப்பாட்டமாட்டியே பத்மா'' கோபமாய் உறுமிய தாயின் வார்த்தைகளை இலட்சியம் பண்ணுதவளாய்த் தன் பேச்சைத் தொடங்கிருள் பத்மா.

''எங்கடை சமுகத்திலே இந்தச் சீதன விஷயத்தாலே, புகுந்த வீட்டிலை இருந்து துரத்தப்பட்டுப், போதாதுக்குக் கையிலும் காலிலுமாய் ஒவ்வொரு குழந்தைகளையும் சுமந்து கொண்டு, வாழா வெட்டியாய்ப் பிறந்த வீட்டிலே கண்ணீரும் கம்பலையுமாய் இருக்கிற எத்தனையோ பெண்களை நான் பாத்திருக்கிறன். அப்பிடிக் கவலைகளைச் சுமந்து கொண்டு வாழிறதிலும் பார்க்க, திருமணமாக எனக்கு விதியில்லையே எண்டு ஒரு கவலையோடை வாழிறது எவ்வளவோ மேல்'' ''பொத்தடி வாய்'' நிதானமாய் பேசிக் கொண்டிருந்த பத்மாவை அடக்கி வைத்த பூரணம் அவர்களிடம் கெஞ்சுகிருள். ''தம்பி குமார், தெரியாமல் என்ரை பிள்ளை பிழை விட்டிட்டாள் அதைப் பெரிய மனசு பண்ணி பத்மாவை மன்னிச்சிடுங்கோ. மச்சாள் தம்பிக்குக் கொஞ்சம் எடுத்துச் சொல்லுங்கோ''

பூரணம் எவ்வளவு கெஞ்சியும், எதுவுமே தெரியாதது போலக் குமாரின் தாய் அமர்ந்திருந்தாள். ''வெளிநாடு போய் வந்த ஒவ்வொருத்தர்ரை வண்டவாளமும் எனக்குத் தெரியும். எனக்குத் தேவை என்ரை மனசறிஞ்சு, என்ரை பேச்சை மதித்து நடக்கிற மனைவி'' ''ஒரு ப்ளஸ் போயின்ரை விட்டிட்டீங்கள் அடுக்கடுக்காய் அவளோடை வரப் போற சீர்வரிசைகளை விட்டிட்டீங்களே'' ''அதுக்காகத் தெரு வோரத்துக் குப்பைகளை யெல்லாம், நடு வீட்டுக்கை கொண்டு வந்து வைக்க நான் தயாரில்லை.'' ''ஏன்? ஒருத்தி கண்ணியமில்லாதவளாய் நடந்திட்டால் அதுக்கா, எல்லாரையும் அந்த வட்டத்துக்கை அடைக்கிறியள்'' ''நீ! கண்ணியமானவள் என்றதற்கு என்ன உத்தரவாதம்?'' ''ஏன் நல்ல விஷயங்களே உங்கடை மனதுக்குத் தோன்றுகிறதே இல்லையா?'' ''கடவுளே! இதென்ன சோதனை? பத்மா உன்னைக் கையெடுத்துக் கும்பிடுறன் பேசாமல் இருக்க மாட்டியே? குளம்பிப் போய்க் கிடக்கிறகுட்டையை இன்னும் மின்னும் ஏனடி குளப்பிறுய்?''

இரு கைகளையும் நெஞ்சில் குவித்து இறைஞ்சுகின்ற தாயினைப் பார்வையாலே ஒரு வெட்டு வெட்டுகிருள் பத்மா. ''ம்! சாதாரணமா ஆணும், பெண்ணும் சேர்ந்து செய்யிற தவறுக்குப், பெண்ணுக்கு மட்டுமே அடையாளத்தைக் கொடுத்து தண்டனையை அந்தக்கடவுளே கொடுத்திருக்கிற போது ஒரு பெண்ணின்ரை தூய்மையைப் பற்றிக் கேவலம் சாதாரண மனுஷரான உங்களிட்டை வாதிட்டு, உங்களை நம்பவைக்கவும் முடியாது. அதே நேரத்திலே நம்பவைக்க வேணுமெண்ட அவசியமும் எனக்கில்லை. கண்ணியமும், தூய்மையும் உடலிலே இல்லை. அது உள்ளத்திலேதான் இருக்கவேணும். அது இல்லாத உங்களோடை நான் பேசியே இருக்கக் கூடாது.''

குமாரின் கீழ்த்தரமான கேள்விகளுக்குப் பதிலடி கொடுத்துவிட்டு, விசுக்கென எழுந்து உள்ளே போகிருள் பத்மா.

''தம்பி ராமாயணத்திலை கோடு தாண்டிப்போன சீதையைக்கூட ராமர் மன்னிச்சு ஏற்றுக் கொண்டதாய் நீங்கள் படிக்கேல்லையே? ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' மன்னிக்கிறதுக்கு உங்கடை மகள் சீதையுமல்ல, நான் ராமனுமில்லே. அது வெறும் கதை. இது நடைமுறை வாழ்க்கை. அம்மா எழும்புங்கோ நாங்கள் போவம்.'' போயிற்று வருகிறோம் என்று கூடச் சொல்லாமற் கொள்ளாமல் எழுந்து போகின்ற அவர்களையே வெறிக்கப் பார்த்தவாறு நிற்கிறாள் பூரணம்.

நொந்த மனதின் வேதனைச் சுமைகளோடு அன்று முழுவதும் அழுகிறாள் பூரணம். நினைவுக்குமிழ்கள் மனதுள் எழுந்து வெடித்துச் சிதறி, மேலும் மேலும் பூரணத்தை வேதனைக்குள்ளாக்கியது. சாப்பிட மறுத்து, கண்ணீர் வடித்துத், இட்டி, ஏசி முரண்டு பண்ணியவளை, வனிதாவும் ஜெயமும் சமாதானம் பண்ண முடியாமல் போகவே, பத்மா எழுந்து வருகிறாள்.

'' அம்மா கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ ''

'' இனிமேல் யோசிக்க என்னடி இருக்கு?''

'' நான் ஃபொறினுக்குப் போகாமல் வீட்டிலிருந்தால் இண்டைக்கு ரஞ்சினி வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த வாழ்க்கை கிடைச்சிருக்குமோ?. வனிதாவும் ஜெயமும் இவ்வளவு தூரம் படிச்சு முன்னுக்கு வந்திருக்க முடியுமோ? இந்த வசதிகள் வாய்ப்புகள் எங்களுக்குக கிடைச்சிருக்குமோ

'' உண்மைதான் ஆனால் உன்ரை வாழ்க்கை''

'' என்னம்மா பெரிய வாழ்க்கை? அந்த நேரம் குமாரத்தான் சொன்னதைக் கேட்டு, அவற்றை வற்புறுத்தலாலே மாமி சம்மதிச்சுக் கலியாணம் நடக்குதெண்டு வையுங்கோ சீதனப்பிரச்சனை பின்னாலே வராதெண்டது என்னம்மா நிச்சயம்? ஒருவேளை என்ரை விதி பிரச்சனைப்பட்டு வாழா வெட்டியா வீட்டை திரும்பி வந்திட்டால் எண்டு நினைச்சுப்பாத்தன். பின்னுக்கு வளர்ந்து கொண்டிருக்கிற தங்கச்சியவை, அவைக்கொரு நல்ல வழியை எப்படிக் காட்டப் போறன் எண்டு தனிச்சு நிக்கிற உங்களை நினைச்சுப் பாத்தன். ரஞ்சனி லவ் பண்ணியிருக்கிற வீட்டாக்களை நினைச்சுப் பாத்தன். இவை எல்லாத்தோடும் என்ரை எதிர்காலக் கனவெல்லாம் அடிபட்டுப் போய்விட்ட மாதிரித் தானம்மா தெரிஞ்சது.'' ''சுமைகளைச் சுமக்கிற சுமை தாங்கியா நானிருக்க, நீ ஏன் இதுகளை எல்லாம் உன்ரை தலையிலே போட்டனீ.''

''அம்மா என்றைக்கும் காதலைக் கடமை வென்றதாய்த்தான் சரித்திரமிருக்கு. அதனாலே தான் நான் இந்த முடிவுக்கு வந்தனான். என்ரை வாழ்க்கை உங்கடை மனம் போல அமையாட்டிலும் என்னாலே எத்தினை மனங்கள் சந்தோஷமாயிருக்கு, அதைக் கொஞ்சம் நினைச்சுப் பாருங்கோ''

''மற்றவையின்ரை சந்தோஷங்களை. உன்னுடைய மனத் திருப்தியாய்க் கொள்ள என்ரை ராசாத்தி உன்னாலே எப்பிடியடி முடிஞ்சுது?''

''இரண்டு கையுமெடுத்துக் கடவுளைக் கும்பிடேக்கை கடவுளே, ஏழ்மைக்குள்ளை, என்னைப் போலப் பெண்களைப் படைக்கிற நீ, மனதையும் கல்லாய்ப் படைச்சிடு. அதிலே அன்பு, ஆசாபாசம், பருவஉணர்வுகள் இவையெதுவுமே இல்லாட்டில்த்தான் என்னைப் போன்ற ஏழைப்பெண்கள் நிம்மதியா காலம் தள்ள முடியும் என்று கேக்கிறனான்''

''ஏன் பத்மா இப்பிடி எல்லாம் விரக்தியாக் கதைக்கிறாய்?''

தன் மனதிற்குள் அடக்கி வைத்திருந்த அத்தனையையும், அதற்குரிய நியாயங்களோடு பத்மா கூறி முடித்ததில் அவளை அப்படியே அணைத்துக் கொண்டு சில நிமிஷங்கள் அழுது தீர்க்கிறாள் பூரணம். பத்மா சொன்னதெல்லாம் சரியென்று ஏற்கவும் முடியாமல் பிழையென ஒதுக்கவும் முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

குமாருக்கு றிஜிஸ்ற்றேசன் முடிந்து விட்டது இவர்கள் எவருமே றிஜிஸ்ற்றேசனுக்குப் போகவே இல்லை. எப்படிப் போவது? சின்னவயதிலிருந்து பத்மாவுக்கென்று நிச்சயம் செய்து வைத்திருந்து விட்டு இடையில் முறித்துக் கொண்டு போன அவர்களை நினைக்கப் பூரணத்தின் வயிறு பற்றி எரிந்தது. அந்த வேதனைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவே ஜெயம் அவளிடம் ஓடி வருகிறுள் ''அம்மா அக்கா என்ன? சொல்லிரு கேட்டுங்களே''

''என்னவாம்?''

''திரும்பவும் ஃவொறினுக்குப் போகப் போருவாம்''

'ஆமோ? அப்பிடி ஒரு எண்ணம் இனியும் இருக்காமோ?''

ஈஸிச் சியரில்ச் சாய்ந்திருந்த பத்மாவைத் தேடி வருகிறுள் பூரணம்.

''பத்மா ஜெயத்துக்கு என்ன சொன்னனீ?''
''ஒண்டும் சொல்வேலேயே.''

''என்னக்கா நீங்கள் திரும்பவும் ஃவொறினுக்கு போகப் போறனெண்டு நீங்கள் சொல்லேல்லேயே?''

''ஓ! அதைச் சொல்லுறியே?'' நிதானமாகச் சொல்லிவிட்டு மௌனமாகிறுள் பத்மா. அவளின் குனிந்த தலையைப் பிடித்து நிமிர்த்தியவாறு, தனக்குள் அடக்கி வைத்திருந்த கவலைகளுக்கு வடிகாலாய், ஆவேசமாகவே கேக்கிறுள் பூரணம்.

''ஏன்ரி? பத்மா ஒருதரம் நீ போய் வந்ததோடை வந்திருக்கிற மனச்சங்கடங்கள் போதாதே?''

''உலகம் ஆயிரம் சொல்லும். ஏனெண்டால் அதுக்கு விழுந்த பாட்டுக்குக் குறிசுட்டுத்தான் பழக்கம். என்றைக்கும் எங்களுக்கும், எங்கடை மனச்சாட்சி தான் நீதிபதியாய் இருக்க வேணும்''

''கடவுளே! அப்ப பணமில்லாட்டிலும் நிம்மதியாயிருந்தன். ஆனல் இப்ப எல்லாம் இருக்கு மனதுக்கு நிம்மதி மட்டும் இல்லேயே?''

''ஏனம்மா உங்களுக்கு உங்கடை பிள்ளையிலே நம்பிக்கையில்லேயே? கெட்டுப் போற ஒரு பெண் எங்கை இருந்தாலும் கெடத்தான் செய்வாள்''

''உண்மைதான் ஆனல் அடுத்தவை என்ரை பிள்ளையை நையாண்டி பண்ணிறதைக் கேட்டு என்ரை நெஞ்சு பொறுக்குதில்லேயே?''
''அடுத்தவையைப் பற்றி நீங்களேன் கவலைப்படுறியள். என்ரை மனச்சாட்சி, என்னைப் பெற்ற தாய், சகோதரங்கள் இவையளுக்குக் கட்டுப்பட்டுக் கண்ணியமாய்த், தூய்மையாய் வாழவேணும் எண்டதுதான் என்ரை விருப்பம். நீங்கள் என்னிலே வைச்சிருக்கிற நம்பிக்கை என்றைக்குமே வீண் போகாது''

''நீ ஆயிரங் காரணத்தைச் சொல்லு பத்மா. எனக்கெண்டால் இனி நீ போறது எனக்குத் துப்பரவாய் விருப்பமில்லே.''

''எனக்காக இல்லே எத்தனையோ லட்சியங்கள், கனவுகளைச் சுமந்து கொண்டிருக்கிற வனிதாக்காகவும், ஜெயத்துக்காகவும் நான் திரும்பவும் போகத்தான் போறன்.''

''கிணிங்'' வெளியே சைக்கிள் மணியோசை கேட்டு வந்தது யாரென்று பார்க்க வனிதா ஓடிப் போகிறுள். எதுவுமே பேசத் தோன்ருமல் விட்டு முகட்டையே வெறிக்கப் பார்க்கிறுள் பூரணம்.

''ஐயோ! அம்மா'' வெளியே போன வனிதாவின் அலறல் கேட்டு எல்லோரும் ஒருவர் பின் ஒருவராய் வெளியே வருகிருர்கள்.

''என்னடி வனிதா ஏன் கத்தினனீ?''

''தந் ... தந்தி வந்திருக்கு'' தட்டுத்தடுமாறியவாறு கூறி முடிக்கிறுள் வனிதா. சட்டென்று தந்தியினை எட்டிப் பறித்துப் பார்க்கிறுள் பத்மா. கூடவே ஜெயமும் தலையை நீட்டிப் பார்க்கிறுள். பார்த்த வேகத்தில் தலைசுற்றிக் கீழே விழப் போன பத்மாவைத் தாங்கிக் கொள்கிறுள் ஜெயம்.

''என்னடி என்னண்டு சொல்லுங்கோவன்ரி''

''அம்மா. அம்மா ரஞ்.. சினி... ரஞ்சினி அக்கான்ரை புருஷன் அக்ஸிடென்ரிலே மீற்ப் பண்ணி''

''மீற்ப் பண்ணி''

''மோசம் போயிற்ருராம்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி வகுத்த பாதையிலே மனிதன் போய்க் கொண்டிருக்கையிலே, இது தான் நடக்கும் என்று யாரால்த்தான் அறுதியிட்டுக் கூற முடியும்? வருகின்றவைகள் இன்பமோ துன்பமோ அது எதுவானாலும் எல்லாவற்றையும் மனிதன் ஜீரணித்துத் தான் ஆகவேண்டும்.

கண்மூடிக் கண் திறப்பதற்குள் எல்லாம் நடந்து முடிந்து மாதம் இரண்டாகி, நாட்கள் உருண்டுகொண்டிருந்தன. பத்மா என்ற இஞ்சின் வனிதா, ஜெயம், அம்மா அத்தோடு புதிதாக வந்து சேர்ந்திருக்கிற ரஞ்சினி, அவள் குழந்தை சுயோ என்ற இந்தப் பெட்டிகளை, வாழ்க்கை என்ற தண்டவாளத்தில் வைத்து இழுத்துச் செல்லத் தான் வேண்டும். அதற்கு வேண்டிய பணம் என்ற எரிபொருளை அவள் தேடித்தான் ஆகவேண்டும்.

ஒரு வழிகாட்டிமரம் வழியை மட்டும் தான் காட்டி நிற்குமே யல்லாமல், அது ஒரு வழியினைத் தேடிப் போவதே இல்லை. அது போலவே பத்மாவும் வாழத் தலைப்பட்டு விட்டாள்.

அடுத்த வாரம் பத்மாவுக்கு ஃவிளை ற் இப்பொழுது பூரணம் அவளைத் தடுக்க வில்லை. ஆனால் அவள் மனம் மட்டும் அழுது கொண்டேயிருந்தது.

"பத்மா நீ ஒரு சந்தனக் கட்டையடி. தனக்கென்று எந்தச் சுகங்களையும் எதிர் பாராது, தன்னைத் தேய்த்துப் பிறருக்கு உதவிக் கொண்டிருக்கிற மாதிரி நீயும் உன்ரை வாழ்க்கையைத் தியாகம் பண்ணீட்டியே?"

முடிந்தது. (கற்பனை)


எமது நல்வாழ்த்துக்கள்

முல்லைத்தீவு

கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

முல்லைத்தீவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Visit our show rooms**

FOR

# J. V. C. Televisions
&
# Telefunken Televisions

# MAHARAJA
## INVESTMENTS LTD.

**122, K.K.S. ROAD, JAFFNA.**

Telephone: **24267**

## இளமையிற் கல்

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. - குறள்

★ ★ ★ ★ ★

மில்க்வைற் தயாரிப்புகளுக்கு நீங்கள் அளிக்கும்
ஆதரவு நாட்டின் நற்பணிக்கே.
ஆதரவு அறப்பணியைப் பெருக்கும்.

★ ★ ★ ★ ★

## மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல - 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: **23233.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## With Best Compliments

from

# Pattakannu Subbiah Achary
# & Sons

**Jewellers & Gem Exporters**

"SOVEREIGN HOUSE"

**102, NEW CHETTY STREET,**
**COLOMBO - 13**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுங்காலமாக பம்பலப்பிட்டியில்
சிறந்த உணவுவகைகட்கு
பெயர் பெற்றவர்கள்

MAY FAIR

கோழி
இடியப்பக் கொத்து
கொத்து ரொட்டி
புரியாணி
மசாலா

இவைகட்கு இன்றே நாடவேண்டிய ஸ்தாபனம்

MAY FAIR
519, GALLE ROAD,
BAMBALAPITIYA,
COLOMBO - 4
Telephone : 84358

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With Best Compliments**

**from**

# GOOD LUCK EMPORIUM

Wholesale & Retail Dealers in Textiles.
Specialists for sarees

T'phone: **548525**

**137, FIRST CROSS STREET,**
**COLOMBO - 11.**

With best compliments

from

## KANAPATHY'S

REPUTED LADIES & GENTS TAILORS

T' phone : **85100**

135, GALLE ROAD,
COLOMBO - 4.

With Best Compliments

from

## CHRISTOMBU

**FARM PRODUCTS**

No. 2, HAIG ROAD
**BAMBALAPITIYA.**

T. P. : **588569**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**DOLLAR CORPORATION**

14, Dam Street,
COLOMBO.

178, Stanley Road,
JAFFNA.

Sole distributors :

DOLLAR BRAND ALUMINIUM

&

EVER SILVER WARES

With the Best Compliments

from

**N & N CRUSHERS**

**TRAVEL & TRANSPORT SERVICE**

MAIN ROAD,
TELLIPPALAI.

T/phone : **262** Chunnakam

**VIJITHA TRAVELS**

**T. GNANALINGAM**

**129, MAIN STREET,**
**JAFFNA.**

T. Ph. No. **23795**

With the Best Compliments

from

**VENUS**

**SPORTS CLUB**

(Members only)

*Liquor available for members only*

( Tennis court,
Caram / Badminton court )

K. K. S Road, Tellippalai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கல்வியும் நூலகங்களும்

கலாநிதி. இ. பாலசுந்தரம்
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை, கொழும்பு பல்கலைக்கழகம்.

## 1. சிறுவர் ஆண்டு

1979ம் ஆண்டைச் சர்வதேச சிறுவர் ஆண்டாக ஐ. நா. ஸ்தாபனம் பிரகடனப் படுத்தியுள்ளது. அதற்கு ஏற்ற வகையில் சிறுவர்களின் கல்வியிலும், நலத்திலும் பெரும்பணி ஆற்றிவரும் யுனிசெவ் (United Nations Educational children fund) எனப் படும் தாபனம், சிறுவர்களின் நலத்திற் குரிய பல நற்பணிகளிலும், குறிப்பாக அனைத்து நாடுகளிலுமுள்ள சிறுவர்களின் கல்வி, சுகாதாரம், நல்லுணவு முதலிய பல துறைகளிலும் அபிவிருத்தியடிப்படை யிலான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. வளர்முக நாடுகளின் குழந் தைகளின் போசாக்கு பெரிதும் பாதிக் கப்பட்டிருப்பதாகவும், அவர்களுக்குரிய கல்வி வசதி திருப்தியில்லாதிருப்பது பற்றி யும் யுனெஸ்கோ அறிக்கை தெரிவித்திருக் கிறது. வளர்முக நாடுகளிலே கல்வியின்மை அந்நாடுகளின் விருத்தியைப் பெரிதும் பாதித்துள்ளது. அன்றியும் செல்வந்த நாடு களிலும் கணிசமான வீதத்தினர் கல்விய றிவு இன்றியே காணப்படுகின்றனர். உதா ரணமாக குபேரநாடெனக் கூறப்படும் அமெரிக்காவிலும் 230 இலட்சம் பேர் கல்வியறிவு அற்றவராகவே உள்ளனர் இந் நிலையில் செல்வந்த நாடுகளிலும் சரி வளர் முக நாடுகளிலும்சரி கல்வியின் அவசியம் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இன்றைய இளஞ்சிறார்களே வருங்கால சந்ததியினர் என்ற அடிப்படையிலும், இள மையிற் கல்வி சிலையில் எழுத்தென்பதா லும், வருங்கால சமுதாயத்தை வளமிக்க நாட்டுக்குப் பயன் படத்தக்க, பிரஜைக ளாக்கும் அடிப்படைக் காரணிகளின் பின் னணியிலேயே 1979ம் ஆண்டை யுனெஸ்கோ சிறுவர் ஆண்டாகப் பிரகடனப்படுத்திற்று. அத்தகைய பிரகடனத்தின் பின்னணியில் ஒவ்வொரு நாட்டிலும் சிறுவர் ஆண்டு விழாவும், அதனோடு ஒட்டிய அபிவிருத்திச் செயல் திட்டங்களும் இடம் பெற்றன.

நமது எதிர்கால சந்ததியினருக்கான உடல் ஆரோக்கியம். தொழில் வாய்ப்புகள், ஆற்றலுக்கேற்ற வேலைகள், சந்தர்ப்பங்கள் அவர்களுக்கான முழுமையான ஆளுமை முதலிய இன்னோரன்ன பிரச்சனைகளைப் பற் றிச் சிந்திக்க வேண்டும். நாம் இப்பிரச் சினைகளின் பின்னணியிலேயே சிறுவர்களின் கல்வி மிகமிக முக்கிய இடத்தைப் பெறு கின்றது. குழந்தைகளின் எதிர்காலம் அவர் களின் இளமைக்காலக் கல்வியின் அடிப்ப டையிலேயே அமைகிறது. எதிர்கால வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் வித்தி டும் காலம் சிறுவர் பருவமே. சிறுவர்களின் கல்வி வளர்ச்சியையும், அவர்களின் ஆளுமை (creativity) வளர்ச்சியையும், தூண்டிவிடக் கூடிய வழிமுறைகளையும், வசதிகளையும், வாய்ப்புகளையும் செய்து கொடுக்கவேண்டும். அத்தகைய வாய்ப்புக்களில் ஒன்றே சிறுவர் நூலகங்களாகும். நூலகங்கள் கல்விக்கு வசதியாக அமைக்கப்படுபவை. அந்த நூல கங்களைப் பயன்படுத்தக் கூடிய வாய்ப் புக்களையும், பழக்கங்களையும் ஏற்படுத்திக் கொடுப்பதும் மிக இன்றியமையாததாகும்.

## 2. சிறுவர்கள்

சிறுவர்கள் எனக் கூறும் போது சுமார் ஐந்து வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப் பட்டோர்களையே நாம் கருதுகின்றோம். நம் நாட்டில் 4 வயதானதும் Nursery அதாவது பாலர் பாடசாலைக்குச் சிறுவர் களை அனுப்புகின்றார்கள்.

5 வயதானதும் பாடசாலையில் பாலர் வகுப்பிற் சேர்க்கிறார்கள். அவ்வாறு சேர்ந்து 7 அல்லது 8ஆம் வகுப்பு வரையும் பயி லும் மாணவ மாணவிகளின் சமுதாயத் தையே நாம் சிறுவர்கள் என்ற பிரிவில் அடக்கி, அவர்களது கல்விப் பிரச்சினை பற்றி ஆராய்கின்றோம்.

சிறுவர்களின் பருவங்களை மூன்றாகப் பகுத்து இத்துறை அறிஞர் ஆராய்ந்துள் ளனர். முதலாவது 5 — 8 வரையுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவம். இப்பருவத்தில் அவர்களிடம் "தான்" என்ற உணர்வு மேலோங்கி நிற்கிறது; மிக வேகமாக இயங்கிக் கொண்டிருப்பார்கள்; நிறைய ஆடலும் பாடலும், அசைவும் கூக்குரலும் அவர்களது பொழுது போக்காக இருக்கும்; இது என்ன? எப்படி? ஏன்? என்று நித்தமும் வினவும் பருவம் இது; பாட்டி கதைகளை விரும்பும் பருவமும் இதுவே.

அடுத்ததாக 9 – 11 வரையுள்ள பருவம். இதனை நடுநிலைப்பருவம் என்பார்கள். இப்பருவத்தில் "நாங்கள்" என்ற மனோபக்குவம் அவர்களிடம் ஏற்படுகிறது; 'குழு' மனோபாவம் தோன்றுகிறது; இக்காலக்கட்டத்தில் விளையாட்டு, கலையம்சம், எண்ணங்கள், கற்பனை வெளிப்பாடுகள் முக்கிய இடம்பெறுகின்றன. இறுதியாக 11 – 14க்குமிடைப்பட்ட பருவத்தைக் குறிப்பிடலாம். தம் வயதினரோடு சேர்ந்து விளைவாகும் மனோபாவம் ஓங்கிய நிலை காணப்படும். இனி என்ன செய்வோம்? என நித்தமும் வினவி, சிந்தித்து, திட்டமிட்டு செயல்படும் பருவமே இது; பிறர் கவனத்தைக் கவருதல், தன்னைப்பிறர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் (Recognition) உயர்ந்து காணப்படும் பருவமும் இதுவே.

எனவே, சிறுவர்களின் இந்த மூன்று படி முறை நிலைகளையும் மனத்திற் கொண்டு ஆசிரியர்களும், பெற்றோர்களும் அவர்களின் மனோவியல்புக்கும் - சிந்தனைப் போக்குக்கும் ஏற்ற வகையில், சிறுவர்களை கல்வித் துறையில் நாட்டம் கொள்ளச் செய்ய வேண்டும்.

*பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்*
*சால மிகுத்துப் பெறின்.*

என்று திருவள்ளுவர் கூறிய பொன்மொழியை ஈண்டு சிறுவர்கல்வியிலும் நினைவு கொள்ள வேண்டும். அளவறிந்தே எதனையும் ஊட்ட வேண்டும். சிறுவர்களின் விடயத்தில் "அதி ஆர்வம்" அளவுக்குமீறிய கண்காணிப்பும்-கட்டுப்பாடும் ஆபத்தானது. எனவே சிறுவர்களின் மனப்போக்குக்கு முதன்மை அளித்தே அவர்களை வழிப்படுத்த வேண்டும்.

## 3. சிறுவர்களும், கல்வியும்

18 ம் நூ - ல் பிரான்சில் வாழ்ந்த ஜீன் ஜாக்ரூசோ என்பவர் புதிய கல்விச் சிந்தனைகளுக்கு வித்திட்டவர் எனக் கருதப்படுகின்றார். சிறுவர்களுக்குரிய கல்வியில் ஆரம்பத்தில் புலன்களுக்குப் பயிற்சியளித்தலே, இப் பருவக்கல்வியின் குறிக்கோளாக இருக்கவேண்டும் என்கிறார். அதேவேளையில் இப் பருவத்திற் கூட்டுக் கல்வியினையும் அவர் வற்புறுத்தியுள்ளார். சிறுவர்களின் இறுதிப் பருவத்தில் பொருள்களைப் பயன்படுத்தல், அறிவுப் பயிற்சி என்பன இப் பருவக்கல்வியின் சிறப்பியல்புகளாக அமைய வேண்டும் என்கிறார்.

"இளமையிற் கல்" என்று அறிவுரை கூறினார் ஔவைப் பிராட்டி. அவரே "ஓதுவது ஒளியேல்" என்றும் கூறினர். மேலும் "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" "இளமையில் முயற்சி முதுமையில் காக்கும்." ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது", "தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற பழமொழிகளிலிருந்தும் நாம் சிறுவர் கல்வியின் இன்றியமையாத தன்மையினை உணர்ந்து கொள்கின்றோம். இவ்வரிய கருத்துப் பின்னணிகளின் ஆழத்தினை உணர்ந்தே ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞான, கலாசாரத்திற்கான நிறுவனம் தமது அங்கத்துவ நாடுகளிடையே சிறுவர் கல்வி வளர்ச்சிக்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

எதிர்காலச் சந்ததியினராக விளங்கப் போகும் சிறுவர்களின் முழுமையான ஆளுமை விருத்தியும், கலாசாரப் பண்பு விருத்தியுமே கல்வியின் தலையாய நோக்கங்களாகும். இந்த அடிப்படை நோக்கங்களைப் பள்ளிக்கூடங்களும், மற்றும் கல்வி நிறுவனங்களும் கருத்திற் கொண்டிருக்கவேண்டும். இவற்றுடன் சமூகத்தின் பொருளாதாரச் சூழலுக்கு, முக்கியமாகத் தொழிற் சூழலுக்கு மாணவரின் கல்வி விருத்தியை அமையச்செய்ய வேண்டும் என்ற கருத்து இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் வலுவடைந்து வருகிறது. விஞ்ஞான தொழில்நுட்ப விருத்தியினைத் தோற்றுவிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதுடன், புதிய செயல்முறைகளையும், நவீன கண்டுபிடிப்புக்களையும், புதிய ஆக்கங்களையும் பயன்படுத்தவும், தொழில் பிரிவுகளை ஏற்படுத்தவும், பொறிகளினதும், கருவிகளினதும், பயன்பாட்டினை அதிகப்படுத்தவும் நமது கல்வி அமைய வேண்டும். அவ்வகையில் சிறுவர் கல்வியும், அதற்கு அடிப்படையாக அமைவதோடு அவைபற்றிய அறிவை ஊட்டத்தக்க வகையில் நூலகங்களும் அமையவேண்டும்.

## 4. சிறுவர் கல்வி நிலையங்கள்

சிறுவர்களுக்குரிய கல்வி நிலையம் பாடசாலைகள் மட்டுமே என்ற தப்பெண்ணத்தை நாம் மறந்துவிட வேண்டும். "உலகம் ஒரு நாடகமேடை" என்று ஆன்றோர் கூறியது போன்று; சிறுவர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் வாழ்கின்ற- பழகுகின்ற- பொழுது போக்குகின்ற இடங்களெல்லாம் கல்விக்கூடங்களாகும். ஏனெனில் சிறுவர்கள் தாம் முதன் முதலாகக் காணும் விடயங்கள், காண்கின்ற காட்சிகள் அனைத்தையும்அந்த அந்த இடத்திலேயே தீரவிசாரித்து அறிந்து கொள்ளும் ஆர்வம் உடையோராகக் காணப்படுகின்றனர். எனவே அவர்களுக்குரிய ஆசிரியர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மட்டுமன்றி பெற்றோரும் - உற்றோரும் - உறவினரும் - நண்பரும் என்பதை நாம் மனதிற் கொண்டு செயற்பட வேண்டும்.

சிறுவர்களின் கல்வி நிலையம் பாடசாலைகளே என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், விருத்திக்கும் துணையாக அமைவன நூலகங்கள். சிறுவர்களின் அறிவு வளர்ச்சி அவர்கள் பாடசாலைக்குச் சென்று, கல்வி கற்பதனால் மட்டும் நிறைவு பெற்றுவிடுவதில்லை. பெற்றோரின் பங்கு, தம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் மிக முக்கியமானதாகும். வீட்டில் அவர்களது படிப்பிற்கேற்ற வசதிகளை அளித்து, ஊக்கம் ஊட்டவேண்டும். அத்துடன் தம் பிள்ளைகள் சிறுவயதிலிருந்தே நூலகங்களுக்குச் சென்று வாசிக்கும் பழக்கத்தைக் கடைப்பிடிக்க பெற்றோர் துணையாக அமைய வேண்டும்.

## 5. நூலகங்கள்

நூலகங்கள் என்று கூறும் போது, உலகிற் பல்வேறுபட்ட வகையிலான நூலகங்கள் காணப்படுகின்றன. பொது நூலகங்கள், (Public Library) பாடசாலை நூலகங்கள், (School Library) விசேட நூலகங்கள், (Special Library) பல்கலைக் கழக நூலகங்கள், (University Library) சிறுவர் நூலகம், (children Library) தேசிய நூலகம் (National Library) எனப்பல வகையான நூலகங்கள் உள்ளன. இத்தகைய நூலகங்களுட் பல வளர்ந்தோருக்கே உரியனவாகும். அவற்றுள்ளும் சில நூலகங்கள் குறிப்பிட்ட சில பிரிவினருக்கேயுரியன. உ+மாக விசேட நூலகங்களான T. R. I., R. R. I. or C. I. S. I. R Library முதலிய நூலகங்களைப் பயன்படுத்தும் உரிமை அந் நூலகத்தோடு தொடர்புடைய ஆய்வாளருக்கேயுரியதாகும். அதுபோன்றே பல்கலைக்கழக நூலகங்களும் பல்கலைக்கழக மாணவர், விரிவுரையாளர் ஆகியோரால் மட்டுமே பொதுவாகப் பயன்படுத்தப்படுவன. இத்தகைய நூலகங்களிலே கிடைக்கக் கூடிய நூல்களும் அவற்றைப் பயன்படுத்துவோரின் தேவைகளுக்கேற்றனவாகவே காணப்படும்.

ஆயினும் இவற்றையும் சில வகையில், சிறுவர்களுக்குப் பயன்படுத்தலாம். அதாவது, இத்தகைய நூலகங்களில் அவ்வப்போது கிடைக்கக்கூடிய விளக்கப்படங்கள், அறிவியற் கருத்துப்படங்கள், பூகோள, விஞ்ஞான ரீதியான வர்ணப்படங்கள், பின்பாட்டு விளக்கப்படங்கள் என்பன சிறுவர்களுக்கும் பயன்படக் கூடியன எனக் கருதும் போது, அவற்றைப் பயன்படுத்தும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் அவற்றை எடுத்துச் சென்று தம் பிள்ளைகளுக்குக் காட்டி, அவர்களுக்கு அவற்றில் ஆர்வம் மேலிடச் செய்யலாம். இவ்வகையில் ஏனைய உயர்தர நூலகங்களும் சிறுவர்களுக்குப் பயன்படலாம். அவற்றை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம் எனப் பெற்றோரும், ஆசிரியர்களும் அறிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. சிறுவர் நூலகம்

மேலே குறிப்பிட்ட நூலகங்களைப் போலன்றிச் சிறுவர்களுக்கென்றே அமைக்கப்பட்ட நூல்நிலையமே சிறுவர் நூலகமாகும். சிறுவர்களின் மனதைக் கவரத்தக்க சித்திரங்கள், ஓவியங்கள் முதலிய சுவர் ஒட்டிகளையும், அவர்களது வயதிற்கும், உளப்போக்குக்கும் ஏற்ற வர்ணப்படங்களையும், சுவை நிறைந்த கதைகளையும், படங்களோடு இணைந்த அறிவியல் நூல்களையும் கொண்டனவாக சிறுவர் நூலகங்கள் அமைந்திருக்கும். தனியாக அமைக்கப்பட்ட சிறுவர் நூலகங்கள் இலங்கையில் இல்லை. மேலைநாடுகளில் இத்தகைய நூலகங்கள் அமைந்திருக்கின்றன. இத்தகைய நூலகங்களின் பயன்பாட்டையும், தேவையையும் உணர்ந்த நம்நாட்டு நூலக அமைப்பாளர்கள் பொது நூலகங்களின் ஒரு பகுதியாகச் சிறுவர் நூலகங்களை அமைத்துள்ளனர். உதாரணமாக கொழும்பு மாநகரசபையிற் பொது நூலகத்தில் அமைந்துள்ள சிறுவர் நூலகப் பகுதியைக் குறிப்பிடலாம். இது போன்றே British Council Libraryயிலும் சிறுவர் பகுதி தனியே அமைக்கப்பட்டுள்ளது. தனியான சிறுவர் நூலகம் நம்நாட்டில் பரவலாகப் பல இடங்களிலும் அமைக்கப்பட வேண்டும். இதற்கு புனிசிவ் தாபனம் முன்வர வேண்டும்.

சிறுவர் நூலகங்களே முதன் முதலாக சிறுவர்களுக்கு பல நூல்களை அறிமுகஞ் செய்கின்றன. இந்நூலகங்கள் சிறப்பு இயல்புகளைக் கொண்டதாக அமைந்திருக்கும். சிறுவர்கள் பலவகை வர்ணங்களினாலும் கவரப்படுவதை நாம் அறிவோம். அதன் காரணமாகவே அங்கு வைக்கப்பட்டுள்ள நூல்கள் சிறுவர்களின் உள்ளத்தைக் கவரும் வண்ணம் கவர்ச்சியான அட்டைப்படங்களைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. சித்திரக்கதைகள், பாலர்கதைகள் முதலியன சிறுவர் நூலகத்திற் சிறப்பாக இடம் பெற்றிருக்கும். நூலகத்தின் சுவர்கள், கதவுகள், தளபாடங்கள் முதலியன வர்ணந் தீட்டப்பட்டு, சிறுவர்களுக்குக் களிப்பூட்டும் வகையில் அமைந்திருக்கும். சிறுவர் நூலகம் பொது நூலகத்தின் ஒருபகுதியாக அமைந்திருக்கும் போது, சற்று ஒதுக்குப் புறமாக அமைதல் அவசியமாகின்றது.

சிறுவர் நூலகங்கள், சிறார்களின் கல்விக் களமாக அமைவதால் அந்நூலகங்களிலே எத்தகைய நூல்கள் இடம்பெற வேண்டும் என்றும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். நூலகர், நூல்களைத் தெரிவு செய்யும் போது, அந்நூலகம் அமைந்திருக்கும் சுற்றுடலை அதாவது, அந்நூலகத்தைப் பயன்படுத்தப்போகும் சிறுவர் சமுதாயத்தைப் பற்றி அறிந்து கொண்டு அவர்களுக்கு ஏற்ற நூல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவர்களது மொழி, சமயம், பண்பாடு முதலான அம்சங்களையும் கருத்திற் கொண்டே நூல்களை வாங்கி வைத்தல் வேண்டும். உதாரணமாகக் கொழும்பு பொது நூலகத்தின் சிறுவர் பகுதியை எடுத்துக் கொண்டால், அங்கு ஆங்கில மொழி நூல்களே அதிகமாகக் காணப்படுகின்றன. அங்கு செல்லும் சிறுவர்களிற் கணிசமான தொகையினர் ஆங்கிலம் வாசிக்கக் கூடியோராக இருப்பதால் அவை பயன் உள்ளதாகக் காணப்படுகின்றன. எனவே சிறுவர்களின் உளவியல் அடிப்படையில் அவர்களைக் கவரத்தக்கதாக நூல் நிலையம் அமையும் போது தாமாகவே அங்கு செல்ல வேண்டும் என்ற மனோ எழுச்சியைச் சிறுவர்கள் பெறுவதன் மூலம் அவர்களது கல்வி வளர்ச்சி பெற ஆரம்பமாகிறது.

நூலகங்களிலுள்ள நூல்கள் பற்றிக் குறிப்பிடும் போது, இன்னுமொரு விடயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். குழந்தை இலக்கியம் என்ற பெயரில் நம் நாட்டில் வந்து குவிகின்ற கொலை, கொள்ளை, பாலுணர்வு குற்றச் செயல்கள் என்பனவற்றையே பெரும்பாலும் உட்பொருளாகக் கொண்ட நசிவு இலக்கியங்கள் நம் சிறார்களைச் சீரழிக்கும் ஆற்றல் கொண்டவை. அத்தகைய நூல்களை சிறுவர் நூலகங்களில் வைக்கக் கூடாது. அவற்றைச் சிறுவர் விரும்பிக் கற்க வாய்ப்பும் அளிக்கக் கூடாது. பாரதியார் முதல், அள. வள்ளியப்பா ஈறுகவுள்ள அருமையான குழந்தை இலக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிய சாத்தாக்களின் படைப்புக்களை நாம் நூலகத்தில் இடம்பெறச் செய்ய வேண்டும். ஈழத்திலே பண்டிதர் வீரகத்தி, இ. நாக ராஜன், இரா. சந்திரசேகரன், எம். ஏ. றஹ்மான், பா. சத்தியசீலன், நா. மகேசன் போன்ருேரின் இலக்கியப் படைப்புக்கள் நம்நாட்டுச் சிறுர்களின் நல்ல உணர்ச்சிகளைத் தட்டிவிடத்தக்க ஆற்றல் படைத்தவை. இது போன்றே சிறந்த நூல்கள் சிறுவர் நூலகங்களில் இடம்பெற வேண்டும். அவை சிறுவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

இவ்வாறு அமைந்துள்ள சிறுவர் நூலகங்களுக்கு அவர்களை வாரத்திற்கு ஒருமுறையாவது போகச் செய்ய வேண்டிய பொறுப்பு பெற்ருேருடையதாகும். தொடக்கத்தில் பெற்ருேர் அவர்களை அழைத்துச் சென்று, ஊக்கம் ஊட்டிஞல், நாளடைவில் சிறுவர் தாமாகவே செல்வதற்கு முயற்சி எடுப்பர். சிறுவர்களுக்கு முன்மாதிரியாகப் பெற்ருேரும் நூலகப் பயிற்சியை வைத்துக் கொள்ளுதல் நல்லது. நடை முறையில் இது சற்றுச் சிரமமாகவே இருக்குமாயினும், விரும்பியோ, விரும்பாமலோ தன்சிறுர்களின் நன்மையைக் கருதிப் பெற்ருேரும் நூலகப் பயிற்சியை வைத்துக் கொள்ளுதல் அவசியம்.

சிறுவர்களை நூலகத்திற்குக் கவரச் செய்வதற்காகவே அங்கு அடிக்கடி புத்தகக் கண்காட்சிகள், பொழுது போக்குப் படக் காட்சிகள் (Documentary-Educational film) முதலியன இடம் பெறுகின்றன. மேலை நாடுகளில் தொலைக்காட்சிச் சேவையும் சிறுவர் நூலகங்களில் இடம் பெற்றுள்ளன. இன்றைய நிலையில் நம்நாட்டிலும் இது சாத்தியமாகலாம். அதுமட்டுமன்றி, மேலைநாடுகளில் சிறுவர் நூலகங்களிற் சிறுவர்களைக் கவரத்தக்க குட்டிக்கதைகளைக் கூறுவதற்கென்றே குறிப்பிட்ட நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுமுண்டு. இத்தகைய பின்னணி ஊக்கங்களிஞல் நாளடைவிற் சிறுவர்கள் நூலகப்பயிற்சியில் அதிஆர்வம் உடையோராக மாறிவிடுகின்றனர்.

சிறுவர் நூலகங்களிலிருந்து, வீட்டிற்கு நூல்களைப் பெற்றுச் சென்று, வாசிப்பதற்கும் வசதிகள் உண்டு. தமக்குத் தேவையான நூல்களைத் தெரிவு செய்து சிறுவர்கள் வீட்டிற்கு எடுத்துச் சென்று வாசிக்கக்கூடியதாய் இருக்கிறது. இதஞல் தமக்குப் புரியாத பகுதிகளையோ அல்லது விடயங்களையோ பெற்ருருடன் அல்லது சகோதரங்களுடன் கலந்து தெளிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே சிறுவர்களின் ஆரம்பக்கல்வி வளர்ச்சியில் சிறுவர் நூலகங்களின் பங்கு பெரிதும் முக்கிய இடம் பெறுகின்றது.

## 7. பாடசாலை நூலகம் (School Library)

மாணவர்கள் தமது கல்வி விருத்திக்குப் பொருத்தமான நூல்களைப் பயன்படுத்தத் தொடங்குவது பாடசாலை நூலகங்களிலேயாகும். பாடசாலை நூலகம் மாணவர்களின் கல்விவிருத்தியின்மையமாக அமைகிறது. பாடசாலைநூலகர் புத்தகங்களைத் தெரிவு செய்யும் போது, பாடவிதானத்தைக் கருத்திற் கொள்ள வேண்டியது அவசியம். பாடசாலைக் கல்விக்குத் துணையான நூல்களையும் அவற்ருேடு தொடர்புடைய விலையுயர்ந்த நூல்களையும், அரிதிற் பெறக்கூடிய நூல்களையும் நூலகத்தில் வைத்தல் வேண்டும். பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியனவும் அங்கே இருத்தல் அவசியம். அவற்ருேடு நூலகர் மாணவர்களுக்கு உதவியாக இருத்தல் அவசியமான தாகும்.

## 8. ஆசிரியர் கடமை

மாணவர்களை வாசிப்புத் துறையில், நாட்டம் கொள்ளச் செய்வதோடு நூலகங்களைப் பயன்படுத்த வழிகாட்டக் கூடிய வாய்ப்புகளும், கடமைகளும் ஆசிரியருக்குண்டு. ஆசிரியர் தாம் கற்பிக்கும் போது பொருத்தமான பல்வேறு நூல்களை மேற்கோளாகக் காட்டல், பல்வேறு நூல்களிலிருந்து சிறந்த பகுதிகளை வாசித்துக் காட்டுதல் முதலிய வழிமுறைகளில் மாணவர்களின் ஆர்வத்தை வாசிப்புத் துறையில் ஈடுபடச் செய்யலாம்.

## 9. நூலகர் கடமை

சிறுவர் நூலகத்திலோ, அல்லது பாடசாலை நூலகத்திலோ உள்ள பொறுப்பதி

காரிகள் அங்கு வரும் சிறுவர்களின் மனோ வியல்புகளுக்கு அமைய நடந்து கொள்ள வேண்டும். அவர்களோடு இன்முகத்துடன் பழக வேண்டும். குறிப்பாக சிறுவர் நூலகர், சிறுவர் தவறு செய்தால், பொறுமையுடன் அவற்றை எடுத்துக்கூறி நெறிப்படுத்தல் அவரது கடமை. நூல்களை இலகுவில் மாணவர்கள் இனம் கண்டு கொள்ளத்தக்க வகையில் ஒழுங்காக வைத்து, அவற்றைப்பயன்படச் செய்ய வேண்டும்.

## 10. நூலகத்தின் பயன்பாடு

நூலகங்களுக்குச் செல்வதனல் அறிவு வளர்ச்சி மட்டுமல்ல, சிறுபிராயம் முதல் மனக்கட்டுப்பாட்டையும், ஒழுக்க நெறியினையும் சிறுவர் பெற்றுக் கொள்கிறார்கள். நூலகத்திற்குச் செல்வது மூலம் ஏனையோரது அறிமுகமும் கிடைக்கிறது. இதனல் நல்லோரின் நட்பும் கிடைக்கிறது.

தமது பாடப்புத்தகப்படிப்புடன் வாழ்நாளில் புத்தகப் பூச்சியாக இராது, பல்வேறு வகைப்பட்ட விடயங்களையும் அறிந்து கொள்ளக்கூடிய அரிய வாய்ப்பினை நூலகம் அளிக்கிறது. புதிய கண்டுபிடிப்புக்கள், புவியியல், அரசியல் முதலான விடயங்கள் பாடப்புத்தகத்திலும் விட, தினசரிப்பத்திரிகைகளில் விரிவான புதிய விளக்கங்களுடன் வெளிவருதல் இயல்பு. இவற்றைத் தினம் தினம் நூலகத்தில் அறியக்கூடியதாக இருக்கிறது. சிறுவர்கள் இவற்றை வாசிப்பதால் முற்றாக அவ்விடயங்கள் புரியாது விட்டாலும், அவைபற்றிய அடிப்படை அறிவையாவது பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. இது சிறுவர்களின் பொது அறிவை வளர்ப்பதோடு, பாடசாலைகளிலும், பிறஇடங்களிலும் நடைபெறும் சிறுவர் பொது அறிவுப் போட்டிகளில் வெற்றியடையக் கூடிய வாய்ப்பைக் கொடுப்பதோடு, சிறுவர்களின் அறிவு விருத்திக்கும் ஆதாரமாகிறது. நூலகவாசிப்பின் மூலம் பல்வேறு துறைப்பட்ட அறிவைப் பெறுவது இயல்பே. அதுமட்டுமல்லாது சிறுவயது தொடக்கம் இலக்கியத்துறையில் ஈடுபாடு கொண்டு வாசிப்புப்பழக்கத்தையுடைய மாணவன் ஒருவன் வளர்ந்து - கல்வியில் தேர்ந்து விஞ்ஞானப் பட்டதாரியாக - அல்லது வைத்தியனாக மாறும் அதே வேளையில் - அவனது இளமைக்காலம் முதலாக நூலகத்தினூடாகப் பெற்று வந்த இலக்கிய அறிவு அவனைச் சிறந்த விமரிசகனாகவோ - அல்லது சிறந்த படைப்பிலக்கிய கர்த்தாவாகவோ மாற்றி விட்ட வரலாற்றை நாம் அறிவோம்.

மேலும் சகல சிறுவர்களுக்கும் தாம் விரும்பிய அல்லது தமக்குத் தேவையான அனைத்து நூல்களையும் விலைக்கு வாங்கக் கூடிய பணவசதி இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஒரே வகுப்பிற் பயிலும் மாணவர்களில் பணவசதி நிலையில் வேறுபாடுகள் நிரம்ப இருப்பது இயற்கையே. பணவசதியுடைய சிறுவர் சகல புத்தகங்களையும் மற்றும் உபகரணங்களையும் பயன்படுத்துவதைக் கண்ணுறும் ஏழைச்சிறுவன் மனப் போராட்டம் அல்லது மனச்சிக்கல் அடையாதிருக்கத்தக்கவகையில் நூலகங்கள் அவர்களுக்கு உறுதுணையாக அமைகின்றன. இன்னுமொரு முக்கிய விடயம் என்னவெனில் நமது நூலகங்களில் சிறுவர்களுக்குரிய நூல்கள் பெரும்பாலும் ஆங்கில மொழி நூல்களாகவே காணப்படுகின்றன. சிறுவர் நூல்கள் சிங்கள மொழியில் ஓரளவு வெளியிடப்பட்டுள்ளன. அநேக பிறமொழியிலுள்ள சிறுவர் நூல்களும் சிங்களத்தில் வெளிவந்துள்ளன. ஆனல் தமிழ்ச் சிறுவர்களுக்கு அத்தகைய வாய்ப்புகள் மிகக் குறைவாகவே உள்ளன. 1974ல் சிறுவர்களுக்குரிய 32 சிங்கள நூல்கள் வெளியிடப்பட்டன. ஆனல் தமிழில் ஒரு நூல்மட்டுமே வெளிவந்ததாகக் கூறப்படுகிறது. இந்நிலை மாறி பல நல்ல நூல்கள் தமிழில் சிறுவர்களுக்கென வெளிவர வேண்டும். அவை இலக்கியம், விஞ்ஞானம், விளையாட்டு முதலிய பல துறைகளையும் சார்ந்தனவாக அமைய வேண்டும். இந்நூல்கள் எல்லாம் நூலகங்களில் இடம் பெற்று, சிறுவர்களும் அவற்றை ஒழுங்கான முறையில் பயன்படுத்தி வருவார்களாயின் நிச்சயம் நம்சிறார்களின் கல்வி நிலை எதிர்காலத்தில் உன்னத நிலையில் இருக்கும் என்பது உறுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிகிறதா

அன்னையின் கரங்களிலே தந்தையின் தோள்களிலே
அளவிலா அன்பினிலே ஆசையின் மூச்சினிலே
அன்னையின் அழகோ இலைத் தந்தையின் அழகோவென
அன்றென்னை அரவணைத்தாய் ஆசையில் முத்தமிட்டாய்

அன்னையின் கரந்நீங்கின் தந்தையின் பிடியினிலே
தந்தையின் பிடிநீங்கின் தாயன்னை மடியினிலே
முத்துச் சிரிப்பொலியை மழலைமொழி ஓசையினை
கண்டு மகிழ்ந்திடவே கட்டி அணைத்து நின்றாய்

உள்ளம் உருகிடுவாய் எந்தன் பைய நடைகண்டு
ஏங்கித் தவித்திடுவாய் எந்தன் குரலொலியில்லையெனில்
சித்தம் குளிர்ந்திடுவாய் சிற்றாடை உடையுடுத்தி
அள்ளி அணைத்திடுவாய் அம்மாவென்றழைக்கையிலே

பள்ளிப் பருவமென என்னை அழைத்துச் சென்றாய்
கல்வி பயிலவென புத்தகம் நீ கொடுத்தாய்
உண்ண உணவினுக்காய் உன்னையே அர்ப்பணித்தாய்
கல்விப் பெருமகனாய் ஆக்கிட அலைந்து வந்தாய்

மழலைப் பருவமதில் உன்மடியில் நானிருந்தேன்
துள்ளும் பருவமதில் உன்முன்னே ஆடிவந்தேன்
பிள்ளைப் பருவமதில் பக்குவமாய் நடந்து வந்தேன்
பள்ளிப் பருவமதில் பகுத்தறிவு வந்ததனால்

அன்னையே நீயெனக்காய் உன்னையே அர்ப்பணித்தாய்
காரணம் என்னவெனில் உன்னுடைய கடமை
என்றெண்ணிச் சாடுகின்ற மானிடர்க்கு புரியாதா
அயராது உழைத்த அந்த அன்னையது இதயமதை.

வி. சோமநாதன்
(வர்த்தகவியல் - இறுதியாண்டு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளந்தென்றல் இனிதே வளர

# எமது வாழ்த்துக்கள்

★ ★ ★

# I. N. S.

★ ★ ★

வெளிநிலைக் கல்விச் சேவையில்
யாழ்நகரில் தனித்துவமாக விளங்கும்
கல்வி நிறுவனம்

★ ★ ★

**Institutes of National Studies**
**101/10 STANLEY ROAD,**
**JAFFNA.**

*Directors:*
**S. Nesenthiran**
**Kathir Suthahar**

*Publication Unit:*
**39/18, Power House Road,**
**Jaffna.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

# SUGUNA TRADERS

21, Second Cross Street
COLOMBO - 11

Telephone: 23695

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் மங்கள விழாக்களை

சிறப்பிக்க யாழ் நகரில்

சிறந்த வில்லிசைக் குழுவினர்

## அளவையூர்

## வினாயகர் வில்லிசைக்குழுவினர்

**N. Sivapatham**

Sothy & Brother

Tellippalai.

கொழும்பு பல்கலைக் கழக

தமிழ்ச் சங்கத்திற்கு

## எமது வாழ்த்துக்கள்

## ராதா சோப்

ராதா சோப் இன்டஸ்ரீஸ்

கஸ்ரம்ஸ் ரோட்,

முல்லைத்தீவு.

## அன்பளிப்பு

## நரேஸ் ரேடேர்ஸ்

143, பிரதான வீதி,

முல்லைத்தீவு.

With Best Compliments

of

## DISCO SALOON

## டிஸ்கோ

HAIR DRESSERS

**TELLIPPALAI.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

# ALL CEYLON DISTRIBUTORS

LEADING IMPORTERS OF BOOKS
ON
MEDICAL ACCOUNTANCY, ENGINEERING
ADVANCED LEVEL TEXT BOOKS IN ENGLISH AND TAMIL
NOVELS IN ENGLISH AND TAMIL,
ENGLISH AND TAMIL PERIODICALS
FOR YOUR REQUIREMENTS ON BOOKS

# ALL CEYLON DISTRIBUTORS

*HEAD OFFICE:*

**371, Dam Street,**
**(Adjoining Courts Post Office)**
**Colombo - 12.**
**P. O. Box 96,**
**Phone: 34529**
**Cable: "KENNADiES"**

*BRANCH:*

**119 1/1, K. K. S. Road,**
**(Mylands Building)**
**JAFFNA**
**P. O. Box 94,**
**Phone: 8234**
**Cable: "AECEDEE"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments*

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.................

*from*

# SARAVANAS

DEALERS IN HARDWARES, TRACTOR SPARES, MOTOR SPARES, EXIDE BATTERIES, CYCLE & CYCLE SPARES & PAINTS ETC.

MAIN STREET,
MULLAITIVU.

---

அன்பளிப்பு

## கன்னிகா றேடர்ஸ்

பிரதான வீதி,
முல்லைத்தீவு.

---

கொழும்பு பல்கலைக்கழக
தமிழ் சங்கத்திற்கு

எமது வாழ்த்துக்கள்

## நாதன் ரேட்ஸ்

பிரதானவீதி,
முல்லைத்தீவு.

---

*With the Best Compliments*

*from*

## STANDARD MOTORS

No. 8, Main Street,
MULLAITIVU.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் பாடம் மாணவர்க்குக் கட்டாயமாகிடுமா?

வி. ரி. தமிழ்மாறன்

எமது நாட்டைப் பொறுத்தவரை என்றுமில்லாத அளவுக்கு இன்று மனித உரிமைகள் பற்றிய சர்ச்சை உக்கிரமடைந்துள்ளது. மனிதனை மனிதன் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு இடைவெளி அதிகரித்துக்கொண்டே போகிறது. எனவே இந்த வினை இப்போது அவசியமாகிறது. மாணவர்களுக்கு மனித உரிமைகள் என்ற பாடமொன்றைக் கட்டாய பாடமாக்கினாலென்ன.? உறுப்புரிமை நாடுகளில் மனித உரிமைகள் பற்றிய பாடம் போதிக்கப்படவேண்டும் என்ற தீர்மானம் 1978லேயே ஐ. நா. ஸ்தாபனத்தில் எடுக்கப்பட்டுவிட்டது. இதற்கமைவாக உலகின் பல்வேறு நாடுகளிலும் இது பற்றிக் கூடிய அக்கறை தற்போது காட்டப்பட்டுவருகிறது. நமது நாட்டில் இலங்கை மன்றக் கல்லூரி இது குறித்துக் கருத்தரங்குகள் நடாத்தியமையும் அதன் பொர்சினை ஏற்ற குடியரசு ஜனாதிபதி அவர்கள் இப்பாட போதனைக்கான பணிப்பினை விடுத்தமையும் ஞாபகத்திற்கு வருகிறது.

பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் 'மனித உரிமைகள்' பற்றிய பாடம் போதிக்கப்படுவதற்கான திட்டமொன்றும் தீட்டப்பட்டது. பல்கலைக்கழகத்தில் கலைத்துறை மாணவர்கள் மட்டுமன்றி விஞ்ஞானத்துறை மாணவர்களும் இதனைப் பயின்றிடல் வேண்டுமென்று ஜனாதிபதி அவர்கள் விருப்பந் தெரிவித்திருந்தார். இது வரவேற்கப்பட வேண்டியதே யாயினும் நடைமுறையில் எதுவித செயற்பாடுகளும் இது வரை வெளித்தோன்றியதாகத் தெரியவில்லை. 'மனித உரிமைகள்' போதனையிலுஞ்சரி, சாதனையிலுஞ்சரி 'குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்கு' என்று ஒதுக்கத்துக்குட்படக்கூடிய விடயமல்ல. எனவே யாவரும் அறிவதற்கும் அதன்வழி நிற்பதற்குமுரிய ஓர் உயரிய ஒழுக்கக் கோவையாக அமைந்திட வேண்டிய மானிட நெறிப்பாடே மனித உரிமைகளாகும். இதன் உன்னதத்தை உணர்வதற்கு இந்த எண்ணக்கரு எங்ஙனம் உதயமாயிற்று என்பதனையும், அதன் பரிணாம வளர்ச்சியினையும் ஒருகணம் உன்னிப்பார்ப்பதன் மூலம் இப்பாடநெறியின் அவசியத்தை நாம் அனைவருமே உணர்ந்திட முடியும்.

மத நூல்களில் கூறப்பட்டிருக்கும் அறக்கருத்துக்கள் ஒரு புறமிருக்க, சட்டவியலிலே ஆரம்பத்திலேயே சட்டம் என்பது மனித உரிமைகளை அடிப்படையாக வைத்து ஆக்கப்படுவதுதான் என்ற கருத்தும் இருந்து வந்திருக்கிறது. மதச்சீர்திருத்தவாதியான தோமஸ் அக்குவைனஸ் அவர்கள் இயற்கைச் சட்டக் கோட்பாட்டை வலியுறுத்தியதோடு மனிதனது நியாய அறிவிப்பிலிருந்து பிறப்பதே சட்டமெனச் சாற்றினார். சர்வதேசச் சட்டத்தின் தந்தையான குரோற்றியஸ் எனும் பேரறிஞர் அதற்கும் மேலாகப்போய் இரண்டும் - இரண்டும் நான்கென்பதே நியாயவிதி இதனை ஆண்டவன் மறுத்தால் ஏற்க முடியாதது ஆண்டவனே என அறைந்தார். இதனால் மனிதனது மானிடச் சிந்தனைதான் சட்டமென்றும் அது நியாயத்திலிருந்தே பிறக்கின்றதெனவும் கூறி மானிடத்தைச் சிறப்பித்தார் அந்த மேதை. சமுதாய ஒப்பந்தக் கொள்கை பற்றிச் சொல்லவந்த ரூசோவும் ஆதாரச் சட்டமென்பது மறுக்க முடியாத மனிதனது அடிப்படை உரிமைகளே என முழங்கினார். இவற்றிலிருந்தே ஏனைய சட்டங்கள் ஆக்கப்படவேண்டும் என்பது அவர் கருத்து. இந்தப் பின்னணியிலேதான் மனித உரிமைகள் பற்றிய எண்ணக்கரு வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

இங்கிலாந்தில் 1688 ம் ஆண்டின் உரிமைகள் பட்டயத்தில் (Bill of Rights)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. தோமஸ் அக்குவைனஸ், குரோற்றியஸ் போன்ற பேரறிஞர் தம் பெருமுயற்சியினாலும் சமுதாய ஒப்பந்தக் கொள்கைக்கு ரூசோ அளித்த தெளிவான விளக்கம் காரணமாகவும் மறுக்கப்பட, மீறப்பட முடியாதனவாக மனித உரிமைகள் அங்கீகரிக்கப்படலாயின. ஜனநாயக அரசில் அடிப்படை உரிமைகள் உத்தரவாதஞ் செய்யப்பட வேண்டிய அவசியம் உணரப்படலாயிற்று.

1787ஆம் ஆண்டின் அமெரிக்க சமஸ்டி அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட பத்துத் திருத்தங்களும் 'உரிமைகள் பட்டயம்' என அழைக்கப்பட்டு 1791இல் அங்கீகரிக்கப்பட்டன. மதத்தைப் பின்பற்றும் உரிமை, பேச்சு, எழுத்து, ஒன்று கூடுதல் என்பவற்றுக்கான சுதந்திரம் இவற்றால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. பின்னோக்கிச் செயற்படுஞ் சட்டங்கள் (Retrospective acts) தண்டனையம்சம் பொருந்தியவையாயின் அறவே கூடாதெனவும் அவற்றை ஆக்குதல் தகாதென்றும் ஆட்கொணர் ஆணை (Habeas Corpus) தொடர்பான ஏற்பாடு தொடர்ந்திருக்குமென்றும் ஐக்கிய அமெரிக்காவின் அரசியலமைப்பில் ஏற்கனவே ஏற்பாடுகள் இருந்துள்ளன.

இங்ஙனம் மனித உரிமைகளை அடிப்படை உரிமைகளாக அங்கீகரித்து அவற்றை அடையாளப்படுத்தும் ஏற்பாடுகளை ஒவ்வொரு நாட்டு அரசியலமைப்பிலும் கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளது. பிரான்ஸின் 1791 ஆம் ஆண்டு யாப்பில் மனித உரிமைகள் பிரகடனம் குறிப்பிடப்பட்டு 1946, 1958 ஆண்டு யாப்புகளில் அங்ஙனமே அவை தொடர்ந்தும் பேணப்பட்டன. ஜேர்மனிய சமஸ்டிக் குடியரசு யாப்பின் (1949) உறுப்புரை 2 மனித உரிமைகளைக் குறிப்பிடுகின்றது. சோவியத் ரஷ்யாவின் 1936ஆம் ஆண்டைய யாப்பின் அத்தியாயம் 10 பிரசைகளின் அடிப்படை உரிமைகளும், கடமைகளும் என்று குறிப்பிடுகின்றது. இதன் உறுப்புரைகள் 123, 24, 25 என்பன மனித உரிமைகளை விசேடமாகக் குறிப்பிடுகின்றன. மக்கள் சீனக் குடியரசின் 1954 ஆம் ஆண்டைய யாப்பின் உறுப்புரைகள் 85, 86 என்பனவும் இவைபற்றியே கூறுகின்றன. ஐக்கிய அரபுக் குடியரசின் 1964ஆம் ஆண்டைய யாப்பின் அத்தியாயம் மூன்று குழுக்களும் மனித உரிமைகள் பற்றியே கூறி நிற்கின்றது. எமது நாட்டின் இரண்டாவது குடியரசு யாப்பின் அத்தியாயம் மூன்றும் உறுப்புரை 126 உம் முன்னரில்லாத வகையில் அடிப்படை உரிமைகள் பற்றிய பயனுறு ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன. உறுப்புரை 126 அடிப்படை உரிமைகள் மீறல் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் பற்றிக் கூறுகின்றது. சர்வதேச நிவாரணங்கள் என்பதனை விட தேசிய நிவாரணமும் உண்டென்று பெருமைப்பட இந்த ஏற்பாடு வழிசெய்கின்றது.

ஜனநாயகம் பொலியும் நாடுகளது அரசியலமைப்புக்களில் உள்ளவற்றையும் அவற்றின் சர்வதேசிய அமைப்புக்களிலுள்ள விதிப்பாடுகளையும் தழுவி எமது அரசியலமைப்பு அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயத்தைச் சேர்த்திருப்பது மிகவும் முன்னேற்றகரமானதாகும். 1949ல் வெளியிடப்பட்ட ஐ. நாவின் மனித உரிமைகள் பற்றிய சர்வதேசப் பிரகடனமும் 1950ல் ரோமில் கைச்சாத்திடப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் உடன்படிக்கையும் 1959ல் டெல்லியில் கூடிய சர்வதேசச் சட்டவாளர் ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையும் மனித உரிமைகள் பற்றிய தொடர்ச்சியான அங்கீகாரத்தின் சாதனைகளாகும். 1960ல் கனடாவும் உரிமைகள் பட்டயமொன்றை வெளியிட்டது. ஆயினும் பொருள்கோடலில் மட்டும் வழிகாட்டும் என்றளவிலேயே இது அமைந்துள்ளது. இங்ஙனம் காலத்துக்குக்காலம் சர்வதேச நாடுகள் மனித உரிமைகள் தொடர்பான தமது விழிப்புணர்வை வெளிக்காட்டியே வருகின்றன. கூட்டு மொத்தமாக நோக்கின் எத்தகைய அரசியற் சித்தாந்தத்தைக் கடைப்பிடிக்கும் நாடுகள் என்றபோதிலும் ஏதோ ஒரு வடிவில் தாம் மனித உரிமைகளை அங்கீகரித்துள்ளன என்று காட்டி நிற்கவே இவை விழைகின்றன. ஆயினும் காலவோட்டம் சிந்தனைகளில் திருப்பத்தை ஏற்படுத்துவதும் தவிர்க்க முடியாததாகி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது உலகமகா யுத்தத்தின் போதுதான் மனித உரிமைகள் பற்றிய புதியபார்வையொன்று வெளிக்கிளம்பிற்று. 1941ல் ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் ஒப்பமிட்டு வெளியிட்ட அத்திலாந்திக் பட்டயம் (Atlantic Charter) மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது. ஹிட்லரின் வீழ்ச்சிக்குப் பின்னர் நியூரம்பேர்க் (Nurenberg) விசாரணையிலும் இக்மான் (Ijkman) விசாரணையிலும் மனித குலத்துக்கு எதிரான தீங்குகள் தெளிவாக வரையறுக்கப்பட்டன.

இதைத்தொடர்ந்தே மனித உரிமைகளை மதிப்போர் வரிசையில் தாமும் இடம் பெறவேண்டுமெனப் பல நாடுகள் போட்டி போடத் தொடங்கின. இவ்வேளையில் கிழக்கத்திய நாடுகளின் நிலை சற்று வேறானது எனலாம். ஏனெனில் மனித உரிமைகள் என்பது ஏதோ முற்றிலும் புதிதான ஒரு விடயம் என்றளவில் கிழக்கத்திய நாடுகள் அதனை நோக்கவில்லை. எப்படி மதச்சீர்திருத்தக் கருத்துக்கள் அரசியலில் மேற்கு நாடுகளில் செல்வாக்குக் கொண்டிருந்தனவோ அதைவிட ஒரு படி மேலாக கிழக்கத்திய நாடுகளில் அரசியலில் அறமும், மதமும் இரண்டறக் கலந்திருந்தன எனலாம். 'உன்னைப்போல் உன் அயலானையும், நேசி' என்ற போதனைகளும் சாத்வீக அஹிம்சா சாதனைகளும் கிழக்கத்திய நாடுகளுக்குப் பழகிப்போன விடயங்களாகும்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் அரசியல் பாரம்பரியத்தில் யாருக்கும் சளைத்தவர்களாக நாம் இல்லையென்பது பெருமைக்குரியதுதான். ஜனநாயகத்தின் பலமும், பலவீனமும் அடிக்கடி ஆட்சியை மாற்றுவதிற்றான் தங்கியிருக்கிறது என்பார்கள். அதன்படியே நாம் அந்தப் பலத்தையும், பலவீனத்தையும் தாராளமாகப் பரீட்சித்துப் பார்த்து வந்திருக்கிறோம். அதுமட்டுமன்றி அஹிம்சாமூர்த்தியான புத்தபகவானின் போதனைகளைப் பின்பற்றித் தார்மீக அரசை உருவாக்கும் விருப்பும், உத்வேகமும் எமது ஆட்சியாளர்களது பேச்சில் அடிக்கடி இழையோடக் காண்கிறோம். இத்தகைய நிலையில் எமக்கு இப்படியொரு போதனை அவசியந்தானா என்ற வினா நியாயமாக எழக்கூடியதே. ஆனால் நடைமுறை வாழ்வை முன்னிறுத்திப் பார்ப்பின் விடை 'அவசியம்' என்றே கூறத் தோன்றும். மனிதனை மனிதன் மதிப்பது; தனது உரிமைகள், கடமைகள் பற்றிய வரையறையைத் தெரிந்திருப்பது; கீழ்த்தரமானதும், போலியானதுமான பிரச்சார நாடகங்களுக்கு இடங்கொடாதிருப்பது இவையெல்லாம் இன்று எமக்கு அவசியம் வேண்டியதான உளப்பாடுகள் ஆகும். இதற்கான தெளிவான நிலைப்பாடு தற்போது இங்குள்ளதாக எவருமே கூறத்துணியார்.

அரசியலமைப்பு ஏற்பாடுகள் ஏட்டுச் சுரைக்காயாகவும் தலைவர்களது பேச்சுககள் வார்த்தை ஜாலங்களாகவும் இருப்பதால் நாட்டுக்கு ஏது பயன்? பாமரர் முதல் படித்தவர்கள் வரை எவ்வித வேறுபாடுமின்றிக் காணக்கூடிய ஒரே விடயமாக இன்றுள்ளது மனிதனை மனிதன் மதிக்காத நிலைதான். விதைத்ததைத்தான் அறுக்க வேண்டுமென்பதோடு விதைத்தவர்களே அறுக்கவும் வேண்டும் என்பதுதான் இன்றைய தேவை. எனவே தான் மானிட நேயம் விரும்பும் புதிய சந்ததியொன்று இங்கே உருவாக வேண்டுமானால் 'மனித உரிமைகள்' கட்டாய பாடமாகப் போதிக்கப்பட்டே ஆகவேண்டும். அடுத்தவர் உரிமைகளை மதிக்கும் மனப்பக்குவம் மாணவப் பருவத்திலேயே முளைவிட வேண்டும்,

மனித உரிமைகள் பற்றிய எண்ணக் கருவே களங்கப்படுமளவிற்கு இனவெறி எத்தனை தடவை இங்கே தலையெடுத்தது? தேர்தல்கள் முடிவடைந்தால் தொடரும் குழப்பங்கள், கூட்டங்கள், ஊர்வலங்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், குழப்பத்தில் முடிவடையும்எண்ணிக்கைகள், வன்செயலைத் துணைநாடும் மனப்போக்குகள் இவையெல்லாம் எதனைக் காட்டி நிற்கின்றன? மனித உரிமைகள் பற்றிய சிந்தனை மங்கிப்போனதாலா? அன்றேல் மறைந்தே போய்விட்டதாலா இன்றைய இந்நிலை.?

மனித உரிமைகளைச் சரியாகப் புரிந்து கொண்டவர்களாக நாமிருந்திருந்தால் இத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகைய சம்பவங்களுக்கு இடமேற்பட்டிருக்குமா? தனக்கிருக்கும் அதேயுரிமையை மற்றவனும் பாவிப்பதை நம்மால் பொறுத்துக்கொள்ள முடியவில்லையென்றால் 'நாகரீகம்' என்ற சொல்லுக்கும், நமக்கும் என்ன சம்பந்தம்? மனப்பக்குவம் என்பது திடீரென்றோ, அவசரமாகவோ ஏற்படுத்திவிடக் கூடியதொன்றல்ல. தொடர்பான நிகழ்வுகளின் விளைவாக அமைவதான மனப்பக்குவம் எமக்குத் தேவை. அதற்காகவே மனித உரிமைகள் பற்றிய பாடத்தை நாம் கற்க வேண்டும்.

எனவே இந்நிலைமையில் மாற்றங் காணவும் நாகரீக மிக்கதும் ஜனநாயக பாரம்பரியத்துக்கு அரணிடுவதுமான ஒரு சமுதாய அமைப்பை ஏற்படுத்துவதற்கும் மனித உரிமைகள் பாடம் கட்டாயமாகப் போதிக்கப்பட வேண்டியதாகிறது. பதவிகளைப் பெற்று பணிபுரியுங் காலகட்டத்தில் இங்ஙனம் உரிமைகள், கடமைகளை அறிந்து கொள்ளுதல் என்பது காலங்கடந்ததாகி விடும். சீறிச்சினந்துவிழும் அதிகாரிகளையும், எதேச்சாதிகார அலுவலர்களையும் 'எஜமானர்கள்' என்ற மக்களே 'தரிசிக்க' வேண்டிய நிலை ஏற்பட்டபின் போதனைகளால் பயனேதுமிருக்காது. தபால் அலுவலகம் முதல் பொலிஸ் நிலையம் வரை மனித உரிமைகள் மதிக்கப்படும் 'பக்குவம்' சட்டத்தினால் மட்டும் மாற்றிவிடக் கூடிய சாத்தியங்கொண்டதல்ல.

ஒவ்வொருவரும் தத்தமது உரிமைகளையும், கடமைகளையும் முதலில் நன்கறிதல் வேண்டும், அதன் பின்னரே அதனைப் பிரயோகிக்க முன்வர வேண்டும். முதற்தேவையான 'அறிதலைப்' பெறக் கூடிய வாய்ப்பை மாணவப் பருவத்திலேயே நல்குதல் நன்று. பாடசாலைகளில் எத்தகைய துறையைத் தேர்ந்தெடுக்கும் மாணவர்களாயினுஞ்சரி மனித உரிமைகள் பற்றிய அடிப்படை அறிவை அவர்கள் பெற்றிடல் வேண்டும். தாம் விரும்பிய துறையில் செல்ல முன்னர் தாம் அனைவரும் மனிதர்கள் என்பதை அவர்கள் உணர்ந்திடச் செய்தல் வேண்டும். மனித உரிமைகளை அறியாமல் அவர்களது கல்வி தொடர்வதால் யாருக்கும் எவ்வித பயனும் கிட்டாமலே போய்விடக் கூடும்.

கல்வியமைச்சு இதுபற்றித் தீர்க்கமான முடிவை மேற்கொள்ளுமென எதிர்பார்ப்போமாக. பல்கலைக்கழகங்களில் முதல்வருடக் கற்கையின் போதாவது மனித உரிமைகள் சகல கற்கை நெறிகளுக்கும் ஒரு பாடமாக அமையின் நிச்சயம் ஒரு திருப்பம் ஏற்படும் என்பது திண்ணம். ஜனாதிபதி அவர்களது விருப்பும் ஐ. நா. சபையின் இலக்கும் மானிட நேயர்களது அபிலாசையும் ஈடேறும் நாள் எப்போது? என்ற வினா எம்மிதயத்துத் தொக்கி நிற்றல் உலகளாவிய மானிட ஒருமைப்பாட்டை விரும்பும் உந்துதலலேயன்றி வேறெதனாலுமல்ல என்பதைத் தெளிவாக்குவோம்.

---

★ விதை சாகாமல் பயிர் முளைப்பதில்லை. நாம் இன்று சோதனைகளை அனுபவித்து சாதனைகளை நிறைவேற்றாவிட்டால் நாளைய நமது பிள்ளைகளுக்கு வாழ்வே இல்லை.

★ ★ ★ ★ ★

★ '' தன்னால் முடிந்ததைச் செய்ய வேண்டும் என்று எவன் ஆவல் கொள்கிறானோ, எவன் தான் கொண்ட ஆவலின்படி காரியங்களைச் செய்கிறானோ அவன்தான் உண்மையான சூத்திர புருஷன் ''
— ரூஸ்ஸோ

★ ★ ★ ★ ★

★ '' பிழைக்கத் தெரிந்தவர்கள் என்று சொல்லிக் கொள்வோரின் போக்கை நான் அடியோடு வெறுக்கிறேன். மனித குலத்தின் துயரைப் பற்றிக் கவலைப்படாமல் சொந்தச் சுயநலத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள் மனிதர்கள் அல்ல மிருகங்கள் ''
— கார்ல் மார்க்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

# MIRANDO INDUSTRIES

Use Always

**Beauticura Talcum Powder**

**The Talc That Lasts Longer**

# MIRANDO INDUSTRIES

**75 2/2 DAM STREET**
**COLOMBO - 12**

T. Phone: **32412** T. Grams: BEAUTICURA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

எலிபன்ற் மெற்றல் அன்ட்
அலுமினியம் வேர்க்ஸ்
அம்பனை, தெல்லிப்பழை.

With Best Compliments

from

VICKNA TUTION CENTRE
52, STANLEY ROAD,
JAFFNA.

With Best Compliments

of

NEW LANKA TRADERS
222, STANLEY ROAD,
JAFFNA (CEYLON)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

**NATHAN TRADERS**

GENERAL MERCHANTS

*Telephone :* **21005**

No - 18, St. John's Road,

**COLOMBO - 11.**

*With the Best Compliments*

*from*

**Easwary Hardware Stores**

DEALERS IN:
HARDWARE, S. LON PIPES & PAINTS

Prop: K. PONNUTHURAI
K. K. S. Road, Chunnakam.

With Best Compliments

from

**MIRO INDUSTRIES**

Manufacturers of Ready Made Garments
orders under taken - local & export

Telephone : **24581.**

83 1/1, ST. SEBASTIAN STREET,
COLOMBO - 12.

*Whit Best Compliments*

*from*

**SARASWATHY LODGE LTD**

191, GALLE ROAD,
BAMBALAPITIYA,
**COLOMBO - 4.**

Telephone : **81913**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

from

FASHION HOUSE

**MAIN STREET,**
**SAINTHAMARUTHU.**

With the Best Compliments

from

**KALMUNAI**
**HARDWARE STORES**

DEALERS IN:
Hardware, Paints. Radio, Bicycle & Sundry Goods

41, Main Street,
KALMUNAI.
Telephone: **067 - 2535**

**WITH BEST COMPLIMENTS**

from

Sundaram Stores

MAIN STREET,
**NEDUNKERNEY.**

With the Best Compliments

from

**AKKARAIPATTU**
**CARPENTRY WORKS**
**TIMBER DEPOT**

Timber & Timber Products Merchant

70, 2/3. Common Road,
**AKKARAIPATTU - 3**
Regd. No. /111/A. F.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No..................

சிறு கதை

# "பாதை மாறிப் போகும் போது......"

திருமதி V. நடேசமூர்த்தி
பொருளியல் சிறப்பு இறுதி வருடம்

அன்றொருநாள் ஆயிரமாயிரம் அறிவாளிகளையும், பட்டதாரிகளையும் உருவாக்கிய கொழும்புப் பல்கலைக்கழகம் புதுப்பொலிவுடன் விளங்குகின்றது. அக்கட்டிடத்தினுள்ளும், அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் வண்ணாத்திப்பூச்சிகள் பூங்காவில் வட்டமடிப்பது போல் வட்டமிட்டுக் கொண்டு பல்லாயிரம் இளைஞர்களும், யுவதிகளும் கூட்டம் கூட்டமாக நின்று கொண்டிருக்கிறார்கள். அவ்வழியே செல்லும் பயணிகள் அனைவரும் தாங்கள் செல்லும் வாகனங்களில் இருந்தபடியே அந்தச் சூழலை ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர். அப்படி என்ன அதிசயம்! அங்கு வேறொன்றும் நடைபெறவில்லை. கல்வியாண்டு முடிவடைந்து மூடப்பட்டிருந்த அப்பல்கலைக்கழகம் அன்று மீண்டும் புதிய கல்வி ஆண்டிற்காகத் திறக்கப்படுகிறது. எனவே அன்று புதிய மாணவர்கள், பழைய மாணவர்கள் அனைவாதும் சங்கமம் நடைபெறுகிறது. வீறுபோட்ட நடையுடன் வரும் இளைஞர்களும், யுவதிகளும் தாங்கள் பழைய மாணவர்கள் என்பதை சொல்லாமல் சொல்பவர்களாகவும் மறுபுறம் அங்கும் இங்கும் பார்த்தபடி படபடக்கும் உள்ளத்துடன் வரும் புதியமாணவருமாக ஒரு விந்தையான சூழல் அங்கே காணப்படுகிறது.

பழைய மாணவர்கள் குழுக்கள் புதிதாக வந்த மாணவர்களிடம் தங்கள் "ராக்கிங்" என்னும் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டார்கள். அதோ! அழகான உடையணிந்து காலில் சப்பாத்து என்பன சகிதம் வந்த ஒரு மாணவன் நிற்பாட்டப்பட்டு அவனுடைய சப்பாத்து காலிலிருந்து கைக்கு மாற்றப்பட்ட கோலத்துடன் அவன் தான் செல்ல வேண்டிய புதிய விரிவுரை மண்டபம் நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறான். அவனது நிலையை ரசித்த மாணவர்களின் கரகோஷமும், சிரிப்பொலியும் வானை முட்டுகிறது. அவனை ராக்கிங் புரிந்த குழுத்தலைவன் அதாவது 'இடிஅமீன்' எனத் தனக்குத் திருநாமம் சூட்டிக் கொண்டவன் புதிதாகச் செல்லும் ஒரு மாணவியைப் பின்பற்றி வேகமாகச் செல்ல அவ்விடத்திலே நின்ற மாணவர் குழுவும் அவனுக்குப்பின்னே செல்கின்றது.

அவ்வேளையில் அப்பல்கலைக்கழகத்திற்குப் பக்கத்திலேயுள்ள பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து மிகுந்த அவதானத்துடன் அவ்வளாகத்தினுள் நுழைந்து கொண்டிருக்கிறாள் ஆர்த்தி. அவளைப் பின் தொடர்ந்து அவள் வந்த அதே பஸ்ஸிலிருந்து இறங்கிய சுரேனும் வந்துகொண்டிருக்கிறான். பஸ்ஸில் ஆர்த்தியின் அழகிலும் அவள் அணிந்திருந்த நீலநிறச் சேலையிலும் மயங்கிய சுரேனின் மனம் அவள் வளாகத்தினுள் சென்று கொண்டிருப்பதைக் கண்டு ஒருவித இன்பநினைவுடன் அவளைப் பின் தொடர்ந்து கொண்டிருந்தது. அவ்வேளையில் எதிர்வந்த அவனது சகமாணவனும், ராக்கிங்கிற்காக தனது பெயரை "கொமெய்னி" என மாற்றிக் கொண்டவனுமாகிய குமாரின் கண்களில் அவள் அகப்பட்டுவிட்டாள். மிஸ் என அவளை அழைத்து அவளிடம் கேள்விக்கணைகளை குமார் தொடுக்கத் தொடங்கிய வேளையில் சுரேனும் அவ்விடம் வந்து விட்டான். குமாரின் அழைப்பிற்கே பயந்து நடுங்கிக் கொண்டிருக்கும் அவளின் நிலை சுரேனுக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது.

குமார் உற்சாகமாக தனது ராக்கிங் வேட்டையில் இறங்கத் தொடங்கி விட்டான். ஆரம்பம் பெயர் என்னடி? என்ப

தாக இருந்தது. அவளிடமிருந்து ஆர்த்தி எனப்பதில் வந்தது. அடுத்த கேள்வி குமாரிடமிருந்து அப்பன் இலலையோ என வந்தது. தன்னை சுதாகரித்துக் கொண்ட ஆர்த்தி மிஸ் ஆர்த்தி ராம்குமார் எனக் கூறினாள். அப்பாவின் தொழில் என்ன என்ற கேள்விக்கு ''பிரின்ஸ்பல்'' என்பதாக விடை வந்தது. அச்சொல்லை வைத்தே அவளை மடக்க எண்ணிய குமார் தனக்கு உதவியாளனாக சுரேனை அழைக்கும் எண்ணத்தில் என்ன சுரேன் அக்கா அமெரிக்காவில் பிறந்தவள் போல இருக்கு தமிழ் ஒழுங்காகத் தெரியுதில்லை எனக் கூறியபடி அமெரிக்காவில் பிறந்தவள் என்றால் எப்படியடா தமிழ்ப்பெண்கள் மாதிரி உடையலங்காரம் செய்தவள் என்று கேளடா! எனக் கூறியவன் தமிழ்ப்பெண்கள் மாதிரி உடையலங்காரம் செய்ய முடியும் தமிழ் கதைக்க உங்களுக்கெல்லாம் வெட்கம் என்னடி எனச் சிறிது கடுமையுடன் கேட்டான். தனது நிலையை நினைக்க ஆர்த்தியின் விழிகளில் நீர் நிறைந்து விட்டது. அப்பா தன்னுடன் கூட வருவதாகக் கூறியும் வேண்டாம் நான் தனியாகப் போய் விடுவேன் எனக் கூறி தைரியமாக உள்ளே வந்தவளுக்கு பத்தடி தூரம் வருமுன்னே பயத்தால் உடல் நடுங்கிப் போய்விட்டது. அவளது நிலைகண்டு மனமிரங்கிய சுரேன் குமாரிடமிருந்து அவளுக்கு விடுதலை பெற்றுக்கொடுக்கும் எண்ணத்துடன் மிஸ் உங்களுக்கு இன்று கூட்டம் என்று அறிவித்திருப்பார்களே எனக் கேட்டான். அவளும் ஆமாம் எனத் தலையசைத்தாள். அவளுக்காக குமாரிடம் கேட்டு அவளை விடுதலை பெறச் செய்து விட்டான். நன்றியுணர்வுடன் அவள் தான் செல்ல வேண்டிய இடம் நோக்கிச் சென்றுவிட்டாள்.

நாட்கள் மாதங்களாகி விரிவுரைகளும் ஒழுங்காக நடைபெறத் தொடங்கி விட்டன. கைதேர்ந்த சிற்பி ஒருவனால் செதுக்கப்பட்ட சிலைபோல் அங்கு வந்து போகும் ஆர்த்தியின் பால் அங்குள்ள மாணவர்கள் அனைவரது மனங்களும் அலைமோதின. ஒவ்வொருவனும் தான் விரும்பிய பேரில் அவளை தங்கள் மத்தியில் அழைத்த வண்ணமிருந்தனர். அன்று மாலை நான்கு மணிக்கு பழைய மாணவர்களால் புதிய மாணவர்களை வரவேற்கும் முகமாக ஒழுங்கு செய்யப்பட்ட தேநீர் விருந்து ஆரம்பமாகியது. அனைத்து மாணவரும் மிகுந்த உற்சாகத்துடன் தங்கள் விரிவுரையாளர்களுடன் கலந்து கொண்டிருந்தனர். வரவேற்பு நிகழ்ச்சியை முன்வைத்து மாணவர் தலைவன் தனது உரையை முடித்துக்கொண்டான். பாடுவதில் திறமையுள்ள மாணவர்கள் ஒவ்வொருவரும் மேடையில் தங்கள் திறமைகளைக் காட்டிய வண்ணமிருந்தனர். அவ்வேளையில் பழைய மாணவன் சுரேன் தனது நண்பர்களின் வேண்டுதலின் பேரில் பாடுவதற்காக மேடையிலேறி ''வசந்தம் பாடிவர வைகை ஓடி'' என்னும் பாடலை அழகாகப் பாடினான். அவன் பாடி முடிந்ததும் அடுத்தபடியாக மிஸ் ஆர்த்தி ராம்குமாரை ஒரு பாடல் பாடுவதற்காக அழைக்கிறோம் என எதிர்பாராத விதமாக வந்த அழைப்பினால் படபடக்கும் உள்ளத்துடன் மேடையேறினாள். சுரேனின் பாடலில் தன்னை மறந்து போயிருந்தவள் அதே பாடலையே தானும் பாடி முடித்தாள். மாணவர்களின் கரகோஷம் அதிர்ந்த பொழுது தன்நிலை அறிந்த ஆர்த்தியின் மனதில் ஆயிரமாயிரம் விடை காண முடியாத வினாக்கள் எழுந்தன. விழா முடிவடைந்து வெளியில் வந்த ஆர்த்தியை சுரேன் பாராட்டிப் பேசினான். அவனைச் சந்தித்தநிலையில் செயலிழந்து தலைகவிழ்ந்து நின்ற ஆர்த்தியைஅவளை அழைத்துச் செல்ல வந்திருந்த அப்பாவின் குரல் சுயநினைவிற்கு கொண்டு வந்தது. அப்பாவுடன் புறப்பட்டு வீடு வந்து சேர்ந்த பின்பும் கூட அவளுடைய மனதில் அன்றைய நிகழ்ச்சிஒரு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியதை அவள் உணராமலில்லை.

இறுதிப் பரீட்சைக்கான நாட்கள் நெருங்கி விட்டது. மாணவர்கள் அனைவரும் நூல்நிலையம் நோக்கிப் படையெடுக்கத் தொடங்கிவிட்டனர். ஆர்த்தியும், சுரேனும் தனியாகச் சந்தித்து உரையாடிக் கொள்ளாவிட்டாலும் இருவரது மனமும் மாறி மாறி ஒருவரையொருவர் நினைத்தவண்ணமிருந்தது. அவ்வாறு எதிர்பாராதவிதமாக நூல்நிலையத்திலும், கன்ரீனிலும் அவர்களை சந்தித்துக் கொண்ட வேளைகளில் அவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமலே அவர்கள் கண்கள் ஆயிரமாயிரம் கதைகளைப் பேசிக்கொண்டன. அன்று ஆர்த்தியும் அவளது சகமாணவிகள் இருவரும் கணிதபாட கடந்தகால வினைப்பத்திரங்களில் உள்ள வினாக்களுக்கு விடையளித்துக் கொண்டு இருந்தனர். ஒருவினாவிற்குரிய விடையினை எத்தனையோ முறை முயற்சித்தும் பெறமுடியாமல் இருந்தது. அவ்வேளையில் அவர்கள் அருகில் இருந்த சுரேனிடம் தாங்கள் உதவிபெற எண்ணி அம்மாணவிகள் மூவரும் அவனை அணுகினர். சுரேனும் அவர்களை தனியிடத்தில் வைத்து திருப்திகரமான முறையில் விளக்கமளித்தான். அவனது விளங்கப்படுத்தும் ஆற்றலைக் கண்டு ஆர்த்தி திகைத்துப் போய் விட்டாள். நன்றி கூறி அவனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு தங்கள் இருக்கைகளில் வந்து அமர்ந்து கொண்டனர். ஆர்த்தியின் மனதில் அவளது பயிற்சிப் புத்தகத்திலிருந்த சுரேனின் எழுத்துக்கள் வண்ணக்கோலமிட்டன. அடுத்து பரீட்சைநாள் வரும்வரையில் சுரேன் அடிக்கடி ஆர்த்திக்கும் அவளது நண்பிகளுக்கும் பாடங்கள் சம்பந்தமான விளக்கங்களை அளித்து வந்தான். இத்தகைய சந்திப்புக்களின் மூலம் இருவரது மனங்களும் மிகவும் நெருக்கமடையத் தொடங்கி விட்டது. அங்குள்ள கண்களும் ஆர்த்தியையும் சுரேனையும் ஒன்றாக இணைத்துப் பார்க்கத் தொடங்கி விட்டன. எனினும் எத்தனையோ மனங்களில் பொறாமை எனும் தீ கொழுந்து விட்டெரியாமல் இல்லை. சிலமனங்கள் தங்களுக்கு தாங்கள் கூறும் சமாதானமாக பொருத்தமான ஜோடி என அங்கலாய்த்துக் கொண்டன. இவ்வாறு நாட்கள் செல்லச் செல்ல சுரேன் - ஆர்த்தி என்ற இருவரைப் பற்றியகதைதான் பல வளாகத்தில் உலாவரத் தொடங்கிவிட்டது.

இதுநாள் வரை தன் மனதில் மட்டுமே விருப்பத்தை வைத்திருந்த சுரேன் இக்கதைகளால் ஆர்த்தி எந்தளவு தூரம் பாதிக்கப்படுவாளோ எனப்பயந்து ஒருநாள் அவளைத் தனியிடம் அழைத்து தன்னையும் அவளையும் ஒன்றாக இணைத்துப் பேசப்படும் கதைகளைக் கூறிமுடித்தான். ஏற்கனவே அக்கதைகளை அறிந்தவளாகவும், அவன்மீது விருப்பம் கொண்டவளாகவும் இருந்த அவள் இக்கதைகளால் எவ்வித தாக்கமுமின்றி புன்சிரிப்பொன்றை உதிர்த்தபடி தனது பையில் விரல்களால் கோலமிட்டவாறு வீற்றிருந்தாள். அவளது அந்நிலையை இரண்டு குளிர்பானப் போத்தலுடன் வந்த சுரேன் கலைத்து வைத்தான். பின் இருவரும் பரீட்சை சம்பந்தமான உரையாடலில் இறங்கிய வேளையில் பையில் எதையோ எடுக்க கையெடுத்த ஆர்த்தி தவறுதலாக தான் பருகிவிட்டு பாதியில் வைத்திருந்த போத்தலை தட்டிவிட்டு விட்டாள். இருவருமே தடுக்க முனைந்தும் கீழே விழப்போன போத்தலை பிடிக்க முடியவில்லை. சுரேன் அவளைச் சமாதானப்படுத்திவிட்டு மீண்டும் ஒரு போத்தல் வாங்க எழுந்த பொழுது அதற்கு இடமளிக்காத வகையில் சுரேன் பருகிய போத்தலை எடுத்து தான் இரண்டு முறை குடித்துவிட்டு மீதியை அவனிடமே கொடுத்துவிட்டு அவன் முகத்தையே பார்த்த வண்ணமிருந்தாள். அவளது மனமோ உல்லாசமிகுதியால் எங்கோ பறந்து கொண்டிருந்தது. அவ்வுற்சாகத்துடனே ஆர்த்தி இக்கதைகள் பற்றி உன்னுடைய அபிப்பிராயம் என்னவெனக் கேட்டான். அவளோ அதற்கு நேரிடையாகப் பதில் கூறாமல் உங்களுக்கு எந்தநிறம் பிடிக்கும் எனக்கேட்டாள். அவன் தான்விரும்புவது நீலநிறம் எனக் கூறினான். அவள் அவனிடமிருந்து விடைபெற்றுச் சென்று நீண்ட நேரமாகியும் அப்புரியாத புதிரிலிருந்து சுரேன் விடுபடவில்லை.

விடுவந்து சேர்ந்தபின்பும் சுரேனின் மனம் ஆர்த்தியின் புதிரிலேயே மூழ்கியிருந்தது. விடிந்ததும் வீட்டில் இருக்கமுடியாதவனால் நேரத்துடனேயே வளாகத்திற்கும் வந்துவிட்டான். அடிக்கொருதரம் கன்ரீனில் இருந்த அவன் கண்கள் பஸ்ஸிலிருந்து இறங்கிவரும் மாணவர்களிடம்சென்று எதையோ தேடி அலைந்தது. அலைந்த கண்கள் ஆச்சரியத்தில் படபடத்தது. அங்கு ஆர்த்தி தனது பொன்னிறமேனி முழுவதையும் நீலநிற ஆடை அணிகளால் அலங்கரித்த வண்ணம் வந்துகொண்டிருந்தாள். இரண்டு சோடிக்கண்களும் ஒன்றையொன்று சந்தித்துக் கொண்டபின் ஆர்த்தி சுரேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்திருந்த இடத்தை வந்து சேர்ந்தாள். அவளது தோற்றமளித்த உற்சாகத்தில் சுரேன் சற்று உரமாகவே குட்மார்னிங் கூற அவளும் பதிலுக்கு குட்மார்னிங் என நாணத்துடன் பதிலளித்தாள். அன்றிலிருந்து அவர்கள் உல்லாசமாகப் பறந்து திரிந்தார்கள். எதையெதையோ கதைத்தார்கள். ரசித்தார்கள். எல்லாமே அவர்களுக்கு இன்பமானதாகவேயிருந்தது. சுரேனிடமிருந்து வெளிப்படும் உயர்ந்த எண்ணங்களில் ஆர்த்தி தன்னைமறந்துபோவாள். நீலநிறம் அவன் விருப்பத்திற் குரியதாக அமைந்ததற்குரிய காரணத்தை அவன் விளக்கிய போது அவள் அவனை ஒரு அசாதாரணமான மனிதனாகவே எண்ணினாள். ஆர்த்தி ஆழமான கடலைப்பார், பரந்து கிடக்கும் வானத்தைப்பார் எல்லாம் நீல நிறத்துடன் விளங்குகின்றன அதுவே நான் விரும்புவதற்குரிய காரணம். ஏனெனில் தெளிவான, ஆழமான, அளந்து கொள்ள முடியாத அவற்றை உருவாக்கிய இறைவன் நீலநிறத்தை அவற்றுக்கு அளித்துள்ளதைப் பார்க்கும் பொழுது அதிலும் ஓர் அர்த்தம் நிறைந்தேயுள்ளது என நான் எண்ணுகின்றேன் எனத் தத்துவரீதியில் உரையாடுவான். அவனுக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஆர்த்தி தனது பாவனைப்பொருட்கள் அனைத்திலும் நீலநிறத்திற்கே முக்கியத்துவம் வழங்கினாள். அவளுடைய அவ்ஈடுபாடு அவளது பெற்றோரால் விளங்கிக் கொள்ள முடியாத ஒன்றாகவேயிருந்தது.

இறுதிப் பரீட்சையை இனிதாக முடித்ததை மகிழ்ச்சியாகக் கொண்டாடும் நோக்கமாக அனைத்து மாணவரும் இணைந்து சுற்றுலா ஒன்றினை ஒழுங்கு செய்தனர். எல்லா இளைஞர்களும், யுவதிகளும் சுற்றுலாவில் ஈடுபடத் தொடங்கிய வேளையில் சுரேன் ஆர்த்தி ஜோடியும் மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொண்டது. இரண்டு நாள் சுற்றுலா என்ற தீர்மானத்துடன் அம் மாணவர்குழு பயணத்தைத் தொடங்கியது. எனவே, அன்றைய இரவுப் பொழுதைக் கழிப்பதற்கான இடமாக அவர்கள் திருகோணமலையிலுள்ள தங்கள் சகமாணவன் ஒருவனது வீட்டையும் ஒழுங்கு பண்ணிக்கொண்டனர். சென்ற இடமெங்கும் ஒரே ஆர்ப்பரிப்பும், ஆரவாரமும், கமெராக்களின் ஒளிவெள்ளமுமாக அம் மாணவர் குழு தங்கள் சுற்றுலாவை மேற்கொண்டது. திட்டமிட்டபடி இரவுப் பொழுதை நண்பன் வீட்டில் கழித்த பின்னர் இறுதி இடமாகத் திருக்கோணேஸ்வர ஆலயம் நோக்கி அம் மாணவர் குழு பயணத்தைத் தொடர்ந்தது. ஆலயத்தின் அமைப்பையும். ஆர்ப்பரிக்கும் கடலையும் கண்டு ஆர்த்தி பிரமித்துப்போய்விட்டாள். மாணவர்கள் அனைவரும் சுதந்திரமாக அவ் அயலில் சுற்றித்திரிந்தனர். ஆர்த்தியுடன் வந்த சுரேன் அவளுக்கு அக்கடலின் பக்கத்தில் காணப்பட்ட ஓர் உயரமான தனித்து நின்ற பாறை ஒன்றைச் சுட்டிக்காட்டி இந்த இடத்தில் காதலில் தோல்வியுற்றவர்கள் விழுந்து தற்கொலை புரிந்துகொள்வார்களாம் எனக் கூறினான். அதைக்கேட்ட ஆர்த்தி ஏன் சுரேன் இவ்வளவு ஆழமான கடலில் இந்த இடத்தில் விழுந்தால்மட்டும் தான் சாகமுடியுமா ? என வினவினாள். அதற்கு அவன் அதைப்பற்றி எனக்குத் தெரியாது. நான் நினைப்பது இதுதான். அதாவது ஆலயத்தினுள் ஆண்டவனிடம் எமது வேண்டுதலை நிறைவு செய்ய விழுந்து கும்பிடுகிறோம் அல்லவா! அவ்வாறே இறைவன் முன்னிலையில் இவ் இடத்தில் விழுந்து தற்கொலை புரியும் அவர்கள் அடுத்த பிறவியிலாவது தங்கள் காதல் நிறைவேறுமென்ற நம்பிக்கையைக் கொண்டிருக்கலாமல்லவா? எனக் கூறினான். பின்னர் எதையோ நினைத்துக்கொண்டவனாக உன்னிடம் ஏன் இதையெல்லாம் கூறினேனோ தெரியவில்லை. ஆர்த்தி என்னை மன்னித்துவிடு. எனக் கூறியதோடு உன் மனதில் இவ் விடயங்கள் இடம்பெறவே கூடாது எனக் கூறினான். அவனின் கண்மூடித்தனமான பேச்சைக் கேட்டு வாய்விட்டுச் சிரித்த ஆர்த்தி பயப்படாதீர்கள் நான் உங்களைவிட்டுப் பிரியவும் மாட்டேன், எனக்கு இத்தகைய நிலை வரவும் மாட்டாது எனக் கூறினாள். அவ்வேளை நான் விட்டால் தானே நீ பிரிய எனக் கூறிய சுரேன் ஆர்த்தியின் கரங்களை ஆவலுடன் பற்றிக் கொண்டான். இருவரும் விழுந்து விழுந்து சிரித்தவண்ணம் அவ்விடத்தைவிட்டு அகன்றனர். அவர்களைப் பார்த்து அவ்வேளை விதி சிரித்த சிரிப்பொலி அவர்களின் சிரிப்பொலியில் மறைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலோ என்னவோ அவர்கள் அதைக் கேட்கவில்லை.

சுற்றுலா முடிந்து திரும்பிய மாணவர்கள் கல்வியாண்டின் இறுதி வாரத்தைக் கழித்த வண்ணமிருந்தனர். அநேகமாக மனங்களிலும் முகங்களிலும் சோகம் நிழலோடிக் காணப்பட்டது. காரணம் இறுதி ஆண்டு மாணவர்கள் அனைவரும் பல்கலைக் கழக வாழ்வினை முடித்துக் கொண்டு செல்லும் நாள் வந்துவிட்டது. எங்கிருந்தோ வந்து ஒன்றாக நான்கு வருடங்கள் பழகிக் கழித்த அவர்கள் மீண்டும் வேறு வேறு பாதைகளில் செல்லும் நாள் வந்துவிட்டது. எனவே அம்மாணவர்கள் அனைவரும் பிரிவுத்துயரில் மூழ்கியிருந்தனர். அதேதுயர் சுரேன் - ஆர்த்தி ஜோடியையும் பற்றிக் கொண்டது. ஏனெனில் சுரேன் இறுதி யாண்டு மாணவன் எனவே இப்பொழுது அவர்களிடையே மௌனமும் கண்களில் கலக்கமுமே கதைபேசின. ஓரளவு ஆறுதல் வார்த்தைகளுடன் ஆர்த்தியை சந்திக்க தான் அடிக்கடி பல்கலைக்கழகம் வருவதாகக் கூறி சுரேன் பிரிய மனமின்றி விடை பெற்ற பொழுது இருவரது கைக்குட்டைகளும் நனைந்து போயிருந்தன.

காலம் வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. எல்லா உயிர்களையும் படைத்த இறைவன் அவர்கள் தன்னை மறந்து விடுவார்களோ என்று அஞ்சியோ என்னவோ எல்லா உயிர்களையும் ஏதோ ஒருவிதத்தில் துன்பத்தில் ஆழ்த்தி விடுகின்றான் சுரேன்-ஆர்த்தி வாழ்விலும் துன்பத்தின் சாயல் விழத்தொடங்கியது. மீண்டும் கல்வியாண்டு ஆரம்பமாகி பரீட்சை முடிவுகளும் வெளிவந்தன. சுரேனின் திறமையைப் பாராட்டி அவனுக்கு அமெரிக்காவில் மேற்படிப்பு படிப்பதற்கான புலமைப் பரிசில் வழங்கப்பட்டது. ஆர்த்தியினால் அம் மகிழ்ச்சியை பூரணமாக அனுபவிக்க முடியாதிருந்தது. காரணம் மூன்று வருடங்கள் சுரேனிடமிருந்து நீண்ட தூரத்தில் பிரிந்து வாழ வேண்டியுள்ளதே என்பதாக இருந்தது. எனினும் அவனுடைய திறமையை தடைப்படுத்தக் கூடாது என்ற எண்ணத்துடன் அவனுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி அவனது வெளிநாட்டுப் பிரயாணத்திற்கு வேண்டிய அலுவல்களில் அவனுடன் இணைந்து ஈடுபட்டாள். அவன் புறப்பட்டுச் சென்ற நாளில் கலங்கிய கண்களுடன் வளாகத்தின் வாசலில் வைத்து கையசைத்து விடை கொடுத்தாள். அமெரிக்கா வந்த சுரேன் அங்கு இருந்தானே ஒழிய அவனின் மனம் அடிக்கடி ஆர்த்தியின் பக்கத்திலேயே இருந்தது. ஆர்த்தியின் மனமும் சுரேனின் அருகிலேயே இருந்தது. ஓராண்டு பூர்த்தியானது. ஆர்த்தியின் படிப்பும் பூர்த்தியாகியது. ஆர்த்தியின் பெற்றோர் அவளுக்குத் திருமணம் செய்து வைத்து தங்களது கடமையை நிறைவேற்ற முனைந்தனர். இந்நிலை அறிந்த ஆர்த்தி தான் சுரேனை விரும்புவது முதல் அவன் வெளிநாடு சென்றுள்ள விடயம் அனைத்தையும் விபரமாகக் கூறினாள். அவளது விருப்பத்தை அறிந்த பெற்றோர் அவளது காதலுக்குத் தடையேதும் கூறாததுடன் திருமண சம்பந்தமான ஏற்பாடுகளையும் நிறுத்திக் கொண்டனர். சுரேனின் கடிதங்கள் அவனின் துயரத்தை ஆர்த்திக்கும் ஆர்த்தியின் கடிதங்கள் அவளின் துயரநிலையை சுரேனுக்கும் அறிவித்த வண்ணமிருந்தது.

இடையில் விதி தனது கைவரிசையை காட்ட ஆரம்பித்தது. சுரேன் தனது அமெரிக்க பல்கலைக்கழக சகமாணவியாகிய ரீட்டாவுடன் பழக ஆரம்பித்தான். ஆரம்பத்தில் வெறும் நண்பர்களாக இருவரிடையே ஏற்பட்ட உறவு அங்குள்ள சூழலில் கணவன் மனைவி என்ற பந்தம் வரை இட்டுச் செல்ல முற்பட்டது. இதனால் சுரேனின் நடவடிக்கைகள் மாறுபட்டன. ஆர்த்திக்கு அவனது கடித எழுத்துக்கள் குழப்பத்தை உண்டு பண்ணின. ஒரு முறை நேரடியாகவே ஆர்த்தி நீ இன்னும் திருமணம் செய்யவில்லையா? எனக் கேட்டு எழுதியிருந்தான். அதைக்கூட ஆர்த்தி அவன் விட்ட மிகப் பெரிய ஜோக்காக எடுத்துக் கொண்டாள். நாட்கள் செல்லச் செல்ல கடிதங்கள் வருவது நின்று விட்டது. ஆர்த்தியின் மனம் தபால்காரனின் வருகைக்காக தவம் கிடக்கத் தொடங்கிவிட்டது. அவள் எதிர்பார்த்த தபால்காரன் அன்று வந்திருந்தான். அவன் கொடுத்த தந்தியை வாங்கிப் பிரித்த அவளின் தந்தை தபால்காரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற வழியையே நோக்கிய வண்ணம் நின்றுகொண்டிருந்தார். தந்தையின் நிலை கண்டு ஓடி வந்த ஆர்த்தி தந்தையின் கையிலிருந்த் கந்தியை வாசித்ததும் மின்சாரத்தில் தாக்கப்பட்டவள் போல் தந்தையின் காலடியில் விழுந்தாள். துள்ளிவந்த ஆர்த்தியை அம்புபட்ட மான்போல் நிலத்தில் வீழ்த்திய செய்தி அவளது உயிருக்குயிரான சுரேன் விபத்தொன்றில் சிக்கி இறந்துவிட்டான் என்பதாகவும் மிகவும் சிதைந்து போயிருப்பதால் உடலை அனுப்பி வைக்க முடியாத நிலை என்பதாகவும் இருந்தது.

கற்பனைகளும் கனவுகளுமாக ஆசைகளை மனதில் வளர்த்து வந்த ஆர்த்தி தந்தியின் தாக்கத்திலிருந்து மீள பல வருடங்களாகியது. யாராலுமே அவளைத் தேற்றி அவளுடைய பழைய நிலைக்கு அவளைக் கொண்டுவர முடியாமல் போய்விட்டது. எதிலுமே பற்றில்லாமல் ஒரு நடைப்பிணமாக பெற்றோரின் நலனுக்காக நடமாடி வந்தாள். அவ்வாறு வாழ்ந்த நாட்களிலும் அவள் சுரேனின் மனம் விரும்பிய நீல நிறத்தை மறந்து விடவில்லை. அவள் உடை என்றுமே நீல நிறமாகவே விளங்கியது. அன்று பெற்றோரின் வற்புறுத்தலுக்காக அவர்களுடன் கோணேஸ்வரம் கோயிலுக்குச் சென்றாள். அவள் மனம் அச்சூழலில் தானும் சுரேனும் வந்தபோது நடந்த நிகழ்ச்சிகளை அசைபோட்ட வண்ணமிருந்தது. அவள் மனம் அடிக்கடி சுரேன் என்னை விட்டுப் போக உங்களுக்கு எப்படி மனம் வந்தது என்ற வினாவையே கேட்டுக்கொண்டிருந்தது. அவ்வேளையில் அங்கு ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்த இரு சிறுவர்களின் மீது அவளது கவனம் திரும்பியது. அக் குழந்தைகளின் சரளமான ஆங்கில உரையாடலையும் செழுமையான உடல் அமைப்பையும் கண்டு அவர்கள் வெளிநாட்டில் பிறந்து வளர்ந்து வரும் குழந்தைகள் என்பதையும் தீர்மானித்துக் கொண்டாள். அவர்களின் உரையாடலையும் விளையாட்டையும் ரசித்த வண்ணம் அவ்விடத்தில் ஆர்த்தி நின்றுகொண்டிருந்தாள். சிறிது நேரத்தின் பின் அவ்விரு குழந்தைகளும் தமது பெற்றோர் இருக்கும் இடம் நோக்கி விரைந்து ஓடினர். அவர்களின் பின்னால் தன் விழிகளின் பார்வையை ஓடவிட்ட ஆர்த்தி அவர்கள் சென்ற இடத்தில் அமர்ந்திருந்த ஆடவனின் பின்புறத் தோற்றம் கண்டு மனதில் ஒருவித வியப்பு மேலிட ஆ! அது என் சுரேன் போலல்லவா இருக்கிறது எனத் தனக்கு மட்டும் கேட்கும் குரலில் கூறிக்கொண்டாள். அதே நேரம் எதிர்பாராத விதமாக அப்பக்கம் தனது பார்வையை திருப்பிய சுரேன் அங்கிருந்து தன் பார்வையை திருப்ப முடியாதவனாய் செயலிழந்து போனான். மின்னலடித்த வேகத்தில்தான் ஏமாற்றப்பட்டு விட்டதை அறிந்து கொண்ட ஆர்த்தியால் அவ்விடத்தில் நின்று கொண்டிருக்க முடியவில்லை. அவள் மனம் அன்று சுரேன் தனக்கு காட்டிய அக் கற்பாறையை நோக்கி அழைத்து வந்தது அடுத்த சில நிமிடத்தில் அவ் அயலில் நின்றிருந்தோர் அனைவரும் ஐயோ! ஓர் இளம் பெண் கடலில் குதித்துவிட்டாள் எனக்கூறி அவ்விடத்தை நோக்கி ஓடி வந்தனர். சுரேன் குடும்பத்தாரும் அவ்விடம் நோக்கி ஓடி வந்தனர். அங்கே அவனது நினைவுடன் வாழ்ந்து வந்த ஆர்த்தி நினைவிழந்து, செயலிழந்து பிணமாக கரைக்குக் கொண்டுவரப்பட்டுக் கொண்டிருக்கிறாள். அவ்வேளையிலும் அவள் அவனுக்குப் பிடித்தமான நீல நிற ஆடையுடன் தான் இருந்தாள். அதுமட்டுமல்ல அவன் விரும்பிய நீலக்கடலிலேயே அவள் தன் உயிரையும் இழந்து நின்றாள். அங்கு நடந்த நிகழ்ச்சி பற்றி எதுவுமே அறியாத ஆங்கிலேயப் பெண் ரீட்டா சுரேனிடம் அந் நிகழ்ச்சி பற்றி அறியும் ஆவலில் எத்தனையோ கேள்விகளைக் கேட்டாள். எதற்கும் விடை கூறுமல் சுரேன் ஊமையாகி நின்றான். அவனது குழந்தையின் கையிலிருந்த வானொலியில் ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருந்த பாடலின் வரிகளாகிய ''பாதை மாறிப் போகும்போது யாரும் வந்து சேராது'' எனும் வரிகள் சுரேனின் மனதில் சாட்டை அடி அடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கணணி ஓர் கண்ணோட்டம்

மா. கணேசன்
(வர்த்தகமாணி இறுதி வருடம்)

இலங்கையில் தற்போது பாவனையில் இருக்கும் விஞ்ஞானக் கண்டு பிடிப்புச்சாதனங்களும் தொழில் நுட்பக் கருவிகளும் பிறநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவையே ஆகும். இந்த வகையில் கணணித் தொழில் நுட்பமும் பிறநாடுகளில் இருந்து தருவிக்கப்பட்டதாகும். தரவு முறையாக்கம் வழமையான அட்டை இயந்திரங்களுடன் 1946ம் ஆண்டில் இலங்கையில் ஆரம்பமாகியது எனலாம். எனினும் கணணித் தொழில் நுட்பச்சாதனங்கள் ஏனைய நாடுகளால் ஏற்கனவே நிருமாணிக்கப்பட்ட போதும் இலங்கையில் முதலாவது கணணி ஐ. சி. ரி. (I. C. T.) 558 1964ம் ஆண்டு நிருமாணிக்கப்பட்டது. அடுத்து சர்வதேச கணணிகள் வரையறுக்கப்பட்ட நிறுவனம் (I. C. L.) அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தில் தமது 1901 கணணியையும் சர்வதேச வியாபார இயந்திர நிறுவனம் (I. B. M.) பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் தமது 3.60/20 கணணியையும் நிறுவியதுடன் 1967 காலப் பகுதியைத் தொடர்ந்து இலங்கையில் கணணியுகம் மலர்ந்தது. இக் காலப்பகுதியில் தரவு முறையாக்கத்துக்கு கணணிகள் உபயோகிப்பது நியாயம் என்ற கருத்தின் பேரில் கணணி இறக்குமதிக்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஆரம்பத்தில் கணணிகள் அரசாங்கத்துறையில் உள்ள மூன்று பெரிய கூட்டுத்தாபனங்களிலும் மத்திய வங்கியின் குடிசன மதிப்புத் திணைக்களத்திலும் இரு தனியார் சேவைப் பணியக கம்பனியிலும் அமைக்கப்பட்டன. வழக்கில் இல்லாத கணக்கிடும் சாதனங்களுக்குப் பதிலாக கணணி இறக்குமதி செய்ய இவ்விரு கம்பனிகளுக்கும் அரசாங்கத்தால் அனுமதி அளிக்கப்பட்டது.

அட்டவணை 1

**ஆரம்பத்தில் கணணிகள் பிரயோகிக்கப்பட்ட காரியங்கள் வருமாறு:**

| பாவித்த நிறுவனங்கள் | கருமங்கள் |
|---|---|
| ஜனத்தொகைக் கணக்கெடுப்பு | 12.7 மில்லியன் மக்கள் (1971) |
| தேசிய சேமலாபநிதி | 3.0 மில்லியன் ஊழியர்கள் |
| பரீட்சைகள் | 350,000 நேர்வு நாடிகள் |
| உரிமைச் சீட்டுக் கட்டணங்கள் | 300,000 உரிமைச் சீட்டுக்கள் |
| காப்புறுதி | 200,000 பத்திரதாரர்கள் |
| மின்சாரக் கட்டணங்கள் | 175,000 வாடிக்கைக்காரர்கள் |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 35000 சந்தாக்காரர்கள் |
| கையிருப்புக் கட்டுப்பாடு | 20000 உருப்படிகள் |
| சம்பளப்பட்டியல் | 12000 ஊழியர்கள் |
| வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு | 600 கணக்குகள் |
| எந்திரவியல் வடிவமைப்பு | |
| எந்திரவியல்க் கல்வி | |
| இறக்குமதி, ஏற்றுமதிவியாபார அறிக்கைகள் | |
| சேவைப்பணியகத் தொழிற்பாடுகள் | |

மூலம்:- பொருளியல் நோக்கு மார்ச்சு 1981 பக்கம் 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகாலத்தில் கணணித் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி குறிப்பிடத்தக்களவு ஏற்படவில்லை. 1970ம் ஆண்டுக்கும் 1977ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் கணணிப் பாவனை வளர்ச்சி மிகவும் மெதுவாகவே ஏற்பட்டது. 1977ம் ஆண்டுவரை இலங்கையில் 13 கணணிகள் இருந்ததாக கூறப்படுகிறது. இத்தகைய மெதுவான வளர்ச்சிக்குக் காரணம் இக்காலப்பகுதியில் இருந்த அரசாங்கக் கொள்கையே ஆகும். அதாவது கட்டுப்பாடான இறக்குமதிக் கொள்கையின் காரணமாக அதிகளவு கணணிகள் இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப்படவில்லை. ஆனால் 1977ம் ஆண்டைத் தொடர்ந்த காலப்பகுதியில் கணணி நிருமாணிப்பு வளர்ச்சி துரிதமாக ஏற்பட்டது. 1977ம் ஆண்டிலிருந்து கணணியைக் கொண்டு கணக்கிடுவதில் ஏற்பட்ட துரிதமான வளர்ச்சியை கணணியின் தொகையிலும் பெறுமதியிலும் ஏற்பட்ட அதிகரிப்பில் இருந்து அறிந்து கொள்ளலாம். இத்தகைய துரித வளர்ச்சிக்கான காரணம் நவீன மயமாக்கலுக்கு ஊக்கமளிக்க அரசாங்கம் பின்பற்றிய கொள்கை இக்காலப் பகுதியின் தெளிவாகத் தெரிந்த பலத்த முயற்சிகளின் வளர்ச்சி, தாராள இறக்குமதிக் கொள்கை, உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகப் பெருக்கம், தனியார் துறையின் துரித வளர்ச்சி, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் வருகை போன்றவற்றினைக் கூறலாம். தற்போது இலங்கையில் ஏறத்தாள 180 கணணிகள் இருப்பதாக ஆய்வுக்கன்னை (Study Term) கூறுகிறது. இது 1975ல் 9 ஆகவும் 1978ல் 16 ஆகவும் இருந்து 1980ல் 60 ஆகவும் காணப்பட்டது.

அட்டவணை II

**இலங்கையில் கணணி நிருமாணிப்பு**

| ஆண்டு | கணணிஎண்ணிக்கை |
|---|---|
| 1964 | 1 |
| 1967 | 2 |
| 1969 | 6 |
| 1970 | 8 |
| 1971 | 8 |
| 1974 | 8 |
| 1975 | 9 |
| 1976 | 10 |
| 1977 | 13 |
| 1978 | 16 |
| 1979 | 33 |
| 1980 | 60 |
| 1981 | 100 |
| 1982 | 180 |

மூலம்:- இலங்கையின் கணணிக் கொள்கையின் 1982 தற்போது நிறுவப்பட்டிருக்கும் 180 கணணிகளில் 100 கணணிகள் நுண்கணணி எனக் கூறப்படுகின்றது. அவ்வாயின் கணணிகள் அனைத்தையும் கணக்கில் எடுப்பின் கடந்த நான்கு வருடங்களில் ஒன்பது மடங்கு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதாவது ஒன்று திரட்டிய வளர்ச்சி வீதம் 100 ஆகும். ஆயினும் நுண்கணணிகள் அல்லாதவைகளைக் கருத்திற் கொள்வோமாயின் 1978ம் ஆண்டின் இறுதியில் நுண்கணணி அல்லாதவை அறவே இல்லை எனக் கூறலாம். இக்கால கட்டத்தில் அவற்றின் அதிகரிப்பு 4 மடங்கு ஆகும். ஆண்டு வளர்ச்சி வீதம் 4 மடங்கு மட்டுமே ஆகும்.

பெறுமதி நிபந்தனைகளின் படி இலங்கையின் கணணி மீதான ஒரு அதிகரிப்பையே காட்டுகின்றது. 1978ல் இலங்கையில் நிருமாணிக்கப்பட்ட கணணியின் பெறுமதி 35 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 1982 நடுப்பகுதி வரை பெறுமதி அதிகரிப்பு 150 மில்லியன் ஆகும். அதாவது ஒன்று திரட்டிய வளர்ச்சி வீதம் 40% ஆகும். ஆரம்பத்தில் வளர்ச்சி வீதம் மெதுவாக நிகழ்ந்ததையும் பின்பு சில முக்கிய காரணிகளால் அதிகளவு வேகத்தில் இறக்குமதி அதிகரித்ததையும் காணலாம். 1979 ஏப்ரலுக்கும் 1981 மார்ச்சுக்கும் இடையில் நிருமாணிக்கப்படும் முதலீட்டுப் பொருட்களுக்கு அப்பொருளின் பெறுமதியை வாங்கிய வருடத்திலே முழுத் தொகை தேய்வு விடுதொகை (Lum Sum Depreciation) விடப்பட்டதால் அதிகளவு கணணி நிருமாணிக்கப்பட்டது. இத்தகைய வசதியை உள்ளடக்கி பெறுமதி அடிப்படையில் அதிகரிப்பை நோக்கின் 1971ம் ஆண்டிலிருந்து பெறுமதி அடிப்படையில் ஆண்டு அதிகரிப்பு 20%தை மிஞ்சவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக் கணணிப் பிரயோகத்தை துறை ரீதியாக நோக்கின் தனியார் துறையில் கணணியின் வளர்ச்சி எட்டு மடங்கு அதிகரிப்பைக் காட்டியுள்ளது. இதற்கான காரணம் 1977ம் ஆண்டைத் தொடர்ந்த காலப் பகுதியில் நவீனமய மாக்கலுக்கு கிடைத்த வரிச் சலுகைகளும், ஊக்குவிப்புக்களும் ஆகும். அத்தோடு தனியார் துறையின் வியாபார சம்பந்தமான நடவடிக்கைகளுக்குப் பாவிக்கக்கூடிய நுண்கணணிகள் கிடைக்கக் கூடியதாக இருந்தது. இது பிரதானமாக கணக்கு வைத்தல் தொழிற்பாட்டுக்கே பாவிக்கப் படுகின்றது. மற்றும் இச் சிறிய நுண்கணணிகள் திறமையான செயற்பாடு, குறைந்தவிலை தனது வியாபார இயலளவுக்கு தகுந்ததாக இருத்தல் போன்ற தன்மைகளும் காணப்பட்டன. ஆனல் அரசாங்கத் துறையைப் பொறுத்த வரை தனியார் துறையில் காணப்படும் அதிகரிப்புப் போன்று காணப்படவில்லை. அரசாங்கத் துறையில் கணணி வளர்ச்சி வீதம் இரண்டு மடங்கே ஆகும். பெரும்பாலும் அரசாங்கத்துறையில் நிருமாணிக்கப் பட்டிருக்கும் கணணிகள் நடுத்தர பெரிய அளவுகளைக் கொண்டதாகும். காரணம் அரசாங்கத்துறையில் நடவடிக்கைகள் பாரியளவாக இருப்பதாகும்.

இலங்கையில் நடைமுறையில் இன்று மூன்று வகையான கணணிகள் பாவிக்கப்பட்டு வருகின்றது. இவற்றைப் பாகுபடுத்த எத்தகையதொரு நியம அளவீட்டுக் கருவிகளும் இல்லை. ஆனல் கணணியின் மத்திய முறையாக்க அலகின் ஞாபகசக்தியின் இயலளவு, விரிவாக்க இயலளவு, முறையாக்கியின் சுற்றுவட்ட நேரம், கிரயம் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டு இவற்றினை வகைப்படுத்தப்படுகின்றது. அட்டவணை 3ன்படி காணப்படும் தன்மைகளைப் பொறுத்து இவற்றை நுண்கணணி, நடுத்தரக்கணணி, பெரியகணணி எனப் பாகுபடுத்தலாம்.

அட்டவணை III

| தன்மைகள் | Micro நுண்கணணி | Mini நடுத்தரம் | Large பெரிது |
|---|---|---|---|
| 1) மத்திய முறையாக்க அலகின் ஞாபகம் | 4 கே எழுத்து முதல் 64 கே எழுத்து வரை | 32 கே - 512 கே | 512 கே - 12 எம் |
| 2) விரிவாக்க இயலளவு | 4 ரேமினல் | 64 ரேமினல் | 256 ரேமினல் |
| 3) முறையாக்கியின் சுற்று வட்ட நேரம் | 250 நுண்விஞடி | 300 நனேவிஞடி | 80 நனேவிஞடி |
| 4) கிடைக்கும் வகையின | கொமடோர் பேஸ் ரேடியோ சாக்கனென் அப்பில் | ஐ. வி. எம் ஐ. சி. எல் வாங் | வாங் ஐ. வி. எம் ஐ. சி. எல் |
| 5) கிரயம் | 18000 - 40000 | 400000 - 4000000 | 4000000 மேல் |
| 6) பிரயோகித்தல் மென்கலம் உ+ம் சம்பளப்பட்டியல் கணக்கீட்டு வருமதி | 12 | 100 | 1000 |
| 7) நிகழ்ச்சியல் மொழிகள் | வேசிக் போர்ரென் | விரிவாக்கப் பட்ட வேசிக் போர்ரென் | விரிவாக்கப்பட்ட வேசிக் சோபல் போர்ரென் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் கணணிப் பிரயோகத்தை மதிப்பிடுமிடத்து அதன் பாவனை மிகக் குறைவாகவே உள்ளது. உலகளாவிய அடிப் படையில் நோக்குமிடத்து இலங்கை இப் பொழுதும் மிகக் குறைவான எண்ணிக்கை யுடைய கணணிகளையே நிருமாணித்துள் ளது. 1960 ம் ஆண்டின் மதிப்பீட்டின்படி உலகில் 9000 கணணிகள் பாவனையில் இருந்தது. ஆனால் இங்கு 1964 ம் ஆண்டிலே முதன் முதல் ஒரு கணணி திருமாணிக்கப் பட்டது. உலகில் 1971 ல் 82000 கணணி களும் 1975ல் 15,5000 கணணிகளும் இருந் தன. ஆனால் இலங்கையில் முறையே 7, 9 எண்ணிக்கையான கணணிகளே இருந்தது. 1980 ல் உலகில் 30,0000 கணணிகள் இருந் தது. ஆனால் இது 1985 ல் 50,0000 ஆக அதிகரிக்குமென மதிப்பீடு செய்யப்பட்டுள் ளது. ஆனால் இது இலங்கையில் இன்றும் 180 ஐ மிஞ்சவில்லை. கணணிப்பிரயோகம் மிகக் குறைவாக இருப்பதுடன் கணணி முதலீடும் குறைவாகவே உள்ளது. வட அமெரிக்காவின் தனிப்பட்ட பல்கலைக்கழ கங்களில் இருக்கும் கணணி எண்ணிக் கையைவிட இங்கு மிகக் குறைவான எண் ணிக்கையான கணணிகளே உள்ளது. கன டாவில் குடித்தொகை 26 மில்லியனாக இருக்க அங்கு தலா மில்லியன் மக்களுக்கு 2000 கணணிகள் உண்டு. ஆனால் இங்கு 15 மில்லியன் குடித்தொகை இருக்க 1 மில் லியனுக்கு 12 கணணிகளே உண்டு. எனவே மேற்குலக நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து எமது கணணி உபயோகிப்பும் வளர்ச்சியும் குன்றியதாகவே உள்ளது.

எப்படியிருப்பினும் அண்மைக்கால ஆய்வுக்கன்னை (Study term) இலங்கையில் கணணி உபயோகிக்கும் பல்வேறு நிறுவனங் களுக்கும் விஜயங்கள் மேற்கொள்ளப்பட்ட போது அந் நிறுவனங்களின் கணணிப்பயன் பாடு மிகச் சிறப்பாக அமையுமாயின் உற் பத்தியை மிகப் பயன்தரு முறையில் குறிப் பிடத்தக்களவு அதிகரிக்கலாம் என இக்குழு மிக மிக வற்புறுத்தியுள்ளது. இன்று கண ணிப் பிரயோகம் வேலைவாய்ப்பை அதிக ரிப்பதுடன் அது உற்பத்தியையும் அதிகரிக்க வழிவகுக்கும். 1973 ன் ஐக்கிய இராச்சியத் தின் செயலாளர் நாயகத்தின் அறிக்கை யின்படி பின்வரும் முடிவு எடுத்துரைக்கப் பட்டது. " கணணித் தொழில்நுட்பம் அதி கரிக்கப்படுவது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு இன்றியமையாதது. அத்தோடு அதனை வியாபிக்கச் செய்தலும் அதன் தொழில்நுட்ப பிரயோகித்தல் என்பன குறிப்பிடத்தக்களவு நன்மையினை ஏற்படுத்த முடியும். இது இந் நாடுகளின் பொருளா தார வளர்ச்சி வீதத்தையும், சமூக வளர்ச்சி வீதத்தையும் அதிகரிக்கச் செய்யும் " என்றார். இதிலிருந்து இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு கணணித் தொழில்நுட்பம் இன்றியமையா தது என்பது புலனாகும். எப்படியிருப்பினும் இலங்கை 1964 ம் ஆண்டு கணணியை அறி முகப்படுத்தியதிலிருந்து அதன் வளர்ச்சி வேகத்தை வேகமடையச்செய்து வருவதால் இலங்கையின் பொருளாதாரத்தில் கண ணித் தொழில்நுட்பம் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

from

**POLY INSTITUTES**

**JEYARATNAM CENTRE**
TELLIPPALAI.

With the Best Compliments

from

**JEYBAWANI RESTAURANT**

VEGETARIAN
**21, GALLE ROAD,**
**BAMBALAPITIYA.**
**COLOMBO - 4**

*With the Best Compliments*

*from*

N. S. Nagalingam

**LANKA KEROSENE DEPOT**
**TELLIPPALAI.**

WITH BEST COMPLIMENTS

from

**TIP TOP TRAVELS**

**MANNAR - COLOMBO**
**JAFFNA - COLOMBO**
142, 4th Cross Street,
COLOMBO - 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

**YAPPAN JEWELLERS**

K. ARUMUGAMPILLAI & SON

64, Kannathiddy,

JAFFNA.

Telephone: **518**

WITH BEST COMPLIMENTS

from

**SCIENCE ACADEMY**

310, Clock Tower Road,

**JAFFNA.**

With Best Compliments

from

**JEYEM'S**

**Institutes**

**A/L** கலை, வர்த்தக, விஞ்ஞான

வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

K. K. S. Road,

CHUNNAKAM.

**WITH BEST COMPLIMENTS**

from

**THURKAS**

RECORDING BAR

68, K. K. S. ROAD,

CHUNNAKAM.

**CHITRAKALA**

PHOTOGRAPHERS

**CHUNNAKAM.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.............

## போட்டிச் சிறுகதை

# ஒரு மீனவனின் உள்ளம்!

எழுதியவர்: திரு. செ. குணரத்தினம்
3-ம் குறுக்குத் தெரு, அமிர்தகழி, மட்டக்களப்பு.

கொழும்பு தமிழ்ச் சங்கம் நடாத்திய அகில இலங்கை சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை

இரவுபகல் ஓயாமல் அடித்துப் புரளும் அந்தக் கடலலைகளைப் போல அன்னம்மாவின் இதயக்கடலிலும் எண்ண அலைகள் எழுந்து கூத்தாடிக் கொண்டிருந்தன.

நாளெல்லாம் வெயில் மழை காற்றென்று பாராமல் கடலில் கிடந்து பாடுபடும் கணவன், அவனை நம்பிச் சீவிக்கும் அவள், பிள்ளைகள் அவர்களின் நிகழ்காலம், எதிர்காலம், பசி, பட்டினி, நோய், நொடிகள்........ ...

என்றெல்லாம் பொங்கியெழுந்த துயர அலைகள் நெஞ்சக் கடலில் முட்டிமோத, அன்னம்மா குடத்தடியிலிருந்து அரிசியரித்துக் கொண்டிருந்தாள்.

விடிந்து காலை ஒன்பது மணிக்கும் மேலாகி விட்டது. குடத்தடியில் நின்ற வாழை மரத்திலிருந்து காகமொன்று நெடு நேரமாகக் கத்திக் கொண்டிருந்தது.

"ச்சோய்! சனியன்!" என்று காக்கையைப் பொரிந்து திட்டியபடி, கடற்கரைப்பக்கம் பார்வையைச் செலுத்தினாள். அக்கம்பக்கத்து கடல்தோணிக்காரர்களெல்லாம் வந்து விட்டதற்கு அறிகுறியாக தெருநீளத்துக்கும் மீனவர்களின் நடமாட்டம் அதிகரித்துக் கொண்டிருந்தது. மீன்வியாபாரி பொன்னனும், மாணிக்கமும் சைக்கில்களில் மீன்களைக் கட்டிக் கொண்டு பட்டணப்பக்கம் போய்க் கொண்டிருந்தார்கள். ஆனால் அவள் கணவன் கணபதிமுத்தனைத் தான் இன்னும் காணவில்லை.

"ம்...... இவ்வளவு நேரத்துக்கும் இந்த மனிசன் என்ன செய்யிது உடனத்தவனுகளெல்லாம் வீட்டுக்கு வந்து எவ்வளவோ நேரமாப் பொயித்து! அந்தச் சிமோன் வாடிச் சிங்களவனுகன்ற போட்டுக்களும் வந்துத்து. ராவும் ஒண்டும் தின்னாமப் போனவர்" என்று தனக்குள்ளேயே புறுபுறுத்தபடி அன்னம்மா அவசர அவசரமாக அரிசியை அரித்தெடுத்து உலையை மூடிவிட்டு, வெளியே வந்தாள். நேரம் கரையக்கரைய அவள் மனம் தன் கணவனைப் பற்றி மிகப்பயங்கரமாகவெல்லாம் நினைக்கத் தொடங்கியது "ஆண்டவனே! அப்படியொன்றும் நேரக் கூடாது. அப்படி எதுவுமென்றால் நானும் பிள்ளைகளும் இந்த வங்காள விரிகுடாக் கடலில்தான் மிதப்பம்" என்றபடி முந்தானையை இழுத்துச் செருகிக் கொண்டு வேகமாக நடந்தாள்.

கணபதிமுத்தன் பரம்பரைபரம்பரையாக மீன்பிடித்து வாழும் ஒரு மீனவ குடும்பத்தைச் சேர்ந்தவன். சிறுவயதிலிருந்தே மீன்பிடித்தொழில் செய்வதில் நல்ல ஊக்கம் காட்டினான். இதை அவதானித்த அவனுடைய தந்தை அவனை எப்படியாவது இந்தத்தொழிலில் ஈடுபட வைக்காமல் நன்றாகப்படிப்பித்து ஒரு அரசாங்க உத்தியோகத்தில் சேர்த்து விடவேண்டுமென்று முயற்சி செய்தார்.

காலமெல்லாம் கடலைநம்பிக் கஷ்டப்பட்டு உழைத்தும் பிற்காலத்தில் நிம்மதியாக வாழ முடியாமல் திண்டாடும் பல மீனவர்களைப் பார்த்த அனுபவசாலியான அவர் தன் பிள்ளைக்கும் அந்தக்கதி நேரக் கூடாதென்று எண்ணினார். ஆனால் அவர் முயற்சி கைகூடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் அவருக்கு உழைப்புப் போதுமானதாக இருக்கவில்லை மாத்திரமல்ல கணபதிமுத்தனுக்கும் தலைக்குள் படிப்பு ஏறவில்லை.

''இனியென்ன செய்வது விதிப்படி நடக்கட்டும்'' என்று தீர்மானித்துக் கொண்டு கணபதிமுத்தனின் விருப்பம் போலவே அவனை கடல் பிழைப்பிற்குத் தன்னோடு சேர்த்துக் கொண்டார்.

தந்தையும், மகனும் உழைக்கின்ற உழைப்பு ஒரு குடும்பத்திற்கு வரக் கூடாதென்று ஆண்டவன் நினைத்தானோ என்னவோ கணபதிமுத்தன் நன்றாகத் தொழில் செய்யப் பழகிய ஓராண்டிற்குள் அவன் தந்தை தணிகாசலத்தார் கட்டையைப் போட்டு விட்டார். அவர் கண்மூடி சொல்லி வைத்தாற் போல அடுத்த வருசமே அவர் மனைவி செல்லம்மாவும் காலமாகிவிட்டாள். காலம் மிக வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. மற்றவர்களைப் போல கணபதிமுத்தனுக்கும் தான் உழைப்பதைக் கொண்டு வந்து கொடுக்க, அதை அவனுக்கு ஆக்கிப்போட, இன்பதுன்பங்களை அவனோடு பகிர்ந்து கொள்ள ஒரு துணை தேவைப்பட்டது. ஆம்! கணபதிமுத்தன் ஒரு ஏழை மீனவகுடும்பத்துப் பெண்ணை அன்னம்மாவை மணஞ்செய்து கொண்டான்

கணபதி முத்தனுக்கு அவனுடைய தந்தை வழியிலேயோ, அல்லது அன்னம்மாவின் வழியிலேயோ ஒருவித உதவிகள் இல்லாவிட்டாலும் அவனுடைய அயராத கெட்டித்தனமான உழைப்பின் வல்லமையினால் அவர்கள் குடும்பம் தட்டுப்பாடில்லாமல் வாழ்ந்து கொண்டிருந்தது.

இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையாகிவிட்ட கணபதி முத்தனின் தொழில்திறமையைக் கண்டு அவனை என்ஜின்போட் வைத்துத் தொழில் நடத்தும் நாகலிங்கத்தார் தன் போட்டில் வந்து தொழில் செய்யுமாறு அழைத்தார்.

அப்போது ஓட்டைத்தோணியை வைத்துக் கொண்டு காலத்தை ஓட்டிய கணபதி முத்தனுக்கு நாகலிங்கத்தாரின் போட்டில் போய் தொழில் பார்ப்பது வசதியாகவே யிருந்தது. அவன் எதிர்பார்த்ததைப் போலவே நாகலிங்கத்தார் அவனுடைய உழைப்பிற்குத்தக்க கூலியைக் கொடுக்கத் தவறவில்லை. ஆனால் போகப்போக அவருடைய செய்கைகள் கணபதிமுத்தனுக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணியது.

நாகலிங்கத்தார் எப்போதுமே ஒரு பசுத்தோல் போர்த்த போலியாகவே வாழ்ந்து வந்தார். மிக நெருக்கமாக அவரோடு பழகியவர்கள் கூட அவரை மதிப்பிட முடியாமலிருக்கும். தன்னையும், தன் குடும்பத்தையும் உயர்ந்த அந்தஸ்தில் வைத்துக் கொள்ள அவர் எந்தக் காரியத்தையும் செய்யப் பின்வாங்கவே மாட்டார். ஊர், ஊர்மக்கள் எப்படிப் போனாலும் பரவாயில்லை தானும் தன் குடும்பமும் நன்றாக வாழ்ந்தால் போதுமென்ற குறுகிய மனம் படைத்தவர் அவர். உழைத்துழைத்து நிறையத் தேடி வைத்திருந்த நாகலிங்கத்தார் மேலும் உழைப்பை விஸ்தரிக்க ஆரம்பித்தார். அதன் முதற்படியாக மேலும் புதிதாக மூன்று என்ஜின் போட்டுக்களை வாங்கி விட்டார். என்ஜின் போட்டுக்கள் வந்து இறங்கியதும் அந்த ஊர் மீனவர்களில் பலர் சந்தோசப்பட்டார்கள் அதில் கணபதி முத்தனும் ஒருவன்.

''என்ன இருந்தாலும் பல குடும்பங்களுக்கு கிரமமாக தொழில் வாய்ப்பு வந்து சேர்ந்து விட்டது.'' என்று ஊருக்குள் கதையடிபட்டு ஒருநாள் கூடக் கழியவில்லை திடீரென பிற ஊர்களைச் சேர்ந்த பல சிங்கள மீனவர்கள் அங்கே வந்து இறங்கிக் கொண்டார்கள். அவர்களைக் கண்டதும் எல்லோருக்குமே அதிர்ச்சியாகப் போய் விட்டது. ''ஏற்கனவே ஐந்தாறு என்ஜின் போட்டுக்களை வைத்துக் கொண்டு, பிற ஊரைச் சேர்ந்த சிங்கள மீனவர்கள் கடற்கரையில் வாடிகளைக் கட்டிக் கொண்டு தொழில் செய்வது போதாதென்று இவன் நாகலிங்க முதலாளியும் தன் போட்டுக்களுக்கு சிங்கள மீனவர்களை வைத்துக் கொள்ள வேண்டும். ஏன் நம்ம ஊர்மீனவர்களை வைத்துக் கொண்டு தொழில் செய்யலாமே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது வாழ்த்துக்கள்

கல்முனையில்

உங்கள் தேவைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்ய எவ்வேளையிலும் அழைக்கின்றது

கல்முனை ப. நோ. கூ. சங்கம் கல்முனை.

உங்களுக்கு தேவையான ✻ ஜவுளிவகைகள் ✻ கட்டிடப் பொருட்கள் ✻ விவசாயப் பொருட்கள் ✻ கோழித்தீன் வகைகள் ✻ ஏனைய நுகர்ச்சிப் பொருட்கள் எது வேண்டுமானாலும் குறைந்த செலவில் நிறைந்த சேவைக்கு நாடுங்கள்

# கல்முனை ப. நோ. கூ. சங்கம்

## மார்க்கட் வீதி, கல்முனை.

கதிரைகளும் குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு விடப்படும் என்பதை மகிழ்வுடன் தெரிவிக்கின்றார்கள்.

கல்முனை ப. நோ. கூ. சங்கத்தினர்

---

## அன்பளிப்பு

# காந்தளகம்

213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

---

## எமது வாழ்த்துக்கள்

# சுகன் கொண்டா வேக்ஸ்

ஜப்பான் மோட்டார் பைசிக்கில்
திருத்த வேலைகளுக்கு
சிறந்து விளங்கும் நிறுவனம்

காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

For Money Matters.

SHABRA UNICO FINANCE LTD.

NO. 16. NEW BULLERS ROAD,
COLOMBO - 4.
T. P. 589310

உங்களுக்குத் தேவையான
* உணவுப் பொருட்கள்
* சாய்ப்புச் சாமான்கள்
* குளிர் பானங்கள்
* சப்பாத்து வகைகள்
* புடவைகள்
* துவிச்சக்கர உதிரிப்பாகங்கள்
* மின்சார உபகரணங்கள்
* மருந்துவகைகள்

மற்றும் பலவும் நிதானவிலையில் பெற்றுக் கொள்ள எம்மிடம் ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

யாழ்ப்பாண
ஐக்கிய வியாபாரச் சங்கம்

420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
150, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

தொலைபேசி எண் :
22438, 22537 & 22370 யாழ்.

வாழ்த்துகிறோம்

எப்பொழுதும்
நீங்கள் விரும்பும்
தங்க, வைர நகைகளை
திருப்தியுடன் பெறுவதற்கு உகந்த இடம்:

ராணி ஆபரண மாளிகை

ஆடர் நகைகள்
குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

63, கன்னதிட்டி, (R. G. பில்டிங்)
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஊருக்குள் உண்டான குசுகுசுப்பு ஒருநாள் நாகலிங்கத்தாரின் வீட்டுக்குள்ளேயே பலமாக எதிரொலிக்கத் தொடங்கியது. கணபதிமுத்தனின் தலைமையில் ஒரு மீனவர் கூட்டம் நாகலிங்கத்தாரின் முன்னிலையில் வந்து நிற்கும் என்று அவர் சற்றும் எதிர்பார்க்கவேயில்லை. ''முதலாளி, நீங்க செய்யிறது கொஞ்சம் கூட நல்லாயில்லை. ஏற்கனவே சிங்கள மீனவர்கள் வந்து நம்ம ஊரில் வாடியடித்துக் கொண்டு, நம்ம தொழிலுக்குக் குறுக்கே நிக்கிறது உங்களுக்குத் தெரியும். அது போதாம நீங்களே மேலும் சிங்களவர்கள் அதுவும் உங்கட போட்டில தொழில் செய்யவிட்டா நாளைக்கு நம்ம ஊர் மீனவர்களெல்லாம் தொழில் செய்யேலாமப்போகும்.'' என்று சொன்ன கணபதிமுத்தனை நாகலிங்கத்தார், சாய்வு நாற்காலியில் சாய்ந்திருந்தவாறே ஒரு மாதிரியாகப் பார்த்துச் சிரித்து விட்டுச் சொன்னர்.

''இப்ப என்ன குடிமுழுகிப் பொயித்தெண்டு போட்டு வந்து நிக்கிறீங்க. சும்மா கிடந்த சங்க ஊதிக் கெடுக்காம உங்கட உங்கட பாட்டுக்குப் போங்க பாப்பம் ஆண்டவன்ட ஊரிலை ஏண்டவன்டபாடு! அதோட நாம ஒரு உண்மைய ஒத்துக் கொள்ளவேணும் நம்மட ஆக்களைக் காட்டிலும் அவனுகள் நீண்டதூரம் கடலுக்குப் போய் பெரிய பெரிய மீனெல்லாம் புடிச்சி வாற திறமைசாலிகள் இல்லையா.''

''அதில நியாயம் இல்ல முதலாளி, எங்கட மீனவர்களும் தூரக்கடலுக்குப் போய் நல்ல மீன்களப்புடிச்சி வரஏலும். ஆன அதுக்குரிய வசதிகள் இல்ல. அதச் செய்து குடுக்கவும் வழிகாட்டவும் ஆக்களுமல்ல. இந்தா பாருங்களன் உங்கடபோட்டில போற நாங்கெல்லாம் அவனுகளோடதானே துலதூரம் போய் வாறம். ஒட்டஉடசல் தோணிகள் வைச்சிக் கொண்டு எஞ்ஜின் போட் போறதூரத்துக்குப் போகேலுமா? உங்களப்போல நாலு வசதியுள்ளாக்கள் இப்படி போட்டுக்கள வாங்கி, நம்மட ஆக்கள வெச்சி நடத்தினு நம்மட சமுதாயம் முன்னேறும் தானே முதலாளி அப்பிடிச் செஞ்சா வருசாவருசம் இயங்க வாற பிந்தியூர் சிங்களவர்களும் வரமாட்டாங்க. தயவு செய்து வந்த சிங்கள ஆக்களத் திருப்பி அனுப்பிப் போடுங்க. இல்லாட்டி இதால வீண்பிரச்சனைகள் வந்து ஊர் குழம்பிப் போகும்'' இப்படி கணபதிமுத்தன் மூச்சுவிடாமல் நின்று நியாயம் பேசக் கூடியவரென்று நாகலிங்கத்தார் நினைக்கவேயில்லை. சற்று நேரம் சிந்தித்தார்.

இவன் கணபதிமுத்தன் ஒருவன்தான் ஒன்றும் தெரியாத மீனவர்களைத் தூண்டிவிட்டு நம்ம தொழிலைக் கெடுக்கப்பார்க்கிறான்.'' என்று தனக்குள்ளேயே முடிவெடுத்துக் கொண்ட நாகலிங்கத்தார் தொண்டையைச் செருமிவிட்டபடி சொன்னர்.

'இஞ்ச கணபதிமுத்து, நீதான் இப்ப புதிசாப் பிரச்சனையைக் கிழப்புறு! சும்மா உட்டெறிஞ்சுபோட்டுப் பேசாமப் போங்க பாப்பம்! இதெல்லாம் அரசாங்கத்துக்குத் தெரிஞ்சா உங்களையெல்லாம் ' புடிச்சு அடைச்சிப்போடும் கவனம்' இத்தோடு கணபதிமுத்தன் அடங்கிப் போய் விடுவான் என்று நாகலிங்க முதலாளி நினைத்தது பிழையாகி விட்டது.

''முதலாளி இது கட்டாயம் அரசாங்கத்துக்கும் தெரியவேணும். அப்பதான் இதுக்கொரு முடிவு வரும். நானும் உயிர் போனலும் விடப் போறதல்ல. இப்படியிப்படியே போன நாளடைவில் நாம குடியிருக்கிற இடமே இல்லாமப் போகும்'' என்று கணபதிமுத்தன் நெஞ்சை நிமிர்த்தி நின்று சொன்னதும் நாகலிங்கத்தார் சொன்னர்.

'கணபதி நீதான் இப்ப வீண்இனப் பிரச்சனையைக் கிழப்புறு''

'இது இனப்பிரச்சனயில்ல தொழில் பிரச்சனை முதலாளி. இனப்பிரச்சனைக்கு வழிகாட்டுற நிங்கதான் ஆனு நாங்க ஒரு இணக்கத்துக்கு இந்தப் பிரச்சனையைக் கொண்டுவர வேண்டுமென்று விரும்புறம்'.

உனக்கு என்ர போட்டில போய்த் தொழில் செய்துதிண்டு கொழுப்பு வைச்சித்து

''சூ உங்கட போட்டிலபோய் உழைக்க முதலேஎனக்கு கொழுப்பு இருக்கு முதலாளி. தொழில் தெரிஞ்சவனுக்குப் பயமில்லை''

அப்பிடியெண்டா உங்கட உங்கட பாட்டுக்குப் போங்கவன் இஞ்ச நிண்டு ஏன் நேரத்தை மினக்கெடுத்திறியள்'

'இது பொதுப்பிரச்சனை இதுக்குத் தீர்வு காணும நாங்க விடமாட்டோம்'

இதைக் கேட்டதும் நாகலிங்க முதலாளி பலமாகச் சிரித்தார்.

''ஏன்முதலாளி சிரிக்கிறீங்க?'' 'ஒண்டுமில்லை கொஞ்சம் பின்னலை திரும்பிப்பார்' கணபதிமுத்தன் சட்டெனத் திரும்பிப் பார்த்தான். அவனுக்குப்பின்னால் நின்ற மற்றவர்களை அங்கே காணவில்லை.

'பாத்தியா கணபதிமுத்தா இப்படி ஒத்தும இல்லாதவங்களைச் சேத்து வைத்துக் கொண்டா நீ பொதுப்பிரச்சனைக்கு வாதாடப்போறு. சும்மா உட்டுப் போட்டு நீ தொழிலைக்கவனி. நான் உனக்கு மத்தவங்களைக் காட்டிலும் நாளயிலயிருந்து ஒரு பத்துப் பதினஞ்சக் கூட்டித்தாறன்.' என்று நாகலிங்கத்தார் கணபதிமுத்தனை மடக்க நினைத்தார். ஆனால் அவன் மசியவில்லை.

''எனக்கு உதவிக்கு ஒருவனும் தேவல்ல முதலாளி நான் தனித்தே இந்தப் பிரச்சனைக்குத் தீர்வுகாணுவன். என்று முசத்தில் அறைந்தாப்போல் சொல்லிவிட்டு அங்கிருந்து விறுவிறுவென நடந்தான் கணபதிமுத்தன். அவன் போன பின்னால் நாகலிங்கத்தார் பலமாக யோசித்தார். ''ம் ... இவனுக்கு ஒருபாடம் புகட்டாட்டி நானும் ஒரு மனிசனில்ல. ஒரு கல்லில் இரண்டு காய்களை விழுத்த இதுதான் நல்ல சந்தர்ப்பம்'' என்று முடிவுகட்டிய நாகலிங்கத்தார் அப்படியே சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டார். அன்றை இரவு விடிந்ததும் ஊருக்குள் குறுக்கும் நெடுக்குமாக பொலிஸ் ஜீப்புக்கள் ஓடிக்கொண்டிருந்தன.

சிங்கள மீன்வாடிகளுக்கு நெருப்பு வைத்ததாக கணபதிமுத்தனை பொலிஸார் பிடித்துக் கொண்டனர். அதைஎதிர்பார்த்த நாகலிங்கத்தார் வீட்டிற்குள் படுத்துக்கிடந்தபடியே சிரித்துக் கொட்டினார். ஆனால் ஒருகல்லில் இரண்டு காய்கள் அவர் நினைத்ததைப்பேலே விழவேயில்லை.

சிங்கள மீன்வாடிகளுக்கு தன் சகாக்களைக் கொண்டு நெருப்பை வைத்தால் தனக்குப் போட்டியாகத் தொழில் பார்க்கும் சிங்கள முதலாளி சீமோன் தன் ஊருக்குப் பாயைக் கட்டிவிடுவான்; தனக்கு எதிராகப் போராடக் கிழம்பிய கணபதிமுத்தன் பொலிசில் பிடிபட்டு விடுவான் என்று நாகலிங்கத்தார் நினைத்திருந்தார். ஆனால் சீமோன் அப்பிடிப் போகவில்லை. பாவம் அப்பாவிக் கணபதிமுத்தன் மாத்திரமே பிடிபட்டுக் கொண்டான்.

இந்த நெருப்பு வைத்த பிரச்சனை ஊருக்குள் எழுந்து பல தாக்கத்தை ஏற்படுத்தியதனால் அரசாங்க மட்டத்தில் விளக்கம் நடைபெற்றது. இதற்கு ஊரில் உள்ள பல பெரியவர்கள் தூண்டுகோலாக நின்றார்கள். அதன்பலன் நாகலிங்கத்தாரின் பசுத்தோல் கிழிந்தது கணபதிமுத்தன் விடுதலையானான்.

''இந்த சீசன் மாத்திரம் இரு இனத்தவரும் சமாதானமாகத் தொழிலைச் செய்யலாம். அடுத்த சீசனிலிருந்து அவரவர்கள் அவரவர் பகுதிகளிலேயே தொழிலைச் செய்ய வேண்டும். அப்படியென்றால் எந்த வீண் பிரச்சனைகளும் எழ நியாயம் இல்லை.''

இவ்வாறு அரசாங்கம் அறிவித்ததை இரு இனத்தவரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டார்கள். இந்தச் சம்பவங்கள் நடைபெற்று முடிந்தபிறகு கணபதிமுத்தன் பழையபடி தன்பாட்டுக்குத் தொழிலைச் செய்யத் தொடங்கினான். நாகலிங்கத்தார் கணபதிமுத்தனின் மேலுள்ள ஆத்திரத்தை நெஞ்சுக்குள்ளேயே அடக்கிக் கொண்டு கோபதாபம் இல்லாதவரைப்போல நடக்கப் பழகிக் கொண்டார். ஆனால் அவரைப் பற்றி நன்றாக அறிந்திருந்த கணபதிமுத்தன் கொஞ்சம் அவதானமாகவே இருந்து வந்தான்.

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் கரைக்கு வராததை நினைத்து நினைத்து அழுது அன்னம்மாவின் கண்கள் சிவந்து போய் விட்டன. நாகலிங்கத்தாரிடம் ஓடினுள்.

நேரம் இரவு ஏழுமணியாகிக் கொண்டிருந்தது.

''அன்னம்மா, இப்பநேரம் என்ன இனிமேல் இருட்டுக்க எப்பிடிப் போய்த் தேடுற. உண்டபுருசன் செத்துத்தான் போயிருக்க வேணும். போட்டெல்லாம் தொழிலுக்குப் போப்புது; வேணுமெண்டாச் சொல்லியுடுறன் விடிஞ்சபுறகு வரக்குள்ள கணபதிமுத்தனின் சடலத்தைக் கண்டா ஏத்தித்து வரட்டும்.''

இதைக் கேட்டதும் அப்படியே பாய்ந்து நாகலிங்கத்தாரை கடித்துக் குதற வேண்டும் போல அன்னம்மாவிற்கு ஆத்திரமாத்திரமாக வந்தது. காறித்துப்பி விட்டு, சீமோனின் வாடியை நோக்கி ஓடினுள். தங்கள் ஊரில் பலருக்கு என்ஜின்போட் கட்டாயம் இருக்க வேண்டுமென்ற எண்ணம் அப்போது தான் அவளுக்கு தலையில் உறைத்தது. அன்னம்மாவின் பரிதாபத்தைக் கண்ட மாத்திரத்தில் சீமோன் முதலாளி, தொழிலுக்குப் போகப் புறப்பட்டுக் கொண்டிருந்த போட்டுக்களில் ஒன்றை ''இன்லறக்கு தொழிலுக்கு போக வேண்டாமென்று தடுத்து நிறுத்தினுர். சீமோன் முதலாளியின் போட்டில் அதில் தொழில் பார்க்கும் சிங்கள மீனவர்களோடு இன்னும் சில ஊரில் உள்ள தமிழ் இளைஞர்களும் ஏறிக் கொண்டார்கள். போட் கணவனைத் தேடிப் போய் கரைக்கு வரும் வரைக்கும் அன்னம்மா கடற்கரையிலேயே பிள்ளைகளையும் கூட்டிவைத்துக் கொண்டு அழுதபடியேயிருந்தாள். ஊரவர்கள், பெண்கள், பிள்ளைகள் சகிதம் அவளையும், பிள்ளைகளையும் சூழ்ந்து கொண்டார்கள்.

ஏறக்குறைய இரண்டு மணித்தியாலயம் கழித்து சீமோன் முதலாளியின் அந்த போட் கரைக்கு வந்து தட்டியது. அன்னம்மா விழுந்தடித்துக் கொண்டு அங்கே ஓடினுள். கணபதிமுத்தன் இறங்கி வந்து அன்னம்மாவை அப்படியே கட்டிப் பிடித்துக் கொண்டான். அவள் அழுதழுது எல்லா விபரங்களையும் அவனிடம் சொல்லி வைத்தாள். அந்தளவில் கணபதிமுத்தன் மக்களின் மத்தியில் சிரித்த முகத்தோடு நின்ற சீமோனின் கால்களிலே போய் விழுந்தான்.

''முதலாளி, நல்லவர்களும், கெட்டவர்களும் எல்லா இனத்துக்குள்ளயும் நிறைய இருக்கிறுங்க. ஆனுலும் உள்ளப்போல உயர்ந்த குணமுள்ள ஒருவர் எந்த இனத்துக்குள்ளயும் இருக்க முடியாது முதலாளி'' குழந்தைப்பிள்ளையைப் போல கதறினுன் கணபதிமுத்தன். சீமோன் அப்படியே அவனைத் தூக்கி நிறுத்தி அணைத்துக் கொண்டார். ''கணபதிமுத்தா, உன்னுடைய ஊர்பற்ற, தேசப்பற்ற நான் பாராட்டுறன். இனிமே நான் என்ர போட்டுக்கள்ள சரிக்குச்சரி இந்த ஊர்த்தமிழ் ஆக்களையும் சேர்த்துக் கொள்ளப் போறன். நீயும் நாளையிலயிருந்து என் போட்டுக்கு வரலாம் இப்படி சீமோன் முதலாளி சொன்ன போது கணபதிமுத்தன் அவரை வாஞ்சையோடு பார்த்தான் அந்த நேரத்தில் அவன் உள்ளத்தில் இருந்த பழையநினைவுகள் மறைந்து, புதியதோர் இனம் புரியாத பேரின்ப ஒளி வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தைப் படுத்தும் முகாமை

## "சந்தை விரிவாக்கத்தில் சந்தைப் படுத்தலின் பங்கு"

**S. சுகுமார்**
வணிகமாணி - இறுதி வருடம்

சந்தை என்றால் என்ன என்பதற்குப் பல்வேறு துறைகளைப் பொறுத்தவரையில் பல விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளது. இவ்விளக்கங்கள் அந்தந்தத் துறைகளைச் சேர்ந்தவர்களின் நோக்கம், தன்மை என்பவற்றின் அடிப்படையிலேயே அளிக்கப்பட்டுள்ளது. எது எவ்வாறாயினும் இங்கு நாம் ஒரு சந்தைப் படுத்துவோனைப் பொறுத்த வரையில் அளிக்கப்பட்ட விளக்கத்தையே கருத்தில் கொள்ள வேண்டும். இந்த வகையில் சந்தை என்பது "ஒரு பொருளை அல்லது சேவையை வாங்குவதற்காக அல்லது வாங்குவதற்கு ஊக்கப் படுத்துவதற்காகத் தொடர்புடைய எல்லா ஆட்களும் வியாபார அலகுகளுமாகும்'

சந்தைப்படுத்தல் என்பது மேலோட்டமான கருத்தில் பொருட்கள், சேவைகளை விற்பனை செய்தல் என்பதாக அமையும். ஆனால் சந்தைப்படுத்தல் என்பது இருகால கட்டங்களில் வேறு விதமாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது. பழையகால விளக்கம் நவீன கால விளக்கமே இவ்விருகாலகட்ட விளக்கங்களாகும். பழைய கால விளக்கமானது சந்தைப் படுத்தல் உற்பத்தி முடிவடைந்ததில் தொடங்கி நுகர்வோருக்குப் பொருட்களை அளிக்கும்வரை உள்ள நடவடிக்கைகளாகும். நவீன காலவிளக்கமானது உற்பத்தி செய்யமுன்னரே தொடங்கி நுகர்வோருக்குப் பொருட்களை அளித்து அதன் பிரதிபலிப்பை அறியும் வரையுள்ள நடவடிக்கைகளைக் குறிக்கும். பழையகாலச் சந்தைப்படுத்தலில் பொருட்களே மையமாக இருந்ததுடன் விற்பனையை அதிகரித்து இலாபத்தை அதிகரிப்பதற்காக நடவடிக்கை அமைந்தது. ஆனால் புதிய கால சந்தைப் படுத்தலில் நுகர்வோனே மையமாக கருதப் பட்டதுடன் நுகர்வோனைத் திருப்தி செய்வதன் மூலம் இலாபம் பெறும் நடவடிக்கையாக அமைந்தது.

சந்தை விரிவாக்கம் என்பது ஒரு உற்பத்தி நிறுவனம் தான் சந்தைப்படுத்தும் பொருட்கள் சேவைகளின் அளவினை அதிகரிப்பதாகவே கருத்தில் எடுத்தல் இங்கு முக்கியமாகும். இவ்வாறு நிறுவனம் பொருட்கள் சேவைகளின் அளவினை அதிகரிப்பது என்பது ஒன்றில் அக்குறிப்பிட்ட பொருட்கள் சேவைகள் தொடர்பாக கேள்வி ஏற்படுத்தும் நுகர்வோரின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதாலோ அல்லது கேள்வியை ஏற்படுத்தும் நுகர்வோரின் அளவில் மாற்றம் இல்லாமலேயே அவர்கள் நுகரும் அலகுகளின் அளவில் அதிகரிப்பை ஏற்படுத்துவதாலோ அல்லது அக்குறிப்பிட்ட பொருட்கள் சேவைகள் தொடர்பாக கேள்வி, ஏற்படுத்தும் நுகர்வோரின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்கின்ற அதே வேளையில் முன்னர் அவற்றினை நுகர்ந்து கொண்டிருப்பவர்களை முன்பைவிட அதிக அலகுகளை நுகரும் வண்ணம் தூண்டுதலின் மூலமோ சந்தை விரிவாக்கம் என்பதனை ஏற்படுத்த முடியும். இச்சந்தை விரிவாக்கம் என்பது அந்நிறுவனத்தின் சந்தைப்படுத்தலின் திறனிலேயே தங்கியுள்ளது. எனவே ஒரு நிறுவனம் தனது சந்தையின் பங்கினை விரிவாக்கம் செய்து கொள்ள வேண்டுமாயின் திறனான சந்தைப்படுத்தலை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். எனினும் திறனான சந்தைப்படுத்தல் என்பது சந்தைப்படுத்தற் கருமங்கள் எந்தளவு சிறப்பாக மேற்கொள்ளப் படுகின்றதோ அந்தளவுக்கே திறனான சந்தைப்படுத்தல் அமைய அதற்கேற்ப சந்தை விரிவாக்கம் என்பதும் ஏற்பட முடியும். இவ்வாறாக சந்தைப் படுத்தல் திறனாக அமைய சிறப்பாக மேற் கொள்ளப்பட வேண்டிய சந்தைப் படுத்தற் கருமங்களை சந்தை ஆராய்ச்சி, உற்பத்தி செய்தலும் தரம்பிரித்தலும், பொதியிடல், வியாபாரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியிடல், விலையிடல், காட்சிக்கு அடுக்கி வைத்தல், விளம்பரம் செய்தல், களஞ்சியப் படுத்தல், விநியோகம் செய்தல், விற்பனை யின் பின் சேவை அளித்தல் என்பனவே ஆகும். இவ்வாருன சந்தைப்படுத்தும் கரு மங்கள் சந்தை விரிவாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய முறையில் எவ்வாறு மேற்கொள்ளப் பட வேண்டும் என்பதுடன் எந்தளவான பங்கினை அளிக்கின்றன என்பது அடுத்து நோக்கப்பட வேண்டியதாகும்.

சந்தைப்படுத்தற் கருமங்களில் ஒன்ருகிய சந்தை ஆராய்ச்சி என்பது நிறுவனம் நிரம்பல் செய்கின்ற பொருட்கள் சேவைகள் தொடர்பாக நுகர்வோர் கொண்டுள்ள மனப்பாண்மை என்ன? அவை தொடர்பான அதிருப்திகள் ஏதும் உண்டா? மேலும் நுகர்வோர் எவற்றை எதிர்பார்க்கிருர்கள்? போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக நுகர்வோரின் கருத்துக்களை அறிதலே என்பதாகும். இச்சந்தை ஆராய்ச்சியானது உற்பத்தியாளர்களையும் நுகர்வோர்களையும் இணைக்கும் ஒரு நடவடிக்கையாக அமைகிறது. குறிப்பிட்ட ஒரு நிறுவனம் சந்தையை விரிவாக்கிக் கொள்ள வேண்டுமாயின் தனது நுகர்வோர் யாவரையும் திருப்திப்படுத்த வேண்டும். எனவே நுகர்வோரின் தேவைகள், அதிருப்தி, கருத்து வேறுபாடுகள் போன்றவற்றை சிறந்தமுறையில் சந்தை ஆராய்ச்சியில் ஈடுபட்டு அறிதல் வேண்டும். இவ்வாறு அறிந்தால் மட்டுமே நுகர்வோர் யாவரினதும் தேவைகளைத் திருப்திப்படுத்தும் வண்ணம் நிறுவனம் நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.

சந்தை ஆராய்ச்சியின் மூலம் புதிய நுகர்வோர் யாரும் இருக்கிருர்களா? எப் பகுதியில் இருக்கிருர்கள்? எந்தத் தராதரத்தில் இருக்கிருர்கள்? என்பவற்றை அறிந்து அவர்களுக்கு ஏற்றமுறையில் நிரம்பல் நடவடிக்கையினை மேற்கொள்வதன் மூலம் முன்னைய சந்தையின் அளவைவிட விரிவாக்கம் செய்து கொள்ளலாம். அது போலவே முன்னைய நுகர்வோக்ர்ளின் குறைபாடுகளை அறிந்து, அவர்களின் பொருட்கள் தொடர்பான மேலதிக எதிர்பார்ப்புக்களை அறிந்து அவற்றை ஈடுசெய்வதன் மூலம் அவர்களை முன்பைவிட அதிக அளவில் நுகரும் தன்மையினை ஏற்படுத்தி சந்தையினை விரிவாக்கம் செய்து கொள்ளலாம். இவ்வாருன சந்தை ஆராய்ச்சியானது நிறுவன உத்தியோகத்தர்கள் நேரடியாகச் சென்று பேட்டி காணுவதன் மூலமோ, கேள்விக் கொத்துக்களை மக்களுக்கு அளித்து அவற்றிற்கான விடைகளைப் பெறுவதன் மூலமோ அன்றேல் மக்கள் மத்தியில் நடமாட்டத்தின் மூலம் அவதானம் ஒன்றினை மேற்கொள்வதன் மூலமோ மேற்கொள்ளப்படலாம்.

அடுத்து உற்பத்தி செய்தலும் தரம் பிரித்தலும் என்னும் சந்தைப்படுத்தல் கருமத்தினை நோக்கும் போது நிறுவனமானது உற்பத்தியை மேற்கொள்ளும் போது நுகர்வோரின் தேவைக்கேற்பவும், அவர்களின் இலகுவான பாவனைக்கு ஏற்பவும் பொருட்களை உற்பத்தி செய்தல் வேண்டும். பொருட்களைத் தரம் பிரித்தல் என்பது உற்பத்தி முடிந்த பின் மேற்கொள்ளக் கூடியதொன்றல்ல. உற்பத்தியினை மேற்கொள்ளமுன்னரே மூலப் பொருட்களின் நிலையில் அல்லது குறை வேலை நிலையில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். எனவே இந்நடவடிக்கை அவதானமாக மேற் கொள்ளப்பட வேண்டும். சில பொருட்களைப் பொறுத்த வரையில் நுகர்வோர்கள் அதன் வெவ்வேறு தரங்களை விரும்பி நுகர்வோர் உ+மாக சிகரட்டை எடுத்துக்கொண்டால் சிலர் பிறிஸ்டலை நுகர்வர்; வேறுசிலர் திறீரோசஸ், போர்ஏசஸ், கோல்ட்லீப் போன்றவற்றை நுவர்வர். எனவே நுகர்வோரின் நுகர்வுத் தன்மையினை அறிந்து அவர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் வெவ்வேறு தரங்களில் உற்பத்தியினை மேற்கொள்ள வேண்டும். நுகர்வோர் இவ்வாறு வெவ்வேறு தரங்களை விரும்புவதற்கு சுவை வேறுபாடோ அல்லது பணநெருக்கடியோ காரணமாக இருக்கலாம். ஏனெனில் ஒவ்வொரு தரமான பொட்களுநம் வெவ்வேறு சுவைகளும் விலைகளையும் கொண்டதாக இருக்கும். எனவே வெவ்வேறு தரங்களில் பொருட்களை உற்பத்தி செய்து அதற்கு வேறு விலைகள் விதிப்பதனுல் அநேக நுகர்வோர்கள் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிக்கேற்றவாறு நுகர்வு நடத்தையினை அமைத்துக் கொள்வர். இதன் காரணமாக பல நுகர்வோனின் தேவை திருப்தி செய்யப்படுவதுடன் புதிய நுகர்வோர்களை யும் அவர்களின் சுவை, நிதிநிலைமைகளுக் கேற்ப நுகர்வை மேற்கொள்ளுமாறு தூண் டலாம். எனவே முன்னையவர்கள் அதிக மாக வாங்குவதாலும், முன்பைவிட அதிக நுகர்வோர் நுகர்வை மேற்கொள்வதனாலும் சந்தை விரிவடைகிறது.

பொதியிடல் என்னும் நடவடிக்கையா னது கவர்ச்சி தொடர்பாகவும், சுகாதார ரீதியாகவும், பாதுகாப்பு சம்பந்தமாகவும் நுகர்வோரால் விரும்பப்படும் ஒன்றாகும். எவற்றை நுகர்வோர் விரும்புகிறார்களோ. அவற்றை திருப்தி செய்வதனால் நுகர்வினை அதிகரிக்க முடியும். அத்துடன் நுகர்வோர் தொகையினையும் அதிகரிக்க முடியும். இவ் வாறு பொதியிடலின் போது பல்வேறு பட்ட நுகர்வோரின் பொருளாதார நிலைமை களுக்கேற்ப வெவ்வேறு அளவுகளில் பொதி யிடுவதன் மூலம் இயலாமை காரணமாக முன்பு நுகராதவர்களை நுகர்வில் ஈடுபடுத்த முடியும். இதற்கு உ+மாக தேயிலையை வெவ் வேறு அளவுகளிலான சரைகளில் இடுவதனைக் கூறலாம். பொதியிடலை மேற்கொள்ளும் போது எப்பகுதி நுகர்வோருக்கு பொருள் நிரம்பல் செய்யப்பட உள்ளது. என்பதனைப் பொறுத்து ஏற்ற அளவுகளில் நிறங்களில் மேற்கொள்ள வேண்டும். முஸ்லீம்கள் வாழும் பிரதேசங்களில் நிரம்பல் செய்யும் போது பச்சை, மஞ்சள் நிறங்களைப் பயன் படுத்தல் சிறந்ததாகும். இவ்வாறு நுகர் வோர்களின் விருப்புக்களுக்கேற்ப பொதியி டுவதனால் சந்தையினை விரிவுபடுத்திக் கொள் ளலாம்.

வியாபாரக் குறியிடல் என்பது நிறுவ னம் நிரம்பல் செய்யும் பொருட்கள் தொடர்பாக நுகர்வோர் இலகுவாக அடை யாளம் காணக்கூடிய விதத்தில் பொருட் களில் அல்லது உறைகளில் குறியிடலாகும். நிறுவனம் குறிப்பிட்ட ஒரு குறியின் கீழ் விற்பனை செய்வதன் மூலம் நுகர்வோரை வேறு பொருட்களைத் தவறுதலாக நுகரும் வாய்ப்பை ஏற்படுத்தாமலும் புதிய நுகர் வோர் இலகுவில் அடையாளம் கண்டு கொள்ளக்கூடிய தன்மையினையும் உருவாக் கலாம். இதனால் முன்னைய நுகரும் அளவு குறையாமல் இருப்பதுடன் புதிய நுகர் வோரின் நுகர்வினால் சந்தை விரிவ டையும் வாய்ப்பு ஏற்படும்.

விலையிடல் என்பது ஓர் உற்பத்திப் பொருளின் விற்பனையில் உள்ளார்ந்த ஆதிக் கம் செலுத்தும் ஓர் சந்தைப்படுத்தும் மாறி யாகும். விலையிடல் சிறப்பாக அமைய வேண் டுமாயின் அது நுகர்வோரைப் பொறுத்த வரையில் கவர்ச்சியானதாக இருக்க வேண் டும். நுகர்வோரைக் கவர்ச்சிப்படுத்தும் விலை என்பது அது ஏனைய நிறுவனங்களின் விலைகளைவிடக் குறைவாக அமைதல் வேண் டும். ஆயினும் இவ் விலைக் குறைப்பானது நிறுவனத்திற்கு நட்டம் ஏற்படுத்துவதாக அமைதல் விரும்பப்படாதவொன்றாக இருக்கும். எனவே விலையிடல் நட்டம் ஏற்படாவண் ணமும், ஏனைய நிறுவனங்களைவிடக் குறை வாகவும் அமைதல் சந்தை விரிவாக்கத்தை ஏற்படுத்தும். அதாவது விலை குறைப்பு ஏற் படுத்துவதனால் கேள்வி விதிக்கிணங்க நுகர்வு அதிகரிக்க சந்தை விரிவாக்கம் பெறும். இவ் விலையிடலானது ஒரு நிறுவ னத்தைப் பொறுத்த வரையில் சந்தையில் நுழையும் போது, விரைவாக முதலைத் திருப்பும் வகையிலும் நுகர்வோரைத் திருப்திப்படுத்தும் வகையிலும் மேற்கொள் ளப்படலாம். விலையிடல் தொடர்பாக இன் னொரு விடயம் சில சந்தர்ப்பங்களில் ஒரே தரமான பொருட்களுக்கு வெவ்வேறு நுகர் வோரைப் பொறுத்து விலை வேறுபட்ட மைதலும் வேண்டும். சில செல்வந்தர்க ளைப் பொறுத்த வரையில் சில பொருட் கள் உயர்ந்த விலையில் இருப்பதையே அந் தஸ்து அடிப்படையில் விரும்புவர் மேலும் புதிய நுகர்வோர் நுகர்வில் ஈடுபடும்போது கவர்ச்சியான வகையில் குறைந்த விலையிடல் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு நுகர்வோர் பலரினதும் விருப்பு திருப்திப் படுத்தப்படுவதனால் சந்தை விரிவாக்கம் அடையும்.

காட்சிக்கு அடுக்கி வைத்தல், விற்பனை நிறுவனத்தில் பொருட்களை நுகர்வோரைக் கவரும் விதத்தில் அடுக்கி வைத்தலையே குறிக்கும். இச் சந்தைப்படுத்தும் கருமமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது பெரும்பாலும் புதிய நுகர்வோருக்குக் கவர்ச்சி ஏற்படுத்தி விற்பனையை அதிகரிக்கச் செய்தலுடன், வழமையான நுகர்வோர் குறிப்பிட்ட தொலைவிலிருந்தே குறிப்பிட்ட நிறுவனத்தில் தான் வாங்கப்போகும் பொருள் இருக்கா எனத் தெரிந்து கொள்வதற்கும் உதவியாக அமையும். இதைவிடக் குறிப்பிட்ட பொருளை வழமையாக வாங்குகின்ற ஆனால் அந் நிலையில் வாங்குவதற்கான தேவை இல்லாதிருந்தும் அடுக்கி வைக்கப்பட்ட பொருளைக் கண்டவுடன், கையுடன் வாங்கிச் செல்லலாம் என்ற உணர்வு ஏற்பட்டு வாங்குவதற்கான தூண்டுதலையும் இது அளிக்கிறது. இவ்வாறானவற்றினால் சந்தை விரிவடையும்.

விளம்பரம் செய்தல் என்பது நிறுவனம் நிரம்பல் செய்யும் பொருட்களின் விபரங்களை மக்களுக்கு வெளிப்படுத்துவதாகும். விளம்பரம் மேற்கொள்ளப்படுவதனால் தற்போது நுகர்வோராக இருப்போர் தொடர்ந்தும் நுகரவும் புதிய நுகர்வோருக்குப் பொருள் தொடர்பான தன்மை, தரம், உபயோகம், விலை போன்றவற்றை எடுத்து இயம்புவதனால் புதிய நுகர்வோரை நுகர்வில் ஈடுபடுத்திச் சந்தையினை விரிவாக்கலாம். மேலும் நிறுவனம் குறிப்பிட்ட பொருளில் சிறு மாற்றம் ஏற்படுத்தி அல்லது புதிய பொருளை அறிமுகப்படுத்தும் போதே அவற்றினை நுகர்வோருக்கு அறியத்தருவதன் மூலம் அப்பொருட்களின் நுகர்வினை அதிகரித்துக் கொள்ளலாம். விளம்பரம் அதிக கேள்வியை ஏற்படுத்தும் அதனால் நிறுவனம் பேரளவு உற்பத்தியில் ஈடுபட்டு உற்பத்திச் செலவினை ஒவ்வொரு அலகுக்கும் குறைக்க முடிவதனால் அவற்றின் விலையினைக் குறைத்து மேலும் அதற்கான நுகர்வினை அதிகரிக்கச் செய்வதனால் சந்தையை விரிவுபடுத்தலாம்.

களஞ்சியப்படுத்தல் என்பது நிறுவனம் உற்பத்தி செய்த பொருட்களைத் தேவைக்கேற்ற வகையில் களஞ்சியத்திலிருந்து எடுக்கும் வகையில் களஞ்சியத்தில் இடுவதனையே களஞ்சியப் படுத்தல் ஆகும். சில பொருட்களைப் பொறுத்தவரையில் நுகர்வோரால் வெவ்வேறுபட்ட காலங்களில் நுகரப்படுகிறது. அதுபோல சில பொருட்கள் நினைத்த மாத்திரத்தில் உற்பத்தி செய்ய முடியாத நிலையும் ஏற்படலாம். இந்நிலை விவசாயப் பொருட்களைப் பொறுத்தவரையில் காலநிலை பாதகமாக அமைவதனால் ஏற்படலாம். கைத்தொழிற் பொருட்களைப் பொறுத்த வரையில் சில வேளையில் மூலப் பொருட்தட்டுப்பாட்டால் ஏற்படலாம். எனவே இவ்வாறான இடையூறுகளைத் தவிர்க்கும் விதத்தில் வசதியான நேரத்தில் உற்பத்தி செய்து நிரம்பல் செய்யும் காலம் வரை களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டியிருக்கும். ஏனெனில் நுகர்வோனின் தேவையறிந்து அச்சந்தர்ப்பத்தில் நிரம்பல் செய்தால் மட்டுமே குறிப்பிட்ட பொருள் தொடர்பாக அதிகளவான நுண்வினை ஏற்படச் செய்து சந்தையினை விரிவாக்கிக் கொள்ளலாம். எனவே பொருட்களின் தரம், தன்மையினைப் பொறுத்து ஏற்ற முறையில் சிறப்பாகக் களஞ்சியப்படுத்தல் இன்றியமையாததாகும்.

விநியோகித்தல் என்பது பொருட்களை நுகர்வோரின் கைக்குக் கிட்டச் செய்தலாகும். இவ்விநியோகமானது சிறந்த முறையில் அமைய ஏற்ற போக்குவரத்து வசதி காணப்படவேண்டும். காரணம் நுகர்வோருக்குத் தேவைப்படும் சமயத்தில் பொருட்கள் அளிக்கப்பட்டால் மட்டுமே நுகர்வோரைத் திருப்திப்படுத்த முடியும். நுகர்வோர் திருப்தியடையும் சந்தர்ப்பத்தில் நுகர்வினையும் அதிகரித்துக் கொள்வர். இதனால் சந்தை விரிவாக்கம் அடையும்.

இறுதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய சந்தைப் படுத்தற் கருமம் விற்பனையின் பின் சேவையாகும். இது பொருட்களுக்கான விற்பனை ஒப்பந்தம் நிறைவேற்றப் பட்டவுடன் இலவசமாக அல்லது அற்ப கட்டணத்துடன் நுகர்வோருக்கு சேவை அடிப்படையில் போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுத்தலையும், விற்கப்பட்ட பொருட்களுக்கு குறிப்பிட்ட காலக் கெடுவில் உத்தரவாதமளித்து அக் காலத்திற்குள் பொருட்களில் பிழைகள் ஏற்படின் அதை இலவசமாகத் திருத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தலையும் குறிக்கும். இவ்வாறான கருமத்தை ஏனைய நிறுவனங்கள் செய்கின்ற போதும் குறிப்பிட்ட நிறுவனம் விற்பனை யின் பின் சேவையாக இலவசமாக போக் குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுப்பதுடன் உத்தரவாதக் காலத்தை அதிகரித்து நுகர் வோர் மத்தியில் தூண்டுதலை ஏற்படுத்தி அதன் மூலம் நுகர்வினை அதிகரிக்கச் செய் யலாம். இச்சேவை முன்னையவர்களின் நுகர் வினை அதிகரிப்பதுடன் புதியவர்களை நுகர் வில் ஈடுபடுத்தவும் செய்யும். இதனால் குறிப் பிட்ட பொருள் தொடர்பான நிறுவனத் தின் சந்தை விரிவடையும்.

மேற்கூறிய சந்தைப்படுத்தல் கருமங் கள் சிறப்பாக அமையுமிடத்து குறிப்பிட்ட நிறுவனத்தினால் நிரம்பல் செய்யப்படும் பொருட்கள் சேவைகள் தொடர்பான நுகர் வானது முன்னைய நுகர்வோர் அதிக அள வில் நுகர்வர் அத்துடன் புதிய பல நுகர் வோர் நுகர்வில் ஈடுபடத் தூண்டும். எனவே முன்னைய நுகர்வு அளவினைவிட அதிக அளவில் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும். இதனால் குறிப்பிட்ட நிறுவனத்தின் நிரம் பல் செய்யும் பொருட்கள் சேவைகள் தொடர்பான சந்தை விரிவாக்கம் அடை யும் என்பதில் சந்தேகம் இல்லை.

Appropriate Technology Services
124, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........

With Best Wishes From

BRUCE - LEE
WELDING WORK SHOP

MANUFACTURERS OF

High Quality Iron Gates, Grills, Stands,
Tubular Chairs, Tools, T. V. Stands and
Office Furniture

HOSPITAL ROAD, TELLIPPALAI.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

**ISLAND INSTITUTES**

O/L A/L கலை, வர்த்தக வகுப்புகள் நடைபெறுகின்றன.

58, STANLEY ROAD,

**JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

# HOME KEEPING ENGINEERS

RAJA BUILDING

KURUMPASIDDY,

TELLIPPALAI

T. P. 219. (Chunnakam)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

from

**BALAVINAYAGAR TRADERS**

General merchants
&
Commission Agents
Dealers in oilman Goods & Groceries
KANDY ROAD,
**KILINOCHCHI.**

With the Best Compliments

from

## Aneeza Stores

Registered Dealer for Sri Lanka State Trading (Tractor) Corporation and Brown & Co Ltd. Dealer for all kinds of Tractor Spare Parts
Main Street,
SAINTHAMARUTHU - 5.
**KALMUNAI.**
Telephone: **067 - 2517**

*With Best Compliments*

*from*

**T. KUMARASAMY TEXTILES**

**42, 44, GRAND BAZAAR,**
**JAFFNA.**
T.Phone: **23034**

With Best Compliments

from

**FARMERS ILLAM**
Dealers in Fertilizers
&
Hardwares
**TELLIPPALAI.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments from

# STAL - ASTRA

## Stal - Astra Refrigeration
## South East Asia Pte Ltd.

REFRIGERATION PLANTS FOR:
Dairies, Ice - cream Factories, Breweries, Soft drinks, Slaughterhouses, Chilled & Frozen Storage, Icemaking, Ice rinks, Refrigerated Cargo Vessels, Chemical Plants Margarine and fat Hardening, Fishing Trawlers, Seafood Processing Plants, LNG & LPG Vessels + Storage

C/O I. P. C LTD
267, VAUXHALL STREET COLOMBO - 2
SRILANKA Telephone: 25399

குளிரூட்டப்பட்ட
கொழும்பு கோல்ட் ஹவுஸ்
067 - 2479
கட்டித் தங்கம்
கைதேர்ந்த வேலை
கண்கவர் அழகிய
தங்க நகைகள்
வாங்குவதற்கு சிறந்த இடம்
கொழும்பு கோல்ட் ஹவுஸ்
உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமான
நகை வியாபாரிகள்
79, பிரதான வீதி, கல்முனை.

எமது வாழ்த்துக்கள்

நம்பிக்கை, நாணயம் மிக்க
தங்க, வைர
நகைகளுக்கு
லட்சுமி
ஆபரண மாளிகை
224, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் புதிய ஆட்கொல்லி நோய் AIDS

ரவிச்சந்திரன்
3வது வருடம், மருத்துவபீடம்

மேற்கு நாடுகளின் மருத்துவ உலகம் அண்மையில் தோன்றிய ஒரு புதிய நோயின் தாக்கத்தினால் சற்று ஆட்டம் கண்டிருக்கிறது. மிக அண்மைக்காலம் வரை சுகதேகிகளாக வாழ்ந்து வந்த பல தன்னினச் சேர்க்கை பழக்கத்துக்குட்பட்ட ஆண்கள் திடீரென மிகக் கொடுமையான ஒரு நோய்க்கு ஆளாகி வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந் நோய்க்குச் சரியான மருத்துவ நிவாரணம் இன்னமும் கண்டுபிடிக்கப்படாத காரணத்தால் ஓர் முறை இந்த நோயினால் தாக்கப்பட்டவர் இறப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை நிலவுகிறது. நோயை உண்டாக்கும் காரணி இன்னமும் நிச்சயமாக நிரூபிக்கப் படவில்லை. மருத்துவத் துறையில் அளப்பரிய முன்னேற்றம் கண்டிருக்கும் மேலை நாடுகளுக்கு இந்நோய் ஒரு சவாலாக அமைந்திருக்கிறது.

Aquired immuno deficiency Syndrome சுருக்கமாக Aids(எய்ட்ஸ்) என அழைக்கப்படும் இந்த நோய் உடலின் நோயெதிர்ப்பு சக்தி மிகவும் குறைவதனால் ஏற்படுகின்றது. நிணநீர்க் குழியங்கள் (Lymphocytes) எனப்படும் குருதியில் காணப்படும் உயிர்க் கலங்கள் உடலின் நோயெதிர்ப்புச் சக்தியில் முக்கிய பங்கைவகிக்கின்றன. இக்கலங்கள் B லிம்போசைற்றுக்கள், T லிம்போசைற்றுகள் எனஇருவகைப்படும். T லிம்போசைற்றுக்கள் பெரும்பாலான பங்கசு, வைரசு நோய்களுக்கு எதிராகவும் வேறுசில நுண்ணுயிர்களுக்கு எதிராகவும் உடல் எதிர்ப்பைக் காட்டுவதில் முக்கியமானவை. இந்நோய்களில் Bலிம்போசைற்றுக்களின் எண்ணிக்கையும், ஆற்றலும் வழமைபோலவே இருக்கிறது. ஆனால் T லிம்போசைற்றுக்களின் எண்ணிக்கையும், ஆற்றலும் வழமையிலும் மிகக் குறைவாகக் காணப்படுகிறது. இதன் காரணமாக சில நோய்களுக்கு எதிர்ப்பைக் காட்டும் ஆற்றலை உடல் இழந்து விடுகின்றது.

இந் நோயினால் பாதிக்கப்பட்ட ஆரம்ப நோயாளிகள் வைத்தியரை நாடிய வேளையில் பலருடைய வாயிலும், தொண்டையிலும், வேறுபகுதிகளிலும் Candida Albicans எனும் பங்கசு முற்றாகப் படர்ந்திருந்தது. பலர் நீண்டகாலக் காய்ச்சலினால் (Pyrexia of unknown origin) கடுமையான வைரசு நோய்களினால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். கடுமையான உடல் நிறைக்குறைவு எல்லோரையும் பாதித்து Pneumocystis Carinii எனும் நுண்ணுயிரினால் ஏற்படும் மிகக் கொடிய நியூமோனியா நோய்க்குப் பெரும்பாலானவர்கள் ஆளாகியிருந்தார்கள். இந்த நுண்ணுயிர் ஒரு சாதாரண சுகதேகியில் நோயை ஏற்படுத்தக் கூடிய அளவு வலிமை வாய்ந்தது அல்ல. உடலின் நோயெதிர்ப்புச் சக்திகுறைவாக உள்ளவர்களில்மட்டுமே (Ex Subjects receiving immunosuppresive therapy for Malignant neoplastic disease or after organ transplantation) இந்த நுண்ணுயிர் நோயைஉண்டாக்குகிறது. நோயாளிகளில் ஒரு பாலார் Kaposils Sarcoma எனப்படும் ஒரு வகைத் தோல்புற்று நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். இந் நோயின் போது தோலில் ஊதா நிறமான கட்டிகள் தோன்றும்.

அனேகமாக இந்த நோயினால் பாதிக்கப்பட்ட ஆரம்ப நோயாளிகள் அனைவரும் தன்னினச் சேர்க்கை ஆண்கள் என்பது ஒரு தற்செயலான விடயமாக இருக்க முடியாது. இந் நோயாளிகள் அனைவரும் தம் உடற் சுரப்புக்களில் Cytomegalo virus எனும் வைரசைக் கொண்டிருந்தார்கள். இந்த வைரசு சிறுநீருடனும் சுக்கிலத் திரவத்தினூடும் (Semen) ஒருவரிலிருந்து இன்னொருவனுக்குக் கடத்தப்படலாம். ஆனால் ஒரு சுகதேகி இந்த வைரசினால் பீடிக்கப்படும் போது அவர் இவ்வளவு கடுமையான ஒரு நோயினால் பாதிக்கப்படுவதில்லை. எனினும் இவ்வைரசு உடலின்நோய் எதிர்ப்புச்சக்தியை

குறைப்பதாக நம்பகமாக அறியப்பட்டிருக்கிறது. அண்மையில் இங்கிலாந்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணிப்பின்படி 94% சுகதேகிகளான தன்னினச் சேர்க்கை ஆண்கள் இவ்வைரசினால் பாதிக்கப்பட்ட ஆதாரங்களைக் கொண்டிருந்தார்கள். 14 சதவீத மானவர்களின் சிறுநீரிலும் இவ்வைரசு காணப்பட்டது. ஆனால் இவர்களில் எவரும் இந்நோயினால் பாதிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே மூன்று விதமான சந்தேகங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. முதலாவது தன்னினச் சேர்க்கை ஆண்கள் தொடர்ந்து தன்னினச் சேர்க்கையில் ஈடுபடும் போது மீண்டும் மீண்டும் இவ் வைரசினால் தாக்கப்படுவதால் (due to repeated infections) இந் நோய் ஏற்படுகிறது என்பது. இரண்டாவது ஒரு புதிய இன Cytomegalovirus இனால் இந்நோய் ஏற்படுகின்றது என்பது. மூன்றாவது சந்தேகம் இன்னும் அடையாளம் காணப்படாத ஒரு நுண்ணுயிரால் அல்லது நஞ்சினால் ஏற்படுத்தப்படும் T லிம்போசைற் குறைபாடுகளைத் தொடர்ந்து இந்தவைரசு நோய் ஏற்படுகின்றது என்பதாகும். இன்னமும் மருத்துவ உலகம் இப்பிரச்சனைக்கு ஒரு தீர்வை ஆராய்ந்து வருகின்றது.

வளர்ச்சியின் பின் ஏற்படும் T லிம்போசைற் குறைபாடுகள் (Aquired T cell defects) வேறு பல நோய்களிலும் ஏற்படுவதாக அறியப்பட்டிருக்கிறது. (Ex - Hodgkin disease, Sarcoidosis) ஆனால் அவ்வாறான T கலக் குறைபாடுகள் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குத் தொற்றலாம் என்பதை உலகம் அறிவது இதுவே முதல் முறையாகும். இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் 70% ஆனவர்கள் தன்னினச் சேர்க்கை ஆண்கள் - விசேடமாக பலருடன் த. சேர்க்கை வைத்திருப்போர் (Homosexuals With Multiple Partners) ஊசிகளின் மூலம் போதை மருந்து உட்கொள்ளுபவர்கள் (Intravenous drug abusers) ஈமோபிலியா நோயாளிகள் ஆகியோரும் பாதிக்கப்படுகிறார்கள். ஒருவரிடமிருந்து ஒருவருக்கு தொடுகையாலும் (Intimate Physical Contact) குருதி வழங்கலாலும் இந்நோய் பரவுகிறது. இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் பிள்ளைகளும் சில சமயங்களில் இந்நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். இந்த நோய் அடைந்த முக்கியத்துவத்துக்குக் காரணம் இதற்குச் சரியான மருத்துவம் இன்னமும் கண்டுபிடிக்கப்படாததாகும். ஒரு முறை இந்த நோயினால் பாதிக்கப்பட்டால் ஒரு போதும் உடல் சுயமாக மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புவதில்லை. மரணம் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடுகிறது. அத்லாந்தாவிலுள்ள நோய்த் தடுப்புக்கான மத்திய நிலையத்தின் தகவல்களின் படி 1981ம் ஆண்டின் மத்திய பருவத்திலிருந்து ஏறத்தாழ 1,360 நோயாளிகள் அமெரிக்காவிலும் 90 நோயாளிகள் உலகின் வேறு பதினைந்து நாடுகளிலிருந்தும் அறியப்பட்டிருக்கின்றனர். 520 நோயாளிகள் ஏற்கனவே இறந்துவிட்டார்கள்.

துரதிஷ்டசாலிகளான இந் நோயாளிகளின் நிலைமை வைத்தியசாலைகளில் இன்னமும் பரிதாபகரமானது. நோயைப்பற்றிய தவறான வதந்திகள் பலமாகப் பரவியிருப்பதால், உறவினர்கள் யாரும் இவர்களை வந்து பார்க்க விரும்புவதில்லை. நோய் இவர்களைத் தனிப்படுத்தி விடுகிறது. யாரும் அருகில் வர விரும்புவதில்லை. ஆய்வுகூட உதவியாளர்களும், வைத்தியசாலை ஊழியர்களும் இவர்களுக்குச் சேவை செய்ய முன்வரத் தயங்குகிறார்கள். வைத்தியர்களும் தாதிகளும் கூட இவர்களை மிகுந்த கவனத்துடனேயே அணுகுகிறார்கள். நோய் முற்றிய நிலையில் இந்நோயாளிகள் அசைய முடியாதவர்களாயும் தமது காரியங்களைத் தாமே பார்த்துக் கொள்ள இயலாதவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் எப்படியும் இறக்கப் போவது உறுதியாகையால் தம்முடைய வாழ்க்கையை இவர்களுக்கு உதவி செய்வதினால் நாசமாக்குவது வீணெனப் பலர் எண்ணுகிறார்கள். நோயாளியின் படுக்கையில் AIDS என எழுதப் பெரிய அட்டைகள் தொங்கவிடப்படுகின்றன. சகநோயாளிகள் உட்பட யாரும் அருகில் செல்ல விரும்புவதில்லை. இது துரதிஷ்ட வசமானது. ஏனெனில் அந்த இறுதிக் காலத்திலேயே இந்நோயாளிகள் உண்மையில் ஆதரவை நாடுகிறார்கள்.

உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) இந்த நோய்க்கு எதிராக ஒரு சர்வதேசஇயக்கத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது. இவ்வருட இறுதியினுள் பல்வேறு துறைகளிலும் உள்ள நிபுணர்களை ஒன்று கூட்டித் தனிப்பட்ட நாடுகளின் இந்நோய்க்கான போராட்ட முயற்சிகளைக் கூட்டிணைக்க முடிவு செய்துள்ளது. சாத்தியமான தடுப்பு முறைகளும் மருத்துவமும் (Treatment) விவாதிக்கப்படும்.

இலங்கையில் இந்த நோய் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. ஆனல் உலகில் தன்னினச் சேர்க்கைக்குரிய ஆண்களை மிக இலகுவில் பெற்றுக் கொள்ளக்கூடிய இடமாக இலங்கை பிரபலம் பெற்றிருக்கிறது. பெருந்தொகையான உல்லாசப் பயணிகள் இதற்காகவே இலங்கைக்கு விஜயம் செய்வதும் அறியப்பட்டிருக்கிறது. இந்த நோய் காணப்பட்ட நாடுகளிலிருந்தும் உல்லாசப் பயணிகள் எவ்வித கட்டுப்பாடுமின்றி இலங்கைக்கு வந்து போகிறுர்கள். இவர்களில் ஒருவர் ஏற்கெனவே இந்நோயை இங்கு அறிமுகம் செய்திருக்கக் கூடும் அல்லது மிக விரைவில் செய்யக் கூடும். பாதிக்கப்படும் எங்கள் தேசத்தவர்களை இறக்க விடுவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லாமல் போகும். ஏற்கனவே பற்ருக் குறைகளை எதிர்நோக்கும் எங்கள் வைத்திய சேவை தவிர்க்க முடியாத இன்னல்களை எதிர் நோக்க வேண்டி ஏற்படும்.

**Facts Based on:**

1) **New England Journal of Medicine**
2) **News Paper Reports**


WITH BEST COMPLIMENTS FROM

# S. A. SELVANAYAGAM & SONS

Motor & Tractor Engineers, Dealers, Agents & Merchants

## BATTICALOA.

- CEYLON PETROLEUM CORPORATION
  — for all Petroleum products and Hoist Service
- CEYLON OXYGEN LTD.
  — for Industrial Oxygen, Acetylene and Welding requisits.
- SATHIYAWADI STORES & MOTOR TRANSPORTERS LTD.
  — for Ford Tractors and Equipments.
- MAURICE ROCHE & CO. LTD.
  — for Philips Colour T. Vs., Household Goods & Philips Radios.
- CORNEL & CO. LTD.
  — for Hitachi Radios, Colour T. Vs., Electrical Goods.
- BRITISH CAR CO: LTD.
  — for Kawasaki Motorcycles and Spares
- ROWLANDS LTD.
  — for Commer Chassis, Vans, Chevrolet Luvi pick ups.

**OUR MOTOR & TRACTOR WORK SHOP FOR ALL KINDS OF REPAIRS**

*All these under the new management of Mr. P. RAJAN SELVANAYAGAM.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With Best Compliments**

**From**

# FAZUL AGENCY

CUSTOM CLEARING & TRANSPORT AGENT
CUSTOM LONG ROOM
Telephone : **21910**

Proprietor :

**M. S. M. NAVAS HADJIAR**

Office :

11, HUDSON ROAD
**COLOMBO - 3**
SRI LANKA.
Telephone : **23626**

Residence :

37 / 15, HADJI FATHIMA GARDENS
**MAKOLA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

from

# ATCHUVELY TRADERS

General merchants & Commission Agents

22, ST. JOHN'S ROAD,

**COLOMBO - 11.**

With the Best Compliments from

# Maritime Pattu M. P. C. S. Ltd.

**MULLAITIVU**

Whole Sale & Retail Trade in Consumer Goods,
Hardware, Agriculture Products & Agro Chemicals.

Dealers: **CEYLON PETROLEUM CORPORATION**

Telephone: **20**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## G.C.E. O/L வகுப்புக்களுக்கும், A/L கலை, வர்த்தக வகுப்புக்களுக்கும்

# நொதேண் கல்வி நிலையம்

(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | இராமநாதன் |
| கணக்கியல் | - | மரியதாஸ் |
| வர்த்தகம் | - | செல்வநாயகம் |
| அளவையியல் | - | யுகபாலசிங்கம் (யுகன்) |
| இந்துநாகரிகம் | - | அருள்நங்கை |
| தமிழ் | - | சரவணன் |
| புவியியல் | - | யோசேப் |
| அரசியல் வரலாறு | - | மஃறுப் |

# கவிதாலயா கலர்போட்டோ

உங்கள் கலர்ப்படங்களை யாழ். நகரில் டெவலெப்பிங்

பிறின்ரிங் செய்து கொள்ளவும்

பாஸ்போட், அடையாள அட்டைப் படங்களை

உடனுக்குடன் பெற்றுக் கொள்ளவும்

நாடவேண்டிய இடம்

# கவிதாலயா கலர்போட்டோ

37, மேல்மாடி, மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

(வெலிங்டன் சந்திக்கண்மை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

from

**NEW SUIT HOUSE**

**71, MODERN MARKET**

**JAFFNA**

With the Best Compliments

from

**THURKA MOTORS**

245, STANLEY ROAD,

**JAFFNA,**

SRI LANKA.

With the Best Compliments

from

**NATHAN TRADERS**

GENERAL MERCHANTS

No. 18 St. John's Road,

COLOMBO - 11

DIAL: **21005**

*With the Best Compliments*

*from*

**MURUGAN STORES**

Prop: **E. M. SUBRAMANIAM**

No. 14, Bazaar Street,

BATTICALOA.

Telephone: **2636**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

from

**BRUCE - LEE TEA ROOM**

Hospital Road,
TELLIPPALAI.

*With the Best Compliments*

*from*

**STAR INSTITUTES**

**K. K. S. ROAD**
**MALLAKAM.**

வாழ்த்துக்கள்

அக்காய் றெக்கோடிங் (B)பார்

சகலவிதமான பாடல்களையும் சிறந்த முறையில் ஒலிப்பதிவு செய்து கொள்வதற்கும். சிறந்த VDO படப்பிரதிகளை வாடகை முறையில் பெற்றுக் கொள்வதற்கும், மற்றும் அன்பளிப்புப் பொருட்களுக்கும் தெல்லிப்பளையில் குளிரூட்டப்பட்ட ஒரே ஒரு ஸ்தாபனம்

**அக்காய் றெக்கோடிங் (B)பார்**

கே. கே. எஸ். வீதி,
தெல்லிப்பழை.

With the Best Compliments

from

**THAMBITHURAI STORES**

*Kollankaladdy Road*
*TELLIPPALAI.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதிப்பாகுபாடு சமூகத்தின் சீர்கேடு

**பாலரமணி**
விஞ்ஞானபீடம், இறுதியாண்டு

" ஒன்றே குலம் ஒருவனே தேவன் " என்பது பழம்பெரும் தமிழன் கண்ட ஒருமைப்பாடு. இந்த ஒருமைப்பாடு ஒரு தேசத்தில் நிலவுமேயானால் அங்கு சாதிப் பிரச்சனையோ அன்றேல் வேறு பிரச்சனைகளோ தோன்றவே தோன்றாது. அங்கு பிறப்பொடுக்கும் எல்லா உயிர்க்கும் " ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு " என்ற பெருநோக்கே விளங்கும். அங்கு வேற்றுமைக்குப் பதில் ஒற்றுமையே நிலவும். எந்த ஒற்றுமையினால் இந்த உலகம் உருவாகியதோ, எந்தவொரு ஒற்றுமையினால் மனித சமூகமே நிலைபெற்றதோ அந்த ஒற்றுமையே அதைகாத்துநிற்க வேண்டும். மனிதன் தனித்து வாழமுடியாது. அவன் கூடி வாழவேண்டும் என்பது நியதி. " அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு அல்லவா " ஆனால் இன்றைய சமூகத்தை நாம் சீர்தூக்கிப் பார்ப்போமேயாகில் அங்கு இனம், சாதி எனும் சிறு சிறு முட்செடிகள் இருப்பதைக் காணலாம், இவை தொன்று தொட்டே இருந்து வந்தனவா ? என்றால் இல்லவே இல்லை. மனித வாழ்க்கையில் இறைவனால் படைக்கப்பட்ட உயிர்கட்கு மனிதனால் படைக்கப்பட்ட கட்டுப்பாடுகளே அவை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போலாகின்றது. ஒன்றுபட்டு வாழவேண்டும் என்ற நியதியை மீறி என்று மனிதன் பிரிந்து வாழ முற்பட்டானோ அன்று வந்தது அவனுக்குச் சாபக்கேடு. இதனால் சாதியென்று வேறுபட்டுப் போட்டிகட்டும் பெருமைகளுக்கும் இருப்பிடமாகிப் படாத பாடெல்லாம் பட்டும் கெடாத கேடெல்லாம் கெட்டும் இன்றும் மனிதன் தன் பிழையை உணர்ந்தானா ? என்றால் அதுதான் இல்லாததொன்றாகி விட்டதே !

"எண்ணிய பிறவிதனில் மானிடப்பிறவி தானாகினும் அரிதரிது காண்" என்று பெருமையுற்றது நம் மனித இனம். உடலாலும் உள்ளத்தாலும் உள்ளது சிறக்க வாய்ந்த மனித இனம் உலக நியதிக்கேற்ப வளர்ச்சியடைந்து வந்துள்ளது என்றால் அதற்கு மனிதன் பெற்ற பகுத்தறிவே காரணம். ஒவ்வோர் மனித மனமும் தான் தான் நினைத்தவற்றையெல்லாம் செயற்படுத்தும் நோக்குடன் பலமுயற்சிகளிலும் ஈடுபட்டு வெற்றி பெறவேண்டும் என்று சதா போராடிக் கொண்டிருக்கின்றன. உலகெங்கிலுமுள்ள மனித இனம் உலகவாழ்க்கை என்ற சமுத்திரத்தில் தன் நோக்கங்களைச் செயற்படுத்த எதிர் நீச்சல் போடுகின்றனர். இவ்வளர்ச்சியே மனிதர்களினிடையே பல தனி மனித வேற்றுமைகளைப் புகுத்தியுள்ளன. இத்தன்மை வளர்ச்சி என்பன பொது அம்சங்களை கொண்டது என்ற உண்மைகளை அடக்கியே ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்ற வள்ளுவர் வாக்கு எழுந்தது ''எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் இங்கு யாவர்க்கும் நன்றெனல் காணீர்'' என்ற பாரதி பாடல் மனித இனத்தின் சாதிபேதவாதத்திற்கு ஓர் சாட்டையடி உலகம் முழுமையும் சாதிபேதம் என்ற ஆழ்கடலில் சூழ்புயலில் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருக்கின்ற சாதிப்பிரிவை ஆதரித்து வாழும் மனித இனம் தாம் எல்லோரும் ஒரே உலகமாதாவின் உதரத்தில் உதித்தவர்கள் என்பதை எங்கே உணரப்போகின்றனர்.

மனிதனின் நாகரீக வளர்ச்சி மாட்சிமை மிக்க மானிட சரித்திரத்தின் புனித அடையாளங்கள். இவற்றை நிலைநிறுத்துவதற்கு அவன் விஞ்ஞான வளர்ச்சியின் உச்சக்கட்டத்தையடைந்து இருக்கின்றான். இந்த வளர்ச்சிப்படிக்கேற்பவே தொழிலிலும் திறமையிலும், வருமானத்திலும் ஏற்பட்ட வேற்றுமைக்கேற்ப மனிதன் சாதிபேதத்தை உலகில் நடமாட வைத்தான். இந்தியாவில் ஆரியரின் வருகையின் பின் தோன்றியவை வர்ணப்பிரிவுகள் இதனை தவறாக விளங்கிக் கொண்ட மனித இனம் சாதிப்பிரிவாக மாற்றி அமைத்து விட்டது. இத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மைகளால் பிறரைச் சுரண்டி வாழும் புல்லுநரிகள், சுயநலமிகள் நன்மை பெற்றனரேயன்றி உண்மையில் வியர்வை சிந்தி உழைக்கும் உழைப்பாளி சிறிதளவும் நன்மை பெறவில்லை. வருமான வர்க்க பேதம் நாளடைவில் சாதிபேதமாக வேரூன்றியது. இச்சாதிபேதத்தை ஒழிக்காவிட்டால் அப்பேதம் நம் சமூகத்தை பூரணமாக விழுங்கிவிடும் என்பதில் எதுவித ஐயமுமில்லை சாதிபேதம் பண்பட்ட பழம்பெரும் மக்களின் நீங்காத சாபக்கேடு.

ஒரு நாட்டில் முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாக நின்று உல்லாச நடைபோடும் சாதிபேதம் ஒழிக்கப்பட வேண்டும். சாதிபேத அமைப்புகள் மனிதனால் உருவாக்கப்பட்டதேயன்றி அவை தெய்வீக அமைப்பின் மர்மமாக அமைந்து விடவேயில்லை. நாயார், நாயக்கர், செட்டியர் என்ற பெயர்கள் அவ்வப்போது ஒவ்வொரு துறைகளிலும் பங்காளிகளாக விளங்கியவர்கள். தமக்கு வைத்துக் கொண்ட பட்டப்பெயர்கள் இவை சாதிபேத அடிப்படையில் எழுந்தவை அல்ல என்றும் காலப்போக்கில் அவ்வப்போது தோன்றிய உபன்யாசிகள் தங்கள் மனப்போக்கின்படி உருவாக்கிய பேதங்களேயன்றி இந்துமதம் உருவாக்கிய பேதங்களல்ல என்றும் கவிஞர் கண்ணதாசன் கருத்துத் தெரிவித்துள்ளார். சாதிஒழிப்பே இன்று பாரதம் முன்னேற்றமடைந்து வரும் நாடுகளில் ஒன்றாக விளங்குவதிற்கான எழில் சான்று. இந்தியா இன்று முன்னேற்றப் பாதையை நோக்கி துரித நடை போடுவதிற்கு இத் தன்மையே முக்கிய காரணம். இந்தியாவில் சாதி ஒழிப்பை முன்வைத்து காந்தி, நேரு போன்ற பெரியோர்கள் அயராது போராடினார்கள் என்பது யாவரும் அறிந்ததே. பர்மாவிலும் சாதி ஒழிப்பிற்கான பிரசாரங்கள் நடத்தப்பட்டு வந்தன. சாதிபேதம் முற்றாக நீங்கிவிடவில்லை. எனினும் முன்னேற்றமான ஓர் வளர்ச்சியை காண முடிந்தது.

இலங்கையில் எமது நாடும் சாதிஒழிப்பிற்கான பிரச்சாரங்களை மேற்கொண்டு அதை நடைமுறைப் படுத்தி வெற்றிகாண வேண்டும். ''சாதிகளில்லையடி பாப்பா'' என்று புரட்சிக்கவி பாரதியும் 'சாதியிரண்டொழிய வேறில்லை' என்று பழம் பெரும் மூதாட்டி ஔவையும் கூறிச் சென்றுள்ளனர். நாம் நாட்டில் சாதிப்பிரச்சனை அழிய வேண்டுமானால் ''ஒன்றே குலம், எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்ற விழிப்புணர்ச்சி தோன்ற வேண்டுமேயானால்!! ஒவ்வொரு தமிழனும், தான் வாழும் சமூகத்திடம் வேற்றுமையுணர்ச்சி பாராட்டாது நடக்க வேண்டும் அப்போது தான் ஒரு தேசம் ஒன்றுபட்ட சமூகத்தால் பொருளாதார விருத்தி பெற்று முன்னேற்றமடையும். இத்தகைய சமத்துவத்தை ஒரு நாடும் எட்டிவிடுமேயாகில் அந்நாடு விண்ணவர்கள் வாழும் விண்ணுலகத்தையும் மிஞ்சிவிட்டதா? என்ன.



இளமையிற் கல்
යෞවනයේ අධ්‍යාපනය ලබන්න
LEARN WHEN YOU ARE YOUNG

MILKWHITE JAFFNA

# பாரதி ஓர் விடுதலைப் போராளி

சிவஜோதி தம்பிராஜா
பொருளியல் சிறப்பு, 4-ம் வருடம்

பாரதியார் இருள் மண்டிக் கிடந்த பாரத உலகிலே, அதிகார வெறிபிடித்த அந்நியர் இட்ட ஆட்சியின் கீழே, அவதிப்பட்ட இந்தியாவிலே சாதிப் பிணக்கினால் சங்கடப்பட்டு மக்கள் அல்லலுற்ற கால கட்டத்திலே, இந்தியாவின் இள ஞாயிறாக அவனியில் அவதாரம் செய்தார். இன்று புதுமைக்கவி, புரட்சிக்கவி, வரகவி என்று அனைவராலும் போற்றிப் புகழ்ந்துரைக்கப்படுகின்ற இக்கவிஞன் உண்மையிலே ஓர் விடுதலைப் போராளியேதான் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும். ஆங்கிலேயரால் அடிமைப்பட்டு அல்லலுறும் பாரதமாதாவின் அவல நிலையை, அறிவாற்றல் அற்ற நிலையை, மிகவும் இழிவான நிலையை பல கோணங்களிலே இருந்து, பல நிறக் கண்ணாடி கொண்டு உற்று நோக்கினார். "இம் என்றால் சிறைவாசம் ஏன் என்றால் வனவாசம்" என்று இருந்த அடிமைக் காலத்தில் "உச்சிமீது வானிடிந்து வீழ்கின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்று சங்கநாத ஓசை எழுப்பிய இந்த வீரக்கவிஞன் சிந்தித்தான். தெளிவு கண்டான்.

நமது நாட்டிலே வாணிகம் நடாத்திட வந்த இந்த 'வெள்ளைக் காக்கைகள்' இந்த நாட்டிலே அழகுறு அன்னப்பட்சி ஆட்சி செய்த தாமரை மலரைத் தனதாக்கிக் கொண்ட காரணம், இந்தக் குளத்திலே காணப்பட்ட அழுக்கும், சேறும், துர்நாற்றமும் என்ற தத்துவ உண்மையைக் கண்டார். எந்த ஒரு நாட்டினுடைய உயர்வுக்கும், தாழ்வுக்கும் மூலகாரணம் அந்த நாட்டிலே காணப்படுகின்ற சமுதாயத்தில் ஏற்பட்டு இருக்கின்ற, ஒற்றுமையின்மை, பலதரப்பட்ட சாதிப்பிரிவு, தீண்டாமை, அறிவியலில், பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகள், ஆட்சி, மொழி, மோகம், தாய்மொழிப் பற்றின்மை, இவற்றை எல்லாம் விட, மிக மோசமான பாதகச் செயல், அன்று காணப்பட்ட தாய்க் குலத்தின் அடிமை வாழ்வு என்றும் இன்னும் இவை போன்ற பல ஒட்டுண்ணிகள் தான் என்ற உண்மையினை உணர்ந்தார் உணர்ச்சிக் கவிஞன் பாரதி. இத்தகைய மூடச் செயல்கள் அனைத்திற்கும் சாவுமணி அடித்தார். வீர சுதந்திரத்திற்கு வித்திட வேண்டுமென்ற உறுதிப்பாட்டோடு தனது போராட்டத்தை ஆரம்பித்தார். தமது ஆற்றலினால், தெய்வீக கவித்துவப் படை கொண்டு போராடினார் என்று கூறினால் இக் கூற்று மிகையாகாது.

சாதி பேதங்களைச் சாடிய பாரதி
சாதி மதங்களைப் பாரோம் — உயர்
ஜன்மம் இத் தேசத்தில் எய்தினராயின்
வேதியராயினு மொன்றே — அன்றி
வேறு குலத்தினராயினு மொன்றே.

என்று வேதமோதும் வேதியரையும், இழிதொழில் புரியும் இழிகுலத்தோரையும் சமமென்று முழங்குகின்றார். அன்றியும் "ஆயிரம் இங்குண்டு சாதியெனில்"

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே — நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே

என்று ஒற்றுமையின் உயர்வைப் படம் பிடித்துக் காட்டுகின்றார். மேலும் நாம் நோக்கின் பாரத சமுதாயத்திலே காணப்பட்ட சமுதாய ஏற்றத் தாழ்வு, ஒருவர் உணவை ஒருவர் பறிப்பதும், பிறரை நோவச் செய்வதும், மக்கள் ஏழைகளாகவும், பணக்காரர்களாகவும் வாழ்வதும், சமுதாயக் கட்டுக்கோப்பைக் குலைப்பதும் ஆகிய ஒவ்வாத செயல்களைச் சாடிய புதுமைக்கவி "நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்து' விட்டால்" என்று தொடங்கி மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கமினி யுண்டோ மனிதர் நோவ மனிதர் பார்க்கும் வாழ்க்கை இனி உண்டோ என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாடி, ''தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்று தனிமனித சுதந்திரத்தை தெட்டத் தெளிவாக வெளிக்காட்டுகின்றார்.

மேலும் பாரதமக்கள் ஏழைகளாகி விட்டார்கள். இதற்குக் காரணம் நம்நாட்டு மக்களிடத்தில் ஊக்கமின்மை, உறுதியின்மை, எதைக்கண்டாலும் அஞ்சுதல், கவலைப்படுதல், பாதகத் தொழில் புரிதல், எமது தேவைகளுக்காக அந்நிய நாட்டை கையேந்துதல் போன்ற இன்னோரன்ன காரணங்களை புலப்படுத்துகின்றார். இத்தகைய மக்கள் உலகத்தில் வாழவே முடியாதென்றும் "பாதகம் செய்வோரைக் கண்டால் நீ பயம் கொள்ளலாகாது பாப்பா'' என்று பிஞ்சு உள்ளங்களிலே வீர உணர்ச்சியை விதைக்கின்றார். இது மட்டுமா? பொருளாதார விடுதலைக்கு வித்திட்ட பாரதி ஊசி தொடக்கம் உலகிலுள்ள எப்பொருளையும் நாமே உற்பத்தி செய்ய வேண்டும் என்றும் வழிவகுக்கின்றார்.

இவை எல்லாவற்றையும் விடமிக இழிவான, கீழ்த்தரமான பாவச் செயலைக் கண்ணுற்ற கவிஞன் துடிதுடித்தான். அகத்தின் அரசிகளாக மிளிர வேண்டிய எமது தாய்க்குலம் வீட்டின் சிறைக் கைதிகளாக, அடிமைகளாக, அறியாமையைத் தாங்கியவர்களாக, அச்சத்தின் உறைவிடமாக கூனிக் குறுகி, வீட்டினுள்ளே முடங்கிக் கிடப்பவர்களாக, பிள்ளைகளைப் பெறும் இயந்திரங்களாக காணப்பட்ட நிலையைப் பார்த்து பதைபதைத்தான். புதுமைப் பெண்ணைப் படைக்க வேண்டும் என்று ஆவேஷங்கொண்டான். அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு என்ற நிலையையும், ஏட்டையும் பெண்கள் தொடுவது குற்றமென்ற விந்தையிலும் விந்தையான தீச்செயலை தன்னுடைய ''பா'' மழையிலே நனைத்து, அதனைப் பரவவிடாது தடுத்து, பாரதநாடு கண்டு களிக்கும் வகையில் புதுமைப் பெண்ணைப் படைத்து விட்டான் புரட்சிக் கவிஞன் பாரதி.

ஞான நல்லறம், வீர சுதந்திரம் பேணும் நற்குடிப் பெண்கள் நிமிர்ந்த நன்னடையும், நேர் கொண்ட பார்வையும் நிலத்தில் யாவற்றுக்கும் அஞ்சாத நிமிர்ந்த ஞானச் செருக்குமிருப்பதால் - செம்மை மாதர் திறம்புவதில்லையாம் என்று அவர் படைத்த புதுமைப் பெண்ணை யாவரும் புரியும்படி புலப்படுத்துகின்றார்: பாரதி படைத்துவிட்ட புதுமைப் பெண்ணாலேதான் "பெண்கள் விடுதலை'' என்னும் பயிர் வித்திட்டு முளைத்தது; பெண்ணினத்தின் பெருந்தன்மை தழைக்க வழிவகுத்தது. இதனாலே தான் இன்று பெண்களும் ஆண்களோடு சரிநிகர் சமமாக அரசோட்டுகின்ற நிலையும், கடமை புரிகின்ற நிலைமையும், பெண்கள் ஆண்களுக்கு எந்த விதத்திலும் குறைந்தவர்கள் அல்ல என்ற நிலைமையும் நாம் கண்ணாரக் காணமுடிந்தது என்பதை மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. இவ்வாறு பெண்களின் விடுதலைக்கு வித்திட்டு வெற்றி கண்ட செயல் வீரன் பாரதி. தேசிய விடுதலைப் போராட்டத்துக்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து சிறைச்சாலையையும் கண்டவர். 'என்று தணியுமிந்த சுதந்திர தாகம் - என்று மடியுமெங்கள் அடிமையின் மோகம்' என்பதிலிருந்து தான் கொண்டுள்ள சுதந்திர தாகத்தை கவிதையின் மூலம் தணிய வைக்கின்றார். மேலும் வீர சுதந்திரம் வேண்டி நின்றார். பின்னர் வேறொன்று பெறுவாரோ கண்ணிலும் இனிய சுதந்திரம் போனபின் கைகட்டிப் பிழைப்பாரோ என்று சுதந்திர தாகத்தையே ஏற்படுத்துகின்றார். தனது கவித்துவ மகிமையினால் சுதந்திரமடையப் போகின்ற தனது தாய்த் திருநாட்டை தனது கற்பனைக் கண்ணிலே கண்டு

''ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று ஆடுவோமே'' என்று ஆனந்தக் கூத்தாடுகின்றார். அன்று பாரதி கண்ட கனவுகளை எல்லாம் இன்று நாம் நனவு நிலையில் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். எனவே நாம் இறுதியாக நோக்குமிடத்து இந்தப் புதுமைக்கவி, புரட்சிக்கவி, தெய்வீகக்கவி பாரத நாட்டிலே காணப்பட்ட சமுதாய விடுதலை, பெண்கள் விடுதலை, சாதி விடுதலை, பொருளாதார விடுதலை, அறவியல் விடுதலை, நாட்டு விடுதலை போன்ற பல்வேறு விடுதலையோடு போராடி வெற்றி வாகை சூடிய வீரச் செம்மல் உண்மையிலேயே ஓர் விடுதலைப் போராளி என்பதை உலகம் என்றுமே மறக்காது. இன்று இச் செயல் வீரன் பாரதி நம்மத்தியில் இல்லாவிட்டாலும் அவர் விட்டுச் சென்ற வழி என்றும் நம்மை நல்வழிக்கு இட்டுச் செல்லும் என்பதில் வியப்பில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துகிறோம்

செல்லையா சிவபாதலிங்கம்
வைரக்கல் நகை வியாபாரம்
220 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23794

With Best Compliments

*from*

**GEETHA**
**JEWEL HOUSE**
GOLD & JEWEL MERCHANTS
**NO. 12, MODERN MARKET,**
**MAIN STREET,**
**CHAVAKACHCHERI.**
T. Phone : **258.**

**With Best Compliments**

**from**

EDD (FINANCE) Ltd.

நிலையான வைப்புகளுக்கு 30 வீதம் வரை
வட்டி வழங்கும் ஒரே நிதி நிறுவனம்

Branch:
111, Kandy Road,
**VAVUNIYA.**

Head Office:
182 - 1/1 Stanley Road
**JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

**DILKA**
**FURNITURE PALACE**

- Long Life
- Beautiful Designs
- Variety of Choice
- Free Delivery Within 3 Miles Radius

234, 236 K. K. S. ROAD,
JAFFNA.
T. P. **24186.**

*With the Best Compliments*

*from*

**MASTER**
**INSTITUTES**
*B. M. C. Lane,* JAFFNA.

*With best compliments*

*from*

**KARUMARIE MOTORS**
IMPORTERS & DISTRIBUTORS

கருமாரி மோட்டோர்ஸ்

ஸ்கூட்டர், லான்ட்மாஸ்ரர், ரக்ரர், கார், லொறி உதிரிப்பாகங்கள்
இறக்குமதியாளர் - விநியோகஸ்தர்கள்

Thenmyilai,
TELLIPPALAI.

Telegrams:
"Karumarie"
TELLIPPLAI.

Branch:
255. Stanley Road,
JAFFNA.
Phone: **23183**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நல்லாசிகள்

ஸ்ரார்

✲ ரேணிங் ✲ சேவ்விங் ✲ மில்லிங்
✲ வெல்டிங் ✲ சுரோட்டிங்
✲ பிளாஸ்ரிக் வெல்டிங்

சகல வேலைகளுக்கும்

ஸ்ரார்
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23335

WITH BEST COMPLIMENTS

from

THIRUMAGAL STORES

Dealers in Quality Textiles & Fancy Goods
Main Road,
TELLIPPALAI.

எமது நல்வாழ்த்துக்கள்

ஹரன் ஜுவல்லர்ஸ்
நகைகள் வைர வியாபாரிகள்
R. G. பில்டிங்
50, கன்னதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

போன் 22444
தந்தி: "இரத்தினம்ஸ்"

WITH THE BEST COMPLIMENTS

from

SOTHY & BROTHERS

Wholesale & Retail Dealers in Textiles
MAIN ROAD,
TELLIPPALAI.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

**STANLEY**
**FURNISHING PALACE**

Dealers In All Kinds Of
Modern Furniture

5 & 7, STANLEY ROAD,
**JAFFNA.**
T. P. **23768**

WITH BEST COMPLIMENTS

from

**THASAN STUDIO**

Black and White and Colour Photo

K. K. S. ROAD,
**TELLIPPALAI.**

**With the Best Compliments from**

# MURUGAN AUTO HOUSE

## முருகன் ஓட்டோ ஹவுஸ்

★ ஸ்ரீ லங்கா அரச வர்த்தக (டிராக்டர்) கூட்டுத்தாபனத்தின் இரு சில்லு உழவு யந்திர உதிரிப்பாக அங்கீகரிக்கப்பட்ட ஏக விற்பனையாளர்கள்.

★ மின் இணைப்பு உபகரண விற்பனையாளருப், மின்சார ஒப்பந்தக் காரர்களும்

★ திருமண வைபவங்கள் மற்றும் விழா நிகழ்ச்சிகளை வீடியோ மூலம் படப்பதிவு செய்து கொடுக்கப்படும்.

K. K. S. Road,
TELLIPPALAI.

காங்கேசன்துறை வீதி,
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கமம்

கொடி யது கொம்பில் படருதல் போலே
கொழுநன் தோளில் முகமதி பதிய.
மடி யுடை நழுவிப் பாதம் பணிய,
மருகிய சிற்றிடை அவன்கைக் கொள்ள,
முடி யுடை அணிந்தவள் நாணிக் குனிய,
முக்காடை மண வாளன் விலக்க,
விடி வினை நோக்கும் வானம் போன்று
விழிகள் அவனது வதனம் பார்க்க,
இடி விழக் கேட்ட நாகம் எனவே
வியல்பாம் நாற்குணம் பறந்தே ஓட
வெடி யென வெட்கை அவளுடல் பரவ,
வலிக்கும் மார்பவன் நெஞ்சில் நொறுங்க,
வடி வுடல் அச்சில் அவனது தேகம்,
வார்ப்பாய் உருகி ஒட்டிக் கொள்ள,
துடி யிடை துள்ளித் துவண்டு கொள்ளத்,
தணலென விரகம் சுட்டுத் தள்ள,
படி வதை விரும்பும் பெண்மை உள்ளம்
பதியவன் தீக்கரம் பணிந்தது தன்னே!

ஆ. இராமநாதன்
*2ம் வருடம், மருத்துவ பீடம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயமலர்

விழிகளின் முன்னே நீ
நின்றுடும் போதெல்லாம்
என் இதயத்தில் ஊற்றெடுக்கும்
எண்ணங்கள்,
இதழ் மூலம் வெளிவரத்தான்
துடிக்கின்றன.

இதயத்தின் ஏக்கத்தை
இயம்புதற்கு மொழி இன்றேல்
மௌனத்தின் மீதன்றோ
மயக்கத்தின் வழி பிறக்கும்.

உன் இதயமெனும் மலர்தனிலே
வண்டென நானமர
நாளொன்று வருமென்று
நான் எண்ணும் நாழிகைகள்
கோடி கோடி.

என் நெஞ்சமதில் நிதம்மலரும்
மென்மலரே,
உன் மஞ்சமதில் நான் துயிலும்
நாள் வருமா?

எம். எஸ். மொஹமட் ஜமீல்
சட்டபீடம்
இரண்டாம் வருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேள்வித் தீ

விண்ணை முட்டும் வரை
நீங்கள் மூட்டிய தீ - எங்கள்
வேள்வித் தீயின் முன் வெறுந் தீதான்
எண்ணங்களால் நாங்கள் வளர்த்துவிட்ட
யாகத் தீயிது - இதில்......

நீங்கள்தான் அசுரர்கள்
நாங்கள்தான் தேவர்கள்.
நேர்மைதான் விறகு
நீதிதான் நெய்.

வரலாறு சிலகாலம் வரண்டு விட்ட போது
சரித்திரம் சிலகாலம் சரிந்து விட்ட போது
சந்தர்ப்பம் பார்த்து நீங்கள்
தீ மூட்டினீர்கள் - என்றாலும்

கண்ணகி கழற்றிவிட்ட காற்சிலம்புகளும்
பாஞ்சாலி முடித்துவிட்ட பறட்டைக் கூந்தலும்
காலவேள்வியின் கற்றூண்களாகவே
காலந் தோறும் இருந்திருக்கின்றன.

கறைபடிந்த உங்கள் கரங்களைக்
கழுவிக் கொள்ளுங்கள்
சேறு பூசிய உங்கள் மேனியைத்
துடைத்துக் கொள்ளுங்கள்.

எங்கள் சாம்ராஜ்யம் - இன்னும்
வெகுதூரத்தில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறப்பது நன்றன்று.......

★ மலர் சிறப்புற தங்கள் ஆசியை வழங்கிய உபவேந்தர், காப்பாளர் பெரும் பொருளாளர் ஆகியோர்க்கும்,

★ மலரை வெளியிடப் பெரும் நிதி நெருக்கடியில் வாடிய எமக்கு விளம்பரம் மூலம் பெரும் பொருள் தந்துதவிய பெரியோர்க்கும்,

★ விளம்பரங்களை சேகரிப்பதில் தங்கள் பொன்னுன நேரத்தைச் செலவிட்ட நண்பர்கட்கும்,

★ நாம் நடத்திய சிறுகதைப் போட்டிக்குத் தங்கள் ஆக்கங்களைப் பெருமனதுடன் அனுப்பிய சிறுகதை எழுத்தாளர்கட்கும்,

★ சிறுகதைப் போட்டிக்கு நடுவர்களாக இருந்து சிறிய பெரும் பணியைச் சிறப்பாகச் செய்துதவிய விரிவுரையாளர்கள் திரு. N. செல்வக்குமரன் திரு. V. T. தமிழ்மாறன், திரு. K. ஞானேஸ்வரன் ஆகியோர்க்கும்,

★ இளந்தென்றலுக்குச் சுகந்தம் அளித்த தங்கள் ஆக்கங்களைத் தந்துதவிய விரிவுரையாளர்கள், மாணவ நண்பர்க்கும்,

★ மலர் வெளியீட்டில் இலைமறைகாய்களாக இருந்து உதவிய நண்பர்கட்கும்,

★ மலரைக் கவர்ச்சியாகவும், தெளிவாகவும் அச்சிட்டுக் குறிப்பிட்ட காலத்தில் வெளியிட உதவிய குரும்பசிட்டி அம்பிகா அச்சக உரிமையாளர்கள், மற்றும் ஊழியர்கட்கும்,

★ பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும்

## எமது மனமார்ந்த நன்றிகள்

இதழாசிரியர்கள்

---

## எமது விளம்பரதாரர்களை ஆதரியுங்கள்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**With Best Compliments**

**From**

# MEHALAR CLEARING AGENCY

*Clearing, Transporting & Customs*
*House Agents*

Appropriate Te... Services
121, POINT ... ROAD
NALLUR, ...NA
No.

*Phone* : **29372**

## HENDRICK BUILDING

**50 - 3/1 N. H. M. ABDUL CADER ROAD**
*(RECLAMATION ROAD)*
**COLOMBO 11.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோம் பிரண்ஸ் லிமிட்.

ஓர் நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம்
பொது மக்களுக்கு அரிய பல
சேவைகளைச் செய்கின்றது.

விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

கிளை ஸ்தாபனம்:

ஹோம் பிரண்ஸ் லிமிட்
82, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
போன்: 24310

தலைமையகம்:

ஹோம் பிரண்ஸ் லிமிட்
463, காலி வீதி,
கொழும்பு 3.
போன்: 589190

# NATIONAL

**KARUNA INSTITUTE**
K. K. S. ROAD, CHUNNAKAM.

**SRIVASA INSTITUTE**
K. K. S. ROAD, CHUNNAKAM.

6, 7, 8, 9, G. C. E. O/L A/L

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான
வகுப்புக்களை, யாழ். முன்னணிப்
பட்டதாரி ஆசிரியர்களும் ஒன்றிணைந்து
கற்பிக்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

உண்மையே வெல்லும் இயக்கம்
பருத்தித்துறை

சகலவிதமான படங்களுக்கும்
குகன் ஸ்ருடியோ முன்னணியில்
நிற்பதை ஒரு முறை விஜயம் செய்து
உண்மையை அறியுங்கள்

★ ★ ★

விஞ்ஞான முறைப்படி புதிதாக
வரவழைத்த யந்திரம்
தன்னியக்கப்படி கலர்ப் படங்களை
உருவாக்கும் என்பதை மகிழ்ச்சி
யுடன் அறியத்தருகின்றோம்.

★ ★ ★

குறுகிய காலத்தில் படங்கள் செய்து
கொடுக்கப்படும்.

குகன் ஸ்ருடியோ
பருத்தித்துறை
தொலைபேசி 524

*With the Best Compliments*

FROM

NEWTONE ELECTRICALS
141, 143, Stanley Road,
JAFFNA.
Telephone 23016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA

# கேம்பிறிட்ஜ் கல்வி நிலையம்

ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

## A/L 84, 85

**இரசாயனவியல் : MR. BAR**

தூய, பிரயோக **கணிதம்**

திரு. கமலசிங்கம்

**தாவரவியல் :**

திரு. சர்வானந்தா

**பௌதீகவியல் :**

திரு. பத்மநாதன்
திரு. கலாபரன்

**விலங்கியல் :**

திரு. தங்கராஜா
திரு. நரேந்திரன்

## Cambridge Tutorial College

44, STANLEY ROAD,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

# SAMACON LIMITED

ENGINEERS & CONSTRUCTORS

**SPECIALISED IN**

| | | |
|---|---|---|
| BUILDINGS | ERECTION OF | AIR CONDITIONING |
| BRIDGES | MECHANICAL | STEEL FABRICATION |
| SEWERAGE | ELECTRICAL | ROAD WORKS |
| WATER SUPPLY | EQUIPMENTS | EARTH MOVING |

**SAMACON LTD.**

NO. 43, NELSON PLACE,

**COLOMBO - 6.**

Telephone : **83774.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best Compliments

from

# AMBIKA PRINTERS

PRINTERS, PUBLISHERS
&
BOOK SELLERS

# AMBIKA PRINTERS

KURUMPASIDDY, TELLIPPALAI.

# அம்பிகா அச்சகம்

குரும்பசிட்டி, தெல்லிப்பழை.


அம்பிகா அச்சகம், குரும்பசிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org